திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

34
GAZETTEER UNIT
405/
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

மாலை 2] விகாரி ஐப்பசி [மணி 2

நவம்பர் 1959

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப்

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகத்தின்

புதுக் கட்டிடம்

2—11—59-ல் அரசாங்க அறநிலையத்துறை ஆட்சி அலுவலகம் சென்னை நுங்கம் பாக்கம் ஹைரோடில் (வனபார்த்தி மாளிகைக்கு அடுத்து) அதற்கென்றே கட்டப்பெற்ற புதுக் கட்டிடத்துக்குச் சென்றது. அறநிலைய அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள்.

இந்து அறநிலைய ஆட்சிக் குழு 15—4—1925-ல் முதல்முதல் அமைக்கப்பெற்றது. அதன் அலுவலகம் கீழ்க்காணும் வாடகைக் கட்டிடங்களில் இருந்து வந்தது:—

1.	சட்டர் கார்டன்ஸ், கதீட்ரல்	15—4—1925—பிப்ரவரி 1926
2.	பாகீரதி விலாஸ், லாயிட்ஸ் ரோட்	மார்ச் 1926—செப் 1931
3.	கோபால் பாக், மவுண்ட்ரோட்	அக்டோ 1931—ஜன 1939
4.	ஹர்மிடேஜ், டிசில்வாரோட், மயிலை	பிப்ர 1939—செப் 1940
5.	வனபார்த்தி மாளிகை, நுங்கம்பாக்கம்	அக்டோ 1940—மார் 1952
6.	பஸாட்டோ கட்டிடம், மவுண்ட்ரோட்	ஏப்ரல் 1952—ஜன 1953
7.	60, கோபதி நாராயணசாமி செட்டிரோட் தியாகராயநகர்	பிப்ர—1953—செப் 1953

பின்னர், 1953 அக்டோபர் முதல் 1959 அக்டோபர் வரை அரசாங்க அச்சகப் பழைய கட்டிடத்தில் இருந்தது. 30—9—1951 வரையில் இந்த அறநிலையத் துறையை ஒரு குழுவினர் கண்காணித்து வந்தனர். அன்றிருந்து இது ஒரு தனி அரசாங்கத் துறையாக ஆக்கப்பட்டு ஒரு ஆணையாளருடைய மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

பொருளடக்கம்

1. கதிர்காமத்தைப் பற்றிய ஒரு புராணம்
2. சைவம்
3. வைஷ்ணவம்
4. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. பவானி
6. இயற்பகை நாயனர்
7. சென்னிமலை
8. காரைமடை
9. வாமனாவதாரம்
10. பன்னிரு திருமுறைப் பயிற்சி
11. திருவோணம்

(முகப்புப் படம்-நாமக்கல் இலட்சுமிநரசிம்மர் கோயிலிலுள்ள ஸ்ரீ வைகுண்ட நாராயணப் பெருமாள் திருவுருவம்.)

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோட், சென்னை-6.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி ஐப்பசி 1959 நவம்பர் [மணி 2

GAZETTEER UNIT MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS 17 JUN 1965

கதிர்காமத்தைப் பற்றிய ஒரு புராணம்

ஸ்ரீலங்காவிலுள்ள இந்து க்ஷேத்திரங்களுக்குள் மிகச் சிறந்தவை திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்ற சிவ க்ஷேத்திரங்களும், கதிர்காமம் என விளங்கும் முருகன் திருப்பதியும் ஆகும். இவற்றுள் ஏராளமான இந்திய மக்கள் ஸ்ரீலங்கைக்குப் செல்வது கதிர்காம முருகன் ஆடிவேல் பெருந்திருவிழாவுக்குத்தான். இக்கதிர்காமத்தலம் முருகப்பெருமான் சூரபதுமனுடன் போர் செய்கையில், பாசறையாக அமைத்துக்கொண்ட இடம் என்பது புராண வரலாறு. இப்போது காணப்படும் சொரூப க்ஷேத்திரம் ஏற்பட்டதைக் குறித்து குகஸ்ரீ ரசபதியவர்கள் சில மாதங்களுக்கு முன் சென்னை ஐயனாவரம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் புராணப் பிரசங்கம் செய்தார்கள். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

வடநாட்டில் இதயாம்பரம் (தகராலயம்) என்னும் பதியில் மிருஷ்ய முனிவர் என்ற பெரியார் திலகம்மையார் என்ற கற்புடைய மங்கையுடன் தவவாழ்க்கை வாழ்ந்து வந்தார். தனக்கு ஒரு புத்திரன் வேண்டும் என்ற வேட்கையுடன் பொதிகை மலைக்குச் சென்று அகத்திய முனிவரிடம் வேண்டினார். அம்மாமுனிவரும் "உனக்கு ஒரு மகன் தோன்றுவான். ஆனால் அவன் கருவிலேயே திருவுடையவனாய் முருகப்பெருமான் திருவடியை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வான். அவனுக்குப்பின் சந்ததிக்கு வழியிராது" என்று சொல்லியனுப்பினார். அவ்வாறே திலகம்மையார் கருவுற்று ஒரு மார்கழித் திங்கள் வைகறையில் தன் வீட்டுமுன் பஜனைத் திருக்கூட்டம் இறைவன் நாமங்களைத் துதித்துக் கொண்டு வந்த சமயம் ஆண் மகவை ஈன்றார். இளஞ்சூரியன் போன்ற தேசுடன், கலியாண சுந்தரப் பொலிவுடன் தோன்றிய அக்குழந்தைக்குக் கலியாண முனிவர் என்ற பெயர் இட்டனர். நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த அத் தெய்வக் குழந்தை தன் தந்தையாரிடமே எல்லாக் கலைகளையும் கற்று வந்த போதிலும் கந்தபுராணத்திலும் அதிலும் சிறப்பாக வள்ளியம்மைத் திருமணப் படலத்திலும் அதிக பற்றுக் கொண்டு அதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்ததைக் கண்டு எல்லாம் முருகன் அருள் என்று பெற்றோரும் மற்றோரும் அவர்

போக்கிலேயே விட்டுவிட்டனர். மணப்பருவம் எய்தியதும் அவருடைய பெற்றோர்கள் அவரை நோக்கி 'இல்லறமல்லது நல்லறமன்று; தக்கதோர் பெண்ணை மணந்து இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழ்ந்து இம்மை மறுமைப் பயனை எய்துவதே கடன்' என்று கூறி அவருக்கு மணம் செய்விக்க ஏற்பாடுகள் செய்ய முற்பட்டனர். கலியாண முனிவர் மனம் முருகன் திருவடியையே சிந்தித்துக்கொண்டும், வள்ளியம்மைத் திருமணம் உண்மையிலேயே சிவ ஜீவசம்பந்தத்தையே வலியுறுத்துவதால் முருகன் திருவடியடைதலே தனது உண்மையான திருமணம் என்றும் சொல்லி வீட்டைவிட்டு வெளியேறி தனியிடங்களில் அமர்ந்து முருகனையே எண்ணித் தவமிருந்தார். தன் தவ பலத்தால் யோக சித்திகள் பெற்று முருகன் திருக்கோலத்தைப் பன்முறை கண்டார். அவனது திருவடிகளைப் பற்றவேண்டுமென்று அவன் அருட்கோலங் கண்டபோதெல்லாம் அவன் திருவடிகளில் வீழ்ந்து பற்ற முயன்றார். ஆனால் அவ்வாறு பற்ற முடியாமல் அவனைப் பல அருட்கோலங்களில் பல தடவைகள் கண்டு மயங்கினார். பிறகு இறைவன் அருளால் பொதிகை மாமுனிவன் துணைகொண்டு தான் முருகன் திருவடியை அடைய வேண்டுமென்று கருதிப் பொதிகைக்குச் சென்று அகத்திய முனிவர் திருமுன்பு தவங்கிடந்தார். பொதிகை முனிவர் அவர் தவத்திற்கு மெச்சி அவருடைய விருப்பம் யாதெனக் கேட்டார். முருகன் தனக்குப் பலமுறை காட்சியளித்தும் திருவடி தீட்சை தரவில்லையென்று முறையிட்டார். அப்போது அகத்தியமுனிவர் கலியாணரை நோக்கி "அம்பலவாணருக்கு எவ்வாறு தில்லைச் சிற்றம்பலம் பஞ்சாட்சர சொரூப க்ஷேத்திரமாக விளங்குகின்றதோ அதுபோலக் கதிர்காமம் முருகனுக்கு ஏகாட்சர (ஓம்) சடாட்சர (சரவணபவ) க்ஷேத்திரமாக விளங்குகிறது. அங்கு சென்று மாணிக்ககங்கை நதிக்கரையில் முருகனுடைய திருவுருவத்தைத் தியானம் செய்தால் உன் விருப்பம் கைகூடும்" என்று திருவாய் மலர்ந்தருளி அவர் அங்கு செல்வதற்கு உதவியாக ஒரு கமன குளிகையையும், அவருடைய தியானத்திற்கு உதவியாக சடாட்சரச் சக்கரம் ஒன்றைக் கூடையில் வைத்தும் அளித்தார். அந்த கமன குளிகையை வாயில் போட்டுக்கொண்டு கதிர்காமத்தை நினைத்த மாத்திரத்தில் வேகம் பெரிதும் கொடுக்கும் குளிகையின் பயனாய் ஏழுமலைகளுக்கு நடுவேயுள்ள கதிர்காம எல்லையில் மாணிக்க கங்கை நதிக்கரையைச் சேர்ந்தார். அக்கரையில் உட்கார்ந்து கொண்டு தம்முடைய மடியில் சக்கரம் அமைந்த கூடையை வைத்துக் கொண்டு தியானத்தில் அமர்ந்தார். ஆடாமல் அசையாமல் காற்றே புசித்து மௌன நிலையில் 'ஓம் குமாராய நம: ஓம் முருகாய நம: ஓம் சரவணபவாய நம: ஓம் குகேசாய நம: முதலிய முருகன் திருநாமங்களை உருவேற்றிக் கொண்டு கடுந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தைக் கலைப்பதற்குப் பல இடையூறுகள் நேர்ந்த போதிலும் அவை ஒன்றையும் பொருட்படுத்தாது இமையா நாட்டத்தோடு முருகன் திருவடியையே நினைந்து பெருந்தவம் இயற்றினார். நெடுங்காலம் சென்றபின் அவர் முன்பு பச்சை உடையுடுத்தி பச்சைவண்ண மேனியுடன் ஒரு வேடப் பெண் தோன்றி, "சுவாமி! தாங்கள் நெடுங்காலம் இப்படியே இருக்கிறீர்களே! தங்கள் மேனியெல்லாம் பறவைகள் எச்சமும் புழுதியும் படிந்திருக்கின்றன. தாங்கள் இப்புனித கங்கையில் நீராடி நான் கொணர்ந்திருக்கும் காய்கனிகளையாவது புசித்தருள வேண்டும்" என்று மிகப்பணிவுடன் வேண்டினாள். முருகன் திருவருளால் இவருக்கும் தவம் நிறைவுற்று வயிற்றுப்பசியும் அருட்பசியும் உண்டாகித் தன்னிடம் இருந்த கூடையை அவ்வம்மையாரிடம் கொடுத்து அதனைக் கீழே வைக்காமல் கையிலேயே வைத்திருக்கும்படி கூறி நீராடச் சென்றார்.

அவ்வம்மையார் கூடையை எடுத்ததும் வான்முகடு அதிர்ந்தது. அவ்வம்மையார் கூடையுடன் ஓடத் தொடங்கினார். நீராடிக் கொண்டிருந்த கலியாண முனிவர் அதைக் கண்டு அஞ்சிக் கரையேறி அவ்வம்மையா ரைத் தொடர்ந்து பின்சென்றார். அவ்வம் மையார் ஓடோடியும் சென்று அங்குள்ள ஒரு குடிசைக்குள் நுழைந்து விட்டார். கலியாண முனிவரும் ஓடித் தானும் அக் குடிசை வாயிலை அணுகினார். அதற்குள் ளாக அப்பச்சைவண்ண மங்கை வெளியே வந்து வாயிலின் வலதுபுறம் நின்று கொண் டார். இடது புறம் பொன்னிற ஆடையுட னும் சிவந்த மேனியுடனும் இன்னொரு மங்கை நின்றுகொண்டு இருவரும் இவரை உள்ளே செல்லவிடாமல் தடுத்தார்கள். தன் செப்புத்தகட்டிலுள்ள சக்கரத்தையும் கூடையையும் கொடுத்து விடும்படி மன்றாடிக் கெஞ்சிக் கதறினார். அவ்வேளையில்தன் கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னி ரண்டும் கொண்டு திருமுருகன் வள்ளி தெய்வ யானை சமேதராய்க் காட்சியளித்தார். கலியா ணரும் மெய்ம்மறந்து முருகன் திருவடிகளில் வீழ்ந்து இருதிருவடிகளையும் சிக்கெனப் பிடித்துக்கொண்டார். நெடுநேரம் மெய்ம் மறந்து கிடந்த முனிவரை முன்பு முருகன் பாசறையாக இருந்த அந்த குடிசைக் கோயிலில் பூசை செய்யும் பூசாரிகள் எடுத்து அவரை மயக்கம் தெளிவித்தார்கள். அப்போது அசரீரியாக, "உன் குறிக்கோள் நிறைவேறி விட்டதல்லவா? நீ என் திரு வடியில் நிரந்தரமாகச் சேரு முன் செய்ய வேண்டிய கடமை ஒன்றுண்டு. இக்கதிர் காமக்ஷேத்திரத்தின் மகிமையை ஸ்ரீலங்கை வாசிகளும் இந்தியாவில் தென்னாட்டவரும் தான் நன்கறிவார்கள். வடநாட்டினரும் இம்மகா க்ஷேத்திர மகிமையை உணரும் படி அங்குச் சென்று இதன் மகத்து வத்தை பரவச்செய்ய வேண்டும்", என்று முருகன் ஆணை கிடைத்தது. அவ்வாறே கலியாண முனிவர் அகத்திய முனிவர் கொடுத்த கமன குளிகையின் உதவி கொண்டு தம் நாடு சென்று கதிர்காம மகாத்மியத்தை எங்கும் பரவச்செய்து மீண் டும் கதிர்காமம் திரும்பி வந்து முருகன் திருவடி நீழலையடைந்தார்.

என்னை யென்கதி யென்ற மும்முனி
யின்புறக்கதிர் காமனெம்
அன்னை மாரிரு பாங்கி னுற்றிட
வேல்வலத்தொடு மயிலினின்
மன்ன வுற்றிட மாமகிழ்ச்சியிற்
றழுவினான் மலரடியினை
யன்ன வத்தனி னருளி னாற்பெருஞ்
சித்த னாயின னம்முனி.

எங்கு முற்றனன் விண்ணின் மாநெறி
யின்ன வன்றனை யின்றவர்
தங்கு கேத்திர முற்ற னோர்களைத்
தட்பராக்கினன் றவமதான்
வங்கு பற்றுறு வல்லு டும்பென
வாகை சார்கதிர் காமனின்
பொங்கு மின்பருள் பொழியு மலரடி
நிழலி னிற்புகுந்தானரோ.

—கதிர்காம புராண சாரம்

சென்னை கோடம்பாக்கம், ஸ்ரீவசபழநி ஆண்டவர் கோயிலில் மகா கந்தர்சஷ்டி மகோற்சவங்கள் 30-10-59-ல் தொடங்கி 10-11-59 வரை சிறப்பாக நடைபெறும்.

நாகை, வெளிப்பாளையம், ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் உடன்கூடிய ஸ்ரீ அகத்தீசுவர சுவாமி ஆலயத்தில் 17-8-59-ல் தொடங்கி 21-8-59-ல் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

உயிர் இயல்பு

காணப்படும் உலகப் பொருள்களை இரண்டு கூறுகப் பகுத்து உணரலாம். ஒன்று அறிவுடைப் பொருள், மற்றொன்று அறிவில் பொருள். இவற்றுள் அறிவுடைப்பொருள் என்பது தன் முயற்சி உள்ளதாய், உடம்போடு கூடிப் புலப்படுவதாய் உள்ளது. உடம்புகள் எண்ணில. இத்தகைய உடம்புகள் தோறும் வேறு வேருய், யான் என்னும் உணர்வு வடிவில் நிகழ்வதே (self-consciousness) உயிர் எனப்படுவது.

காணப்படும் உலகம் இயற்கை முற்றுணர்வு உள்ள முதல்வனல் படைக்கப்பட்டு நடைபெறுவதென்பது மெய்யுணர்ந்தோர் துணிபு. ஆதலால் உலகம் பயன்படுவதாக இருத்தல்வேண்டும். உலகில் உள்ள அறிவில் பொருள்கள் பயன்படுவனவேயன்றிப் பயன்கொள்வன அல்ல. முதல்வனும் வரம்பில் இன்பம் உடையவன், வேண்டுதல் வேண்டாமை இலாதான். ஆதலால் அவன் உலகப் பொருள்களால் பயன் அடைவான் என்றலும் பொருந்தாது. எனவே, உலகப் பொருள்களால் பயன்கொள்வது உயிரே என்பதும், அஃது உலகப்பொருள்களுக்கும் வேருய், முதல்வனுக்கும் வேருய் உள்ளது என்பதும் விளங்கும். உடம்புகள் எண்ணில் அடங்காதன ஆதலால், உயிர்களும் எண்ணில் அடங்காதனவே ஆகும். "வையத்து-இறந்தாரை எண்ணிக்கொண்டற்று" என்னும் திருவள்ளுவர் கருத்தும் சிந்திக்கத்தக்கது.

உயிர்கள் முதல்வனைப்போல அநாதியாக (ஒரு காலத்தில் தோன்றியவை எனப்படாமல் காலத்தைக் கடந்து) உள்ள பொருள்களே ஆகும். அவை முதல்வனல் உண்டாக்கப்பட்டன என்றோ, பெருநெருப்பிலிருந்து வெளிவரும் நெருப்புப் பொறிகள் போல முதல்வனிடத்திலிருந்து வெளிப்பட்டவை என்றோ, கயிற்றில் தோன்றி மறையும் அரவைப்போல முதல்வன் மாட்டு மயக்க உணர்வால் வேறுபட ஏற்றி உணரப்படுபவை என்றோ கொள்ளப்படாதன.

"போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்", "போற்றி எல்லாஉயிர்க்கும் ஈறும் இணையடிகள்" என்றுற்போலும் அனுபவ வாக்குகளில் உயிர்களுக்குத் தோற்ற ஒடுக்கங்கள் கூறப்படுகின்றனவே என்ருல், அவை உயிர்கள் உடம்பைப் பெற்றுப் பிறவிக்கு வருவதைத் தோற்றம் எனவும், அவ்வுடம்பினின்றும் நீங்குதலை ஈறு எனவும் குறிப்பனவே ஆம். முன் இல்லாத உயிர்கள் பின் தோன்றின எனவும்,தோன்றி நின்ற உயிர்கள் அழியும் எனவும் கூறுவன அல்ல என உணர்தல் வேண்டும்.

இனி முதல்வனுக்கும் உயிர்க்கும் உள்ள வேறுபாடு உணரத்தக்கது. முதல்வன் ஒருவன், உயிர்கள் பல. முதல்வன் தானே எல்லாம் அறிந்து அறிவிக்கும் இயற்கை முற்றுணர்வு உடையவன், உயிர்கள் உணர்த்த உணர்வன; ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு பொருளையே சுட்டி அறிவன. அறியும்போது, மெய் வாய் கண் மூக்குச் செவி மனம்போன்ற கருவிகளின் உதவியால் பொருள்களின் ஒவ்வோரியல்பையே சுட்டி அறியும். மேலும் முதல்வன் எல்லாப் பொருள்களையும் ஒருங்கே தனித்து நின்று அறிவன்; அதாவது, அறியப்படு பொருள்களில் அழுந்தித் தொடக்குறுவதில்லை. ஆனல் உயிர்கள் பொருள்களைச் சார்ந்து அவற்றின் வண்ணமாய் நின்றே அறியும். நீர் தான்சார்ந்தநிலத்

தின் நிறத்தையும் சுவையையும் பற்றி அவற்றையே தன் இயல்பாகக்கொண்டு புலப்படும். அதுபோல உயிர்களும் தாம் சார்ந்த பரசரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம், அவ்வப்போது தம் அறிவிற் பதியும் பொருள்கள் என்னும் இவற்றின் இயல்பைப்பற்றி, அது அதுவே தானாக நின்று, வேறு வேறு அவத்தைகளை (உறக்கம், கனவு, நனவு) உறுதலும், இன்பத் துன்ப மயக்கம் என்னும் வேதனை உறுதலும் செய்யும் * இக்காரணத்தான் முதல்வன் பற்றற்றான் எனப்படுவன். உயிர்கள் பற்றுறுவன ஆகும்.

சுருங்கக்கூறின், இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்றல் முதல்வனுக்கு இலக்கணம்; இயல்பாகவே பாசங்களிற் கட்டுண்டு நிற்றல் உயிர்களுக்கு இலக்கணம். ஆதலினால், முதல்வன் அநாதி தலைவன் ஆவன், உயிர்கள் அநாதியே அவனுக்கு அடிமை ஆகும். **"மீளா அடிமை உனக்கே"** என்னும் நம்பி ஆரூரர் திருவாக்கும், **"என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ?"** என்னும் தாயுமானவர் வாய்மொழியும் கருதத்தக்கன.

எல்லா உயிர்களும் அறியாமையை உடையவாதலும், அவ்வறியாமை சிறிது சிறிதாக உயிர்கள் எல்லாவற்றுக்கும் நீங்கி வருதலும் கண்கூடு. அறியாமை உயிர்களுக்கு இயற்கை அன்று. அது ஆணவம் என்னும் இயற்கை மலத்தால் உயிர்களுக்கு உள்ள செயற்கை ஆகும். உடம்போடு கூடி உலகத்தில் வாழ்ந்துவரும் பிறப்பு நிலையில் உடம்பும் உலகும் அவ்வறியாமையை நீக்கி அறிவை வளர்த்து வருவனவாக உள்ளன. இவ்வாறு அறியாமையினையும், முறையே வளர்ந்துவரும் சிற்றறிவு சிறுதொழில் என்பவற்றையும் உடையவையாய், **யான் எனது** என்னும் செருக்கோடு கூடி வினைகளைச் செய்து அவற்றின் பயன்களை முதல்வன் ஆணையாற்றால் பெற்று நுகர்ந்து பிறப்பு இறப்பு என்பவற்றைத் தொடர்ச்சியாகப் பெற்று வருவனவே உயிர்களாம்.

உயிர்கள் வினைக்கு ஈடாக எடுக்கும் பிறப்புக்கள் நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்துநான்கு நூறுயிர யோனி பேதத்தையும் உடையவை ஆகும்.

நால்வகைத் தோற்றமாவன அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவையாம். அண்டசம் முட்டையிற்றோன்றுதல்; சுவேதசம்—வேர்வையிற்றோன்றுதல்; உற்பிச்சம்-வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுதல்; சராயுசம்-கருப்பையில் தோன்றுதல்.

எழுவகைப் பிறப்புக்களாவன தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவை. இவற்றில் முன்னின்ற ஆறும் இயங்கியற் பொருள்கள் எனவும் **சங்கமம்** எனவும் **சரம்** எனவும் குறிக்கப்படும். தாவரம் என்பது **சரம்** எனவும் **நிலையியற்பொருள்** எனவும் குறிக்கப்படும்.

தேவர்க்குப் பதினொரு நூறுயிரம், மக்கட்கு ஒன்பது நூறுயிரம், விலங்குகட்குப் பத்து நூறுயிரம், பறவைகட்குப் பத்துநூறுயிரம், ஊர்வனவற்றுக்குப் பதினைந்து நூறுயிரம், நீர் வாழ்வனவற்றுக்குப் பத்து நூறுயிரம், தாவரங்களுக்குப் பத்தொன்பது நூறுயிரம் என மொத்தம் எண்பத்துநான்கு நூறுயிரம் கரு வேறுபாடு (யோனி பேதம்) கூறப்படுகின்றது.

உயிர்கள் இருவினைகளைச் செய்தற்கும், அவற்றின் பயன்களைக் கலந்து நுகர்தற்கும் இடம் நாம் வாழும் இந்நிலவுலகமே ஆகும். நல்வினையை மிகுதியும் செய்த உயிர்கள் அதன் பயனாகிய மிகுந்த இன்பத்தை நுகர்தற்குச் சுவர்க்கம் முதலிய ஒளி உலகங்கள் உள்ளன. தீவினையை மிகுதியும் செய்த உயிர்கள் அதன் பயனாகிய மிகுந்த துன்பத்தை நுகர்தற்கு நரகு எனப்படும் இருள் உலகங்கள் உள்ளன.

நிலவுலகிற் பிறந்த உயிர்கள் இறக்கும்போது தூல உடம்பு எனப்படும் பருவுடலைத்தான் விடும். இஃது அரவு தன் மேற்றோலை உரித்து விடுதல் போல்வதாகும். ஆதலினால், தூலவுடம்பிற்குக் காரணமாக உள்ள சூக்கும உடல் எனப்படும் நுண்ணுடல் அழிவதில்லை. நல்வினை செய்த உயிர்களுக்கு நுண்ணுடலில் இருந்து பூதசார உடல் எனப்படும் ஒளி உடல் உண்டாகும். அவ்வுடலோடு

* சரீரங்களின் இயல்பும் அவத்தைகள் இயல்பும் தனியியல்பு உணர்த்தும்போது விளக்கப்படும்.

ஒளி உலகத்திற்சென்று இன்பம் நுகர்ந்து வாழ்ந்து மீளவும் நிலவுலகில் வந்து பிறக்கும். தீவினையை மிக்குச் செய்த உயிர்கள் பருவுடம்பை விட்டவுடன் நுண்ணுடலினின்றும் தோன்றும் பூதவுடம்பு எனப்படும் யாதனு உடலைப் பொருந்தி இருள் உலகிற் சென்று துன்பம் நுகர்ந்து வாழ்ந்து மீள வந்து பிறக்கும். இவ்வாறன்றி, உயிர்கள் பருவுடம்பை விட்டதும் நிலவுலகிற்றனே ஒரு கருவிற்பட்டு வேறொரு பருவுடம்பை எடுப்பதும் உண்டு.

நிலவுலகில் மறு பிறப்பு எடுக்கும் போது, முன் உடம்பு இறக்கும்போது அவ்வவ்வுயிர் செய்த வினை அவற்றின் மனக்கண் முன் எவ்வடிவைத் தோற்றுவித்ததோ அவ்வடிவத்திற்குரிய கருவில் அம்மனம் தள்ள விழுந்து அப்பிறப்பையே எடுக்கும் என்பது நியதி.

"உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

—திருக்குறள்.

"மரிக்கும் போ(து) உன்னும் வடிவினை ஆவி
பரிக்கும் நினைவு பரித்து"

—சோமவாரகற்பம்

என்பவை கருதத்தக்கவை.

எழுவகைப் பிறப்புக்களுள்ளும் மக்கட் பிறப்பே சிறந்தது. ஏனென்றால், அதுவே, நாம் நம் தலைவனுகிய முதல்வனை அறிந்து வழிபட்டு வீடுபேறெய்துதற்குச் சிறந்த கருவியாக உள்ளது.

மூவகை உயிர்கள்

உயிர்களைப் பந்தித்து நிற்கும் தளைகள் **ஆணவம், கன்மம், மாயை** என மூன்றும் என்பது முன் அடிப்படை யுண்மைகளைக் குறித்தபோது கூறப்பட்டது. அவற்றுள் ஆணவத்தால் மட்டும் கட்டுற்றுப் பிறவற்ருல் தாக்குண்ணுதவர் உளர். அவர் ஒரு **மலத்தார்** எனவும் **விஞ்ஞானகலர்** எனவும் குறிக்கப்படுவர். ஆணவம், கன்மம் என்னும் இரண்டின் வயப்பட்டு மாயையைக் கடந்தோரும் உளர். அவர் **இருமலத்தார்** அல்லது **பிரளயாகலர்** எனப்படுவர். மும்மலத்தாலும் கட்டுற்று மயங்கும் நம்மனோர் எல்லாரும் **சகலர்** எனப்படுவர். இங்ஙனம் உயிர் வருக்கத்தை மூன்று வகைப்பட வைத்துக் கூறுவது சைவ மரபு ஆகும்.

"மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உலப்பில; அனுதி உள்ளன;
தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையால்
ஓவற முறைமுறை உதித்து மாயுமே"

என்னும் கந்தபுராணச் செய்யுள் உயிரியல்பை நினைவிற் கொள்ளுதற்கு உதவியாக இருக்கும்.

தளையியல்பு

பொதுவாக **ஆணவம், கன்மம், மாயை** என்னும் மூன்றனையும் உயிர்களின் தூய்மையை மாற்றித் துன்புறுத்தும் **மாசு** எனவும், அவற்றின் அறிவு செயல்களைத் தடை செய்யும் **தளை** எனவும் கூறுவது வழக்கம். இம்மூன்றனேடு **மாயேயம், திரோதாயி** என்னும் இரண்டனையும் கூட்டித் **தளைகளை ஐந்து** என்றலும் நூல் வழக்கே ஆகும். இவற்றின் இயல்பை முறையே சுருங்க ஆராய்வாம். மாசு, மலம், அழுக்கு என்பவை ஒரு பொருளன. பாசம், பந்தம், தளை என்பவை ஒரு பொருளன.

(1) ஆணவ மலம்

ஆணவம் என்பது உயிர்களின் அறிவாற்றலை இல்லை எனும்படி மறைத்து நிற்பது. நெல்லிற்கு உமியும், செம்பிற்களிம்பும் பின் வந்து கூடின எனப்படாதபடி அப்பொருள்களுக்கு இயற்கைக் குற்றங்களாக இருத்தல் போல, ஆணவம் உயிர்களோடு அநாதியே உடன் கலந்து அவற்றின் வியாபகத்தை விளங்கவொட்டாது தடுத்து அணுத்தன்மை எய்துவிப்பது. இக்காரணம் பற்றி இது **மூலமலம், சகஜமலம்** என்னும் பெயர்களாலும் குறிக்கப்படும். சகஜம்—இயற்கை, உடன் உள்ளது.

மூலமலம் ஒன்றே. ஆயினும் அஃது உயிர்கள் தோறும் வேறு வேறுக நின்று அவற்றின் அறிவு செயலாற்றல்களைத்தடுத்து நிற்கும் எண்ணிறந்த சக்திகளை உடையது. இச்சக்திகள் உருவு திரிந்து மெலிவு அடைதற் பொருட்டு முதல்வன் இயற்கையே

ஆணவ பந்தம் உள்ள உயிர்களுக்கு மாயையின் சம்பந்தத்தை உண்டுபண்ணுகிறன். ஆணவத்தால் முழுவதும் அறிவிழந்து நின்ற உயிர்களுக்குச் சிற்றறிவும் சிறுசெயலும் விளங்குதற்பொருட்டு முதல்வன் மாயையின் சம்பந்தத்தை உண்டுபண்ணுவதுதான் உலக சிருட்டி எனப்படும். பேரொளி முன் இருந்தாலும் படலம் படர்ந்த கண் ஒளியைப் பற்ருது இருளையே பற்றும். அதுபோல உயிர் எஞ்ஞான்றும் இறைவனுடைய அருளொளியில் மூழ்கி அதில் அடங்கி நிற்பினும், ஆணவம் காரணமாக அருளொளியைப் பற்ருமல், அறியாமையாகிய இருளைப்பற்றி இருளாயே இருக்கும். இங்ஙனம் ஆணவம் உயிரை அறியாமை இருளில் உய்த்தலால், அஃது இருள், அறியாமை, அவித்தை, இருள் மலம் என்னும் பெயர்களாலும் குறிக்கப்படும்.

ஆணவத்தின் இருப்பை உணர்வது எப்படி? புற இருள் எல்லாப் பொருள்களையும் மறைத்தாலும், தன்னை மறைத்துக் கொள்வதில்லை. அதனுல் அவ்விருளை நீக்க மக்கள் வழி தேடுகிருர்கள். அக விருளாகிய ஆணவமோ பிற பொருள்களை மறைப்பதோடு தன்னையும் காட்டுவதில்லை. ஆதலால் ஆணவத்தை நீக்கிக்கொள்ள உலகத்தவர் முந்துவதில்லை என்கிருர் உமாபதிசிவனுர். ஆயினும், அன்ருடம் நம் உணர்வில் தோன்றும் வேறுபாடுகள் பற்றி மூலமலத்தின் தன்மையை ஓரளவு உணர்ந்துகொள்ளலாம்: நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகள் நமக்கு அன்ருடம் மாறி மாறி நிகழ்கின்றன. கனவு நிலையில் புறக் கருவிகளாகிய மெய் வாய் கண் மூக்குச் செவி, கை, கால் முதலியவை தொழிற்படுவதில்லை. அகக்கருவியாகிய மனம் தொழிற்படுகிறது. உறக்க நிலையில் மனமும் தொழிற்படுவதில்லை. ஆதலால், நனவைவிடக் கனவிலும், கனவைவிட உறக்கத்திலும் நாம் உணர்வு மங்கிக் கிடக்கின்ருேம். எல்லாக் கருவிகளும் தொழிற்படும் நனவு நிலையில் நம் உணர்வு நன்ருக விளங்குதலினுல் எல்லாப் பொருளையும் இது இன்னது, இது இன்னது என விளங்க அறிந்து செயல் செய்கின்ருேம். ஆயினும், "யான் யார்?" எனத் தன்னை நோக்கி நிற்றற்கு நம் அறிவு ஒருப்படுவதில்லை. இவ்வனுபவத்தில் கனவு உறக்கங்களில் நம் அறிவாற்றலை மறைப்பதும், நனவு நிலையில் தன்னை நோக்காது புறப்பொருள்களை நோக்கி ஓடுமாறு நம் அறிவைத் திருப்புவதும் மூலமலத்தின் செயல்கள் என்று சைவ நூல்கள் கூறுகின்றன.

நம் அறிவை மறைக்கும் செயல் ஆணவத்தின் ஆவாரக சத்தியால் ஆவது எனவும், நனவு நிலையில் நம் உணர்வைத் தன்னை நோக்கவிடாது புறப்பொருளில் சென்று விழச் செய்யும் செயலை அதன் அதோநியாமிகாசக்தியால் ஆவது எனவும் நூல்கள் பகுத்துக் கூறுகின்றன. ஆவாரகம்-மறைப்பு, ஆவாரக சக்தி— மறைக்கும் ஆற்றல். அதோநியாமிகா சத்தி—கீழ் வீழ்க்கும் சக்தி, அத:- கீழே. திருவள்ளுவர் மூலமலத்தை அதன் ஆவாரக சத்தி பற்றி வழங்கும்போது இருள் என்னும் பெயராலும், அதோநியாமிகா சத்தி பற்றி வழங்கும்போது மருள் என்னும் பெயராலும், இரண்டும் குறித்து வழங்கும் போது மாசு, செருக்கு என்னும் பெயர்களாலும் வழங்குகின்ருர். முக்கியமாக ஆணவம் இருள் போன்றது எனவும், உடம்பு முதலியவை விளக்குப் போன்றவை எனவும் உளங்கொள்ளல் வேண்டும்.

(2) கன்மம்

உயிர்கள் உடம்புகளோடு கூடியுள்ள போது மனமொழி மெய்களாற் செய்யும் நல்லனவும் தீயனவும் ஆய செயல்களே கன்மம் எனப்படும். இச்செயல்கள் செய்யப்பட்டு மறையும்போது, செய்வோனுடைய புத்தியில் ஒருவகைப் பழக்கத்தை உண்டுபண்ணி மறையும். அப்பழக்கமே முதல்வனது ஆணையால் அறம் எனவும், பாவம் எனவும் இருவகைப்பட்டு அப்புத்தியைப்பற்றி நிற்கும். இந்த அறம் பாவங்கள் பின் அப்புத்தி தொழிற்பட்டு ஒன்றனை நிச்சயிக்கும்போது அந்த நிச்சய ரூபத்தை மாற்றி இன்பத் துன்ப நுகர்ச்சியைப் பயக்கும்.

செயல்கள் செய்யப்படும்போது, அவை எதிர் வினை (ஆகாமியம்) எனப்படும். பின் மறைந்து செய்தோனது புத்தியில் பழக்க ரூபமாய் நுண்ணிய நிலையில் பற்றி நிற்கும் போது கிடைவினை (சஞ்சிதம்) எனப்படும். கிடைவினையில் பக்குவப்பட்ட பாகம் இன்பத் துன்ப நுகர்ச்சியைப் பயப்பதாய் வெளிப்படும் நிலையில் நுகர்வினை (பிராரப்தம்)

வைஷ்ணவம்

பரிபாடலில் சில அடிப்படைக்கொள்கைகள்

(பி. ஸ்ரீ)

சங்கத்தார் தொகுத்த எழுபது பரி பாடல்களில் திருமாலைக் குறிப்பிடுவன எட்டு என்பர். இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் பரிபாடல்கள் இருபத் திரண்டு. வேறு ஆதாரங்களிலிருந்து (பழைய உரைகள் முதலியவற்றிலிருந்து) இரண்டு முழுப்பாடல்களும் சில பாடல்களின் பகுதி களும் கிடைத்திருக்கின்றன. இப்படி நமக் குக் கிடைத்திருக்கும் பரிபாடல்களில் ஏழு பாடல்கள் திருமாலைக் குறித்துப் பிரஸ்தா பிக்கின்றன. இப்பாடல்களிலிருந்து திருமால் வழிபாடு சங்க காலத்தின் இறுதிப் பகுதி யில் முருக வழிபாடுபோல்—அதற்கு அடுத்த படியாகப் பரவி யிருந்தது என்று ஊகிக்க லாம்.

சர்ப்ப சயனக் கருத்து

சர்ப்ப சயன மூர்த்தியை அருமறைப் பொருளாகக் குறிப்பிடுகிறது முதற்பாடல். திருமாலுக்கு ஆதிசேஷன் குடையாகவும் சிங்காதனமாகவும், மரவடியாகவும், இன்பத் தெப்பமாகவும், இரத்தின தீபமாகவும், பூம் பட்டாகவும், படுக்கையாகவும் பணிபுரிகின் ருன் என்பது முதலாழ்வார் பொய்கையார் வாக்கு. இந்த ஏழு பணிகளில் படுக்கையாக வும், படம் விரித்து நிழல் செய்யும் குடை யாகவும், விளக்காகவும் உதவும் முப்பணி களைக் குறிப்பிடுகிறது இந்த முதற்பாட்டு.

ஆதிசேஷனுடைய ஆயிரம் தலைகளும் உமிழ்கின்ற தீ, மணிவிளக்காகப் பயன்படு வதுடன், கண்டவர்களுக்கு அச்சம் விளைத் துப் பொல்லாத அசுர சக்திகளிலிருந்து திரு மாலுக்குப் பாதுகாப்பாகவும் உதவுகிறது என்கிருர் பெயர் தெரியாத இந்தப்பரிபாடற் புலவர். ஆதிசேஷனைப்போல் அன்பர்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் பணிபுரிய வேண் டும் என்ற குறிப்பைப் பொய்கையாழ்வார் வாக்கில் காண்பதுபோல் இங்கும் காண லாம்.

ஸ்ரீ வைஷ்ணவ அடிப்படை

வைஷ்ணவம் என்பது தமிழ் நாட்டில் ஸ்ரீவைஷ்ணவமாகவே வளர்ந்திருக்கிறதல் லவா? அதாவது திருமாமகளோடு கூடிய திருமாலின் (அம்மை அப்பரின்) வழிபாடே வைணவ சமயமாக விரிந்திருக்கிறது. இந்த அடிப்படைக் கொள்கையைப் பரிபாடலின் முதலாவது கடவுள் வாழ்த்துப் பாட்டின் மூன்ருவது அடியிலேயே காண்கின்ரும்.

மாவுடை மலர்மார்பின்

எனப்படும். ஒருவனுடைய வாழ்க்கைச் சூழ் நிலை, ஆயுள், செல்வம், வறுமை, உயர்வு தாழ்வு, இன்பத்துன்பம் முதலியவற்றுக்குக் காரணமாய்க் கிடைவினை உள்ளது எனவும், அது பயன்படும்போது ஆதிதைவிகம், ஆத்தி யான்மிகம், ஆதிபௌதிகம் என முத்திறப் படும் எனவும் நூல்கள் கூறும். ஆதிபௌதி கம் என்பது அறிவில் பொருள் வாயிலாக வருவது; ஆத்தியான்மிகம் அறிவில் பொரு ளோடு கூடிய உயிர்கள் வாயிலாக வருவது; ஆதிதைவிகம் ஒரு வாயிலான் அன்றித் தெய் வந்தானே காரணமாக வருவது. வாழ்க்கைச் சூழ் நிலைக்குக் காரணமாக இருக்கும் கிடை வினை சனகம் எனப்படும்; ஆயுளுக்குக் காரணமாவது தாரகம் எனப்படும்; பிறவற் றுக்குக் காரணமாக உள்ளது போக்கியம் எனப்படும்,

(தொடரும்)

[மா - மகாலட்சுமி. மலர் மார்பு - மலர்ந்த மார்பு.]

என்பது இப்புலவர் வாக்கு. தன்னுடைய மலர்ந்த மார்பிலே திருமாமகள் தங்கியிருக்கப் பெற்றவன் திருமால் என்பது பொருள். இதனுல்தான் திருமால் என்ற பெயருக்கே உரியவனுகிருன்.

திருமால் எல்லையற்ற பரம்பொருள் என்பதைச் சுட்டிக்காட்டும் நீலமேனியும் இங்கே பிரஸ்தாபிக்கப்படுகிறது. நீலமலர் மேனியில் திருமகள் விரும்பித்தங்கும் மார்பை உடையவன் என்கிருர். சத்தியத்தின் மார்பில் உள்ள அழகாகிய - கருணையாகிய - திருமகளோடு சேர்த்துத்தான் 'மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருளை' வழிபட்டுப் பேறு பெற முடியும் என்பது குறிப்பு.

'செந்தாமரைக்கண்ணன்' என்று ஆழ்வார்கள் போற்றுகிருர்களே அந்தக் கருணை நிறைந்த கண்களையும் குறிப்பிடுகிருர் இந்தப் பரிபாடற் புலவர். அன்பர்களை நழுவ விடாது வசீகரிக்கும் கண்கள் அல்லவா? திருமகள் உடன் உறையும்போது கண்களில் ததும்பும் கருணை அடியவர்களைச் சிறப்பாக ஆட்கொள்ளுகிறதாம்.

திருமாலின் திருமேனியை அணி செய்யும் ஆபரணங்களைக் குறித்தும் பிரஸ்தாபிக்கிறது இப்பாடல். இறைவனது ஆபரணங்கள் பலபல என்கிருர் நம்மாழ்வார். இயற்கையில் காணும் அழகுகளுக்கு எல்லை உண்டா? இறைவனது திருமார்பை அணி செய்யும் அணிகள் விண்ணிலும் மண்ணிலும் காணப்படும் அழகுகளை யெல்லாம் நினைவூட்டுகின்றன.

அந்திவானம் சிவபெருமானை நினைவூட்டுகிறது சிவபக்தர்களுக்கு; அந்தி வானமும் பிறைச்சந்திரனும் சிவன் திருக்கோலத்தின் ஒரு நினைவுக்குறி. திருமாலின் அடியவர்க்கோ திருமால் அணிந்திருக்கும் பீதாம்பரம் என்ற பொன்னுடையை நினைவூட்டுகிறது அந்தி வானம். இந்தப் பொன்னுடையையும் இப் பரிபாடல்,

பொன்புனை உடுக்கை

என்று குறிப்பிடுகிறது. நீலமலை ஒன்றை நெருப்புச் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல் பீதாம்பரம் காணப்படுகிறதாம், திருமாலின் திருமேனியில்.

இந்தக் கடவுளின் கருடக்கொடியையும் நினைவூட்டுகிறது இப்பாட்டு. இக்கொடியை இறைவனது வெற்றிக்கொடி என்கிருர் புலவர். இத்தகைய வெற்றிக் கொடியுடன் தீமை என்ற அசுரப் பகையை ஒழிக்கும் பெருமானின் கட்டளைக்கு உலகமெல்லாம் பணிந்து நடக்கும் என்கிருர். வேதப் பொருளே இந்த உண்மையை அனைவருக்கும் எடுத்துக் காட்டுகிறது என்றும் சொல்லுகிருர்.

திருமாலைப்பற்றிய செய்திகளை மயக்கமில்லாமல் அறிந்து கொள்வது வேத முனிவர்களுக்கும் அரியதாகும் என்ற கருத்தையும் இப்பாட்டில் காண்கிருேம்.

தெருளநின் வரவு அறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே.

[தெருள - தெளிவாக. வரவு-வரலாறு. மருளறு - மயக்க மற்ற. முனைவ - முனிவர்.]

எனவே, 'எளியவர்களாகிய எங்களுக்கு உன் வரலாற்றை விளங்க எடுத்துரைப்பது மிகவும் அருமையானது' என்று பொருள் படப் பாடுகிருர்.

எனினும் ஆர்வமோ பெரிது, மிக மிகப் பெரிது என்றும் சொல்லி, திருமாலின் சிறப்புக்களை எடுத்துக் கூருமல் இருக்கவும் இயலவில்லை என்கிருர். இயன்ற அளவு திருமாலின் பெருமைகளை உரைப்பதாகவும், அவை பொருளற்ற புன்மொழிகளாக இருந்தாலும் அவற்றை இறைவன் வெறுத்து விடாமல் ஏற்றுக்கொண்டு அருள்புரிவான் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் சொல்லுகிருர். இந்தப் பாடற் பகுதி,

திருமறு மார்ப! நீ
அருளல் வேண்டும்

என்று முடிகிறது. இத்தகைய அடிப்படையில் ஆழ்வாராதியர் கட்டி நிறுத்திய திருக்கோயில் ஸ்ரீ வைஷ்ணவம் எனலாம்.

அறக்கருணையும் மறக்கருணையும்

இப்பாட்டில் காணப்படும் துதி மொழிகளிலும் பின்னுளில் தோன்றிய பக்தர்களின்

தோத்திர மொழிகளுக்குரிய விதைக் கருத்துக்களைக் காண்கிறோம். உதாரணமாக அறத்தின் காவலர்களான அருளாளர்களின் அறமாகத் திகழும் பெருமான் பேரன்பர்களின் அன்பாகவும் திகழ்கிறான் என்று கூறும் புலவர், அதே இறைவன் மறமாகவும் நடுங்கச் செய்யும் அச்சமாகவும் திகழ்கிறான் என்றும் கூறியிருப்பதைச் சற்றுக் கூர்ந்து கவனித்துப் பார்க்கலாம்.

இவர் கூறும் மறம் ('மறன்') 'தீதுதீர் கொள்கை மறன்' என்று சிறப்பிக்கப்படுகிறது. குற்றமற்ற கொள்கையுடைய மறம் என்கிறார். 'திறன் இலோர்த் திருத்திய.... மறன்' என்றும் சிறப்பித்துப் பேசுகிறார். 'திறன் இலோர்' என்றால் ஒழுக்க வன்மை இல்லாத தீயோர். இவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் மறத்தையும் இறைவனோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார். இந்த மறத்தைத்தான் மறக்கருணை என்கிறோம்.

திருத்திப் பணி கொள்ள வேண்டுமென்று இறைவன் விளைக்கும் துன்பமும் கருணையால் விளைந்ததுதான். அறக்கருணையால் அறத்தில் நிற்பவர்களையும் அன்பர்களையும் காக்கும் கடவுள் மறக் கருணையால் ஒழுக்கம் இல்லாத தீயோரையும் திருத்தி நெறிப்படுத்துகிறான். எனவே அறமாக இருப்பவன் மறமாகவும் இருக்கிறான் என்பர்.

ஆனால் அச்சமாகவும் இருக்கிறான் என்கிறாரே, அது எப்படி? தருமத்தின் பெரும் பகைவர்களான அசுரசுபாவம் உடையவர்களைச் சாதாரணத் துன்பம் விளைக்கும் மறக்கருணையாலும் திருத்த முடிவதில்லை. அத்தகைய லோக பயங்கரர்களைப் பயமுறுத்துவது பயம்தான். எனவே, இரணியன் என்ற லோக பயங்கரனை நரசிங்கமாகத் தோன்றி அழித்துத் தானே திருத்தவேண்டியதாயிற்று?

இத்தகைய மறக்கருணைத் தத்துவத்தை விரிவாகக் காண்கிறோம் ஆழ்வார் ஆதியர் வாக்கிலே. இத்தத்துவத்தின் விதைக் கருத்தை இந்தப் பரிபாடலில் தெளிவாகக் கண்டு கொள்ளுகிறோம்.

அறக்கருணையும் மறக்கருணையுமாகத் திகழும் முரண்பாடு குறிக்கப் பெற்றபின் இந்தக்கவி அழகான நிலவொளி பரப்பும் சந்திரனாகவும், சுடும் கதிர்களையுடைய சூரியனாகவும் இறைவன்தோன்றும் முரண்பாட்டையும் சுட்டிக் காட்டுகிறார்.

வைஷ்ணவமும் சமரசமும்

இரட்சகனான திருமால் அழிக்கும் கடவுளாகிய சிவபெருமானாகவும் காட்சி தருகிறான் என்கிறார். சிவபெருமானை ஐந்து முகங்களை உடையவன் என்றும், பகைவர் அஞ்சத்தக்க அரிய வெற்றிகளையும் வலிமையையும் உடையவன் என்றும், ஒப்பற்றவன் என்றும் கூறியுள்ளார். அப்பேர்ப்பட்ட சிவபெருமானாகவும் அவனுடைய அழிக்கும் தொழிலாகவும் விளங்குகிறானும் திருமால்.

சிவபெருமானுடைய சங்காரத் தொழிலாக இருப்பதுபோல் திருமால் பிரமதேவனின் படைப்புத் தொழிலாகவும் இருக்கிறானும். பிரமதேவனாகவும் இருக்கிறானும். இத்திருமாலே வானமும் நிலமுமாக இருக்கிறான் என்று கூறியபின்,

நீடிய இமயமும் நீ

என்றும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

தமிழ் முனிவன் வாழும் பொதிய மலை போல் இமயமலையும் நமது பண்பாட்டின் விளைநிலம்தான் என்பது குறிப்பு. வடக்கு தெற்கு என்ற வேற்றுமை இல்லாமல் எல்லாமாகிய இறைவன் திருமால் என்பது இக் கவிஞர் கொள்கை. இவரது பரந்த சமரச மனப்பான்மை அக்காலத்து தமிழர்களிடையே வழங்கி வந்த வைஷ்ணவத்தின் சிறந்த, பரந்த, நிலையையும் ஒருவாறு சுட்டிக் காட்டுகிறது எனலாம்.

பரம்பொருளும் உருவமும்

இத்தகைய திருமால் முழுமுதற்கடவுள் என்பதையும் இந்தப் பாட்டு நினைப்பூட்டுகிறது. 'பொன் மயமான அழகிய சக்ராயுதத்தை வலக்கையில் ஏந்திக் கொண்டிருப்பவனே! நீ உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் முதன்மை பூண்டு ஒப்பற்ற புகழோடு பொலிந்து விளங்குதலால், உன்னை ஒப்பவர் ஒருவருமே இல்லை; உனக்கு ஒத்தவன் நீயே

தான்!' என்று இக்கவிஞர் கூறுவதைக் கேளுங்கள்,

இத்தகைய முழுமுதற்கடவுளை அன்பர்கள் ஆசைதீர வழிபட வேண்டுமல்லவா? எனவே, அன்பர் உகந்த திருஉருவத்துடன் இவன் காட்சி அளிக்கிறுனும். 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே' என்ற பொய்கையார் வாக்கையும் நினைவூட்டுகிறுர் இப்புலவர்.

பொன்ஒக்கும் உடையவை

அதாவது பொன்னை ஒத்த சிறப்புடையது உன் ஆடை - என்கிறுர்களாம் அடியவர்கள். இறையவனும் அப்படியே பொன்னுடை அணிந்து காட்சி வழங்குகிறுனும்.

அரசர்கள் தங்கள் வெற்றிக்கொடியைப் பறக்க விடுவது போல் ராஜாதிராஜனும் தேவாதிதேவனுமாகிய திருமாலும் கருடப்புள்ளின் உருவம் எழுதிய கொடியைத் தன் துஷ்ட நிச்கிரக வெற்றிக்கு அறிகுறியாகப் பறக்க விடுகிறுனும். உபாசகர்கள் விரும்புவதால்தான் இத்தகைய வெற்றிக் கொடியுடன் காட்சி தருகிறுன்.

சங்கு சக்கரங்கள் திருமாலின் பிரசித்தமான அறிகுறிகள் என்பது அனைவரும் அறிந்ததே. சங்கு சக்கரங்களைத் தரித்த வண்ணம் திருமால் காட்சி வழங்க வேண்டுமென்பது அன்பர்கள் விருப்பம். எனவே வலிமை நிறைந்த சக்கரத்துடனும் சங்குடனும் காட்சி வழங்குகிறுனும்.

சாணை பிடித்த நீல இரத்தினம் போன்ற திருமேனி ஒளியைப் பார்க்க அன்பர் உலகம் ஆசைப்பட்டதால், அத்தகைய உருவத்திலே தன் எல்லையற்ற புகழ் ஒளியை அடக்கிக் காட்டுகிறுனும். அழகுகளை யெல்லாம் திருமகள் அமர்ந்திருக்கும் அந்த அழகிய மார்பிலே காட்டுகிறுனும், எல்லாம் அன்பர்களைக் கவர்ந்து அருள்புரிவதற்காகத்தான் என்பது கவிஞர் குறிப்பு.

பிரார்த்தனை

இறைவன் திருவடி நிழலிலேதான் நாம் எங்கும் என்றும் உறைந்து பேறுபெறுகின்ருேம் என்பதில் அன்பர்களுக்குச் சந்தேகமேயில்லை. இந்த உணர்ச்சியே அன்பர் வாழ்வை இன்ப வாழ்வு ஆக்குகிறது. இந்தப் புலவரும் 'உன் அடியின்கீழ் உறைந்து கொண்டிருக்கும் நாங்கள் அருளை வணங்கி இன்ப உள்ளம் பெற்றவர்களாய் வாழ்க்கை நடத்த வேண்டும்' என்ற பிரார்த்தனையுடன் தமது துதிமொழிகளை முடித்துக் கொள்ளுகிறுர்.

தம்முடைய சுற்றத்தாரோடு ஒருங்கு கூடி இறைவன் அருள்பெற்று நல்லின்ப வாழ்வு வாழ விரும்புகிறுர் இவர். 'உன் திருவடிகள் என்றும் பொலிந்து திகழ்வனவாக' என்று வாழ்த்தி வணங்குவோம் என்கிறுர். எங்களுக்கு அருள் புரிவாயாக என்கிறுர். அன்பர்களுக்கு ஆண்டவன் கருணைபுரிவது நிச்சயம் என்ற நம்பிக்கை ஜீவநாதமாக ஒலிக்கிறது இந்த பிரார்த்தனையிலும் முழுப் பாட்டிலும்.

வேறு சில கருத்து-விதைகள்

ஆழ்வார் பாடல்களில் நாம் காணும் வேறு சில கருத்துக்களுக்கும் விதையைப் பரிபாடல்களில் காணலாம் என்று தோன்றுகிறது. உதாரணமாக இறைவன் பழமைக்கும் பழையவன், புதுமைக்கும் புதியவன் என்ற கொள்கையை எடுத்துக்கொள்வோம். இது சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் முருகவழி பாட்டிற்கும் ஒரு பொதுவான கொள்கைதான்.

முருகனை என்றும் இளையவனுகக் கூறுவதுபோல் முதியவனுகவும் கருதவேண்டும் என்பதைத்தான் குறிப்பிடுகிறது 'இளையோன்' என்றும் 'கிழவோன்' என்றும் வரும் விளிகளைப்பற்றி வழங்கும் கதை. காலம் கண்ட முதல்வன் - முதற்பெருங் கடவுள் - முதியவனுக வருணிக்கப்படுவதும் பொருந்துவதுதானே. திருமாலையும் முதியவனுகவும் இளையவனுகவும் வருணிக்கிறது பரிபாடல்.

திருமாலின் முதுமையை உணர்ந்து கொள்ள முடியவில்லை என்கிறுர் கீரந்தையார் என்ற புலவர். 'முதுமை உணர முடியாத முதல்வனே!' எனறு பொருள்பட விளிக்கிறுர். இம்முதியவனே இளையவனுகவும் இருக்கிறுனும். இத்தகைய திருமாலைச் சிந்திப்பவர்களுக்கும் மூப்பு இல்லை என்கிறுர் பொய்கை ஆழ்வார்.

திருமாலின் அருள் மேகத்தை ஒத்திருக்கும் என்று சர்வசாதாரணமாகப் பக்தர்கள் கூறுவதுண்டு. இந்தக் கருத்தை வேதப் பொருளே உணர்த்துகிறது என்பர் கீரந்தையார். திருமாலின் பொறுமை நிலத்தை ஒத்திருக்கிறதென்றும் வாய்மை தவறுது தோன்றும் பகலை ஒத்திருக்கிறதென்றும் இதே புலவரிடம் காணப்படும் கருத்து விதைகளும் முளைத்துப் பின்னுளில் செழித்து வளர்ந்திருப்பதைக் காண்கிருேம்.

பிற்காலத்தில் சாதாரணமாக இறைவன் பெருமை குறிக்க வழங்கி வந்த கதைகளில் சிலவற்றுக்கும் பரிபாடலில் விதைகளைக் காணலாம். உதாரணமாக பாற்கடலிலிருந்து அமுதம் கடைந்து எடுத்துத் திருமால் தேவர்களுக்கு வழங்கிய கதையைப் பார்ப்போம்.

அமிர்தத்தை கடைந்து கொடுப்பதாகத் திருமால் நினைத்த உடனேயே தேவர்களுக்கு முதுமை போய்விட்டதாம். தொலையாத வலிமையும் பெருகிவிட்டதாம். இந்த விதைக் கருத்திலே எத்தகைய அதிசய மனோபாவம் காண்கிருேம்!

ஊழிக்காலத்தில் உலகமெல்லாம் பெரு வெள்ளத்தில் மூழ்கி அழியுமென்றும், அந்த நீரில் ஒரு தாமரைப்பூ மலர்ந்து தோன்றும் என்றும், அது திருமாலின் உந்தியந் தாமரை என்றும் புராணம் சொல்லுகிறதல்லவா? அந்தத் தாமரைப்பூவில் பிறந்த பிரமனும் தந்தையாகிய திருமாலும் ஒன்றே என்று வேதம் கூறுவதாக, கடுவன் இளவெயினனுர் என்ற புலவர் பாடுகிருர்.

இயற்கையழகுகள் நிறைந்த சில தலங்களைத் திருமாலின் திருப்பதிகளாக ஆழ்வார்கள் பாடியிருக்கிருர்கள் அல்லவா? இதற்கும் கருத்து விதை ஒன்றைப் பரிபாடலில் காண்கிருேம். பழைய உரைகளிலும் புறத்திரட்டு என்ற தொகை நூலிலும் மேற்கோளாகக் காட்டப்பெற்றிருக்கும் பரிபாடல் ஒன்று இருந்தையூர் என்ற தலத்தைக் குறிப்பிடுகிறது.

இத்திருப்பதி வையை ஆற்றின் ஒரு துறையில் பொருந்தியிருப்பது என்கிறது இப்பாட்டு. இவ்வூரின் ஒரு பக்கத்திலே வேங்கைமரம் முதலிய பலவகை மரங்கள் அடர்ந்த நீலமலை ஒன்று இருப்பதாகவும் புலவர் குறிப்பிடுகிருர். மற்றொரு பக்கத்தில் தாமரைக் குளங்கள். வேருெரு பக்கத்தில் வயல்கள். வயல்களில் உழுகிறவர்களும் நாற்று நடுவோரும் எழுப்பும் ஓசைகள், கரும்பாலைகளின் ஓசை ஒருபுறம்.

இப்படி இயற்கை யழகுகளும் செழிப்பும் உழைப்பும் நிறைந்த இத்தலத்திலும் வேறுஊர்களிலும் அறம் வழுவாது வாழ்க்கை நடத்தும் சிறந்த கல்விமான்களான அந்தணர்களும் பிறரும் காணப்பட்டார்களாம். இத்தகைய வருணனைகளைத் திருமங்கை ஆழ்வார் முதலான ஆழ்வார்களின் பாசுரங்களிலும் காண்கிருேம்.

தலத்தின் சிறப்பைக் கூறுகிறவர் திருமாலின் சிறப்பையும் கூறித் திருமால் பள்ளிகொண்டிருக்கும் ஆதிசேஷனின் சிறப்பையும் கூறுகிருர். ஆதிசேஷன் விரும்பி உறையும் கோயிலும் இத்தலத்தில் இருந்தது என்கிருர். முதலில் ஆதிசேஷனை வணங்கிப் பின் திருமாலைச் சுற்றத்தோடு வணங்குவோம் என்கிருர்.

ஆண்டவனைக் காட்டிலும் அவன் அடியவர்களை வணங்குவதும் அவர்களுக்குப் பணிபுரிவதும் சிறந்தவை என்ற குறிப்பையும் இப்புலவர் வாக்கிலே காண்கிருேம். அடியவர்களின் அருமை பெருமைகளைத் திருமங்கை மன்னன் முதலிய பிற்காலச் சான்றோர்கள் சிறப்பாகப் பேசுகிருர்கள் அல்லவா? இப்பெருங் கொள்கைக்கும் ஒரு வித்து இருக்கிறது பரிபாடலில்.

(தொடரும்)

✳✳✳

திருப்பனந்தாள், திருக்கோயிலாகிய தாடகையீச்சரத்தில், சிவனடியார் திருக்கூட்டத்தின் 49-வது சிறப்பு வழிபாடும், ஸ்ரீ வீரியம்மன் கோயிலில் மேற்படிக் கூட்டத்தின் 9-வது ஆண்டு விழாவும் 25-10-59-ல் சிறப்பாக நடைபெற்றன.

மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

திருமூழிக்களம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்கள் ஸ்வாபதேசார்த்த மெனப்படும் உள்ளுறை பொருளையே உயிராகக்கொண்டு அவதரித்தவை. அவ்வுள்ளுறை பொருள் தூதுவிடும் பாசுரங்களுக்கு இன்றியமையாததாகும். இப்போது நாம் அநுபவிக்க எடுத்துக்கொண்டுள்ள திருமூழிக்களத் திருப்பதியின் பதிகம் தூதுவிடும் பதிகமாதலால் இதில் உள்ளுறை பொருளே உயிராகப் பதிந்திருக்கின்றதென்பதை நன்கு விவரிக்க விரும்புகிறோம். இதற்கு முன்னுரையாக வொரு விஷயம் தெரிவிக்கிறோம்.

நம்மாழ்வார் தமது முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் ஐம்பத்தோராம் பாசுரத்தை வண்டுவிடு தூதாக அமைத்தார். வண்டுகளை விளித்து அருளிச் செய்யும் பாசுரமான *வீசுஞ் சிறகால் பறத்திர் என்று தொடங்குமதில் "எம்மீசர் விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழெம்மைச் சேர்விக்கும் வண்டுகளே!" என்று வண்டுகள் விளிக்கப் பட்டுள்ளன. இங்கு வண்டுக்குக் கொடுக்கப் பட்டுள்ள அடைமொழி விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழெம்மைச் சேர்விக்குமென்பது குறிக்கொள்ளத்தக்கது. எம்பெருமானுடைய பாதாரவிந்தத்திலே எம்மைக் கொண்டு கூட்டுகின்ற வண்டுகளே! என்று ஒரு சிறப்பையிட்டு அழைத்திருக்கின்றார். இவ்வடைமொழியை ஏற்றுக்கொள்ளுமாற்றல் சாதாரண வண்டுகளுக்கு உண்டாவென்று சிறிது விமர்சிக்க வேணும்.

திருமகள் போலே புருஷகாரக்ருத்யத்தைச் செய்து எம்பெருமானுடைய பாதாரவிந்தங்களிலே நம்போன்ற ஸம்ஸாரி சேதநர்களைச் சேர்ப்பிக்கவல்லவர்கள் நல்லாசிரியர்கள். அவர்களையே வண்டாக மறைத்துச் சொல்லியுள்ளாராழ்வார் என்பது இப்பாட்டின் முதலடியாலும் மேற்பாட்டின் முன்னிரண்டடிகளாலும் தெற்றென விளங்கும். எங்ஙனேயென்னில்; "வீசும் சிறகால் பறத்தீர் விண்ணுடும் நுங்கட்கு எளிது" என்பது இப்பாட்டின் முதலடி. சிறகால் என்றது சிறகுகளால் என்றபடி; பால்பகா அஃறிணைப் பெயராதலால். வண்டுகளே! நீங்கள் இரண்டு சிறகுகளினால் பறக்கின்றீர்கள்; உங்களுக்குப் பரம பதமும் அணித்து என்று சொல்லப்படுகின்றதிங்கு. உலகில் பறவைகள் இரு சிறகுகளினாலும் பறந்து உயர்கதியையெய்துவதுபோல் உத்தம புருஷர்கள் ஞானம் அனுட்டானம் என்னுமிரண்டினால் உயர்கதியையடைகின்றார்களென்று வடமொழிப் புராண நூல்களில் கூறியிருப்பதைக் கொண்டே ஆழ்வார் "வீசுஞ் சிறகால் பறத்தீர் விண்ணுடும் நுங்கட்கெளிது" என்றருளிச் செய்தாரென்க. எனவே ஞான மனுட்டானமிவை நன்றாகவே யுடையராய் எம்பெருமான் திருவடிகளிலே கொண்டு சேர்க்க வல்லவர்களான உத்தமகுண சீலர்களே இங்கு வண்டாக விளிக்கப்பட்டன ரென்றதாயிற்று.

இனி அடுத்த பாட்டின் முன்னடிகளைக் கொண்டும் இதனைத் திடப்படுத்துவோம். "வண்டுகளோவம்மின் நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ வுண்டு களித்துழல்வீர்...." என்பது அடுத்த பாட்டின் முற்பகுதி. தாமரை முதலானவை நீர்ப்பூக்களாகும்; மல்லிகை முல்லை முதலானவை நிலப்பூக்களாகும்; பாரிஜாதம் பாதிரி முதலானவை மரப்பூக்களாகும். வண்டுகள் இவற்றிலே படிந்து மது

வுண்டு களிக்கின்றனவென்பது இயல்பே; விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ்ச் சேர்விக்கும் வண்டுகளாகக் கருதப்பட்ட உத்தம புருஷர்களுக்குச் சேரும் பொருள் யாதெனில்; நீர்ப்பூவென்கிறது பாற்கடலுள் பையத்துயின்ற பரமனை; நிலப்பூவென்கிறது- இந்நிலத்திலவதரித்து விளங்கின ஸ்ரீராமக்ருஷ்ணாதி விபவ மூர்த்திகளையும் இன்னமும் விளங்கிக் கொண்டிருக்கின்ற அர்ச்சாமூர்த்திகளையும். மரத்தி லொண்பூ என்கிறது *சேணுயர்வானத்திருக்குந் தேவ பிரானெனப்பட்ட பரவாஸுதேவனை. ஆக இந்தப் பூக்களை யுண்டுகளிப்பதாவது-பரத்வ பரமான வேதங்களையும் ராமக்ருஷ்ணாதி விபவாவதார பரங்களான இதிஹாஸபுராணங்களையும் அர்ச்சாவதார பரமான அருளிச்செயல்களையும் வ்யூஹபரமான பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களையும் அநுபவித்துக்களிப்பதாம். அங்ஙனம் களிக்கின்ற ஸத்புருஷர்களே ஆழ்வாரால் வண்டுகளாக விளிக்கப்பட்டார்களென்பது நன்கு விளங்கிற்று.

'வ்யங்க் யார்த்தங்களையே உயிராகக் கொண்டது உத்தம காவியம்' என்பர் வடநூலாரும். ஆண்டாளும் திருப்பாவையில் (7) "ஆனைச்சாத்தம் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ" என்கிறாள்; 'பேசின பேச்சு கேட்டிலையோ' என்பதே போதுமாயிருக்க 'பேச்சரவம் கேட்டிலையோ' என்றது-வெளிப் பேச்சுமட்டும் கேட்பதில் பயனில்லை; பேச்சின் தொனிப் பொருளும் கேட்கவேணும் என்று உணர்த்தியவாறு. [அரவம்—தொனி.]

ஆக இவ்வளவு நிருபணங்களினால் ஆழ்வாரருளிச் செயல்களில் பல பாசுரங்களில் உள்ளுறை பொருள் உய்த்துணரத்தக்கதென்பது நிர்த்தாரணம் செய்யலாயிற்று. இப்போது நாம் அநுபவிக்க வெடுத்துக்கொண்ட திருமூழிக்களப் பதிகத்தின் முதற் பாட்டின் அமைப்பினாலும் இது மூதலிக்கப்படுகின்றது. [திருவாய்மொழி 9—7—1] *எங்கானலகங் கழிவாயென்று தொடங்கும் முதற்பாட்டில் "செங்காலமட நாராய்! திருமூழிக்களத் துறையும் கொங்கார் பூந்துழாய் முடியென் குடக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்றுள்ளது. செவ்விய காலையுடைய அழகிய நாரையே! திருமூழிக்களத் துறையும் பெருமானுக்கு யான்விடு தூதாகச் சென்று தூது சொல்லித் திரும்பி வந்து உன்னைச் சேர்ந்தவர்களோடுங்கூட உங்களுடைய கால்களை எனது தலைமீது வைக்கவேணும் என்கிற கோரிக்கை இங்குக் காண்கிறது. மஹா விவேகியான ஆழ்வார் நாரைப் பறவையைக் குஞ்சுகளோடுங்கூடத் தமது திருமுடிமீது வந்து உட்காருமாறு வேண்டுகிறாரென்பது ஒரு பொருளோ? இச்சொற்றொடரை ஊன்றி நோக்கவேண்டா; ஊன்றாமலே மேலெழ நோக்கினாலும் இதற்கு உள்ளுறை பொருள் வேறொன்று இருக்கவேண்டுமென்று தோன்றித் திருமே. முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் தூதுவிடத் தொடங்கும்போது "விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும்" என்று எம்பெருமானுடைய திருவடியிணையின் கீழ்த் தம்மைச் சேர்ப்பிக்கவல்ல ஆற்றல் வாய்ந்தவர்களாகத் தெரிவிக்கப்பட்ட ஆசிரியரை அவருடைய பரிவாரத்தோடுங்கூட சிரஸா வணங்கப் பெறுவதே கைம்மாறென்று காட்டிற்றாவது தவிர வேறு பொருளில்லை யிங்கு.

மாறன்பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கங் கூற அவதரித்த மங்கையர்கோன் [திருமங்கையாழ்வார்] திரு நெடுந்தாண்டகத்தில் (பா. 26) "அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை" என்கிறார். வண்டுக்கு ஆறுகால் உள்ளமை இயல்வாதலால் அதனை இங்குச் சொல்லியாக வேண்டுமோ? 'அறுகால' என்று அடைமொழி கொடுத்தது எதற்காக? என்று பூருவாசாரியர்கள் திரளில் விசாரம் நிகழ்ந்தது. சிலர் சொன்னார்களாம்-இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக்குப் பாங்காக ஆறு கால்கள் இருக்கப்பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக. வண்டு செல்லுதற்குச் சாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவாதலால் 'அறுகால' என்னுமடைமொழிக்கு இங்ஙனே கருத்துரைப்பது சுவைக்கேடென்று திருவுள்ளம்பற்றிய பட்டரென்னுமாசிரியர், "தொழுதேனுன்னை" என்று அடுத்துள்ள வாக்கியத்திற்குச் சேர அருளிச் செய்வராம்-"தூதுசென்று மீண்டு வந்தால் வண்டின் கால்தனைத் தமது தலைநிறைய வைத்துக்

கொண்டு கூத்தாடக் குதுகலிக்கிறாராழ்வார்; தம் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்களுண்டாகப் பெற்றதே யென்று திருவுளம் பொங்கிப் பேசுகிறார்'' என்று. உண்மையில் வண்டின் கால்களையா ஆழ்வார் திருமுடிமீது கொள்ளப் பார்க்கிறார்! வண்டுக்கு ஆறுகால்களிருந்தாலும் அவை ஆழ்வாரது திருமுடி நிறைய வைப்பதற்குப் பாங்காகுமோ? திருமுடியின் நூற்றிலொரு பாகத்தையும் நிறைக்கப் போதாவே அவை. இந்தத் திருமொழிக்களப் பாசுரத்தில் "நுங்கால்கள் என் தலைமேல் நுமரோடே கெழுமீரே'' என்றதன் மருமமான பொருளை யறியப் பெற்றால் பொருத்தமாகும்.

கேண்மின்; சீடர்க்கு ஆசிரியரொருவருடைய இரண்டு திருவடிகள் மட்டுமே உத்தேச்யமல்ல; ஆசிரியரும் அவரது தேவியாரும், அவரது திருக்குமாரருமாகிய மூவருடைய திருவடிகளும் உத்தேச்யமாக சாஸ்திரங்களில் பேசப்பட்டுள்ளது. மூவர் திருவடிகள் ஆறாயின. இதை நம்மாழ்வார் 'நுங்கால்கள் நுமரோடே கெழுமீர்' என்கிற சொற்றொடரால் வெளியிட்டருளினர். திருமங்கையாழ்வார் 'அறுகால' என்னும் விசேஷணபதத்தினால் வெளியிட்டருளினர். எம்பெருமானிடத்துப் புருஷகாரக்ருத்யம் செய்து நம்மை அவன் திருவடிகளிலே சேர்ப்பிக்கிற ஆசிரியர்க்கும் அவருடைய அநுபந்திகட்கும் தலையல்லால் கைம்மாறில்லை என்கிற நூற்கொள்கை தொனிப் பொருள்வகையிலே வெளியிடப்பட்டதாயிற்று.

இப்பதிகத்தில், நாரை குருகு கொக்கு முகில் வண்டு தும்பி அன்னம் என்னுமிவை தூதுவிடப்படுகின்றன. நாரை கொக்கு குருகு என்னுமிவை ஒரே சாதியாதலால் இவை மூன்றும் ஒன்றாகவே கொள்ளத்தகும். வண்டு தும்பி என்னுமிவையும் ஒரே சாதியாதலால் இவையிரண்டும் ஒன்றாகவே கொள்ளத்தகும். எனவே நாரை முகில் வண்டு அன்னம் ஆகியே நான்கே இப்பதிகத்தில் தூது விடப்படுகின்றன வென்று தேறிற்று. ஆசிரியர்களை இவையாகச் சொல்லுவதற்குண்டான பொருத்தங்களை இனி நிரூபிப்போம்.

ஆழ்வார் குருகையும் நாரையையும் விளிக்குமிடத்து 'ஆசறு தூவி வெள்ளைக் குருகே!' என்றும், 'அமர்காதல் குருகினங்காள்!' என்றும், 'வைகல் பூங்கழிவாய் வந்து மேயுங் குருகினங்காள்!' என்றும், 'தடம்புனல்வாய் இரைதேருங் கொக்கினங்காள் குருகினங்காள்!' என்றும், 'ஏந்துநீரிளங் குருகே!' என்றும், 'அஞ்சிறைய மடநாராய்!' என்றும், 'செங்கால மடநாராய்!' என்றும், 'வாயுந்திரையுகளுங் கானல்மட நாராய்!'' என்றும் இப்படி வகைவகையாக விசேடணங்களிட்டு அருளிச் செய்கிறார். இவ்வடை மொழிகளெல்லாம் ஆசிரியரது நலங்களையே நன்குணர்த்துவன. அடைவே விவரிப்போம்.

ஆசறுதூவி வெள்ளைக் குருகே!

தூவியென்று சிறகுக்குப் பெயர்; பழிப்பற்ற சிறகையுடைய பரிசுத்தமான குருகே! என்பது பதப்பொருள். பறவையின் சிறகுகளின் தானத்தில் ஆசாரியனது ஞானமும் அனுட்டானமும் கொள்ளப்படுவதாகக் கீழே கூறப்பட்டிருத்தலால் நிஷ்கல்மஷமான ஞானனுட்டான முடைமை சொல்லப்படுகிறது. ஐயமும் திரிபுமற்ற ஞானமும் பிறரை வஞ்சிப்பதற்காகவன்றிக்கே த்ரிகரண சுத்தியுடன் கொள்ளப்படுகிற ஆசரணையும் பொருந்தியுள்ள ஆசிரியரே! என்றபடி. இதற்கு மேல், வெள்ளை' என்றும் கூறியது "என்னை வெள்ளுயிராக்கவல்ல'' என்ற திருப்பாண்டு பாசுரப்படியே ஆத்மசுத்தியுடைமை சொன்னபடி. ஆக, உள்ளும் புறமு மொத்த சுத்தியையுடைய ஆசிரியரே! என்றழைத்தவாறு.

அமர்காதல் குருகினங்காள்!

அமர்ந்த காதலையுடைய குருகினங்களே என்றபடி. "ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்'' என்னும்படி ஆழ்வார் தமக்குக் காதலே நிரூபகமானாற்போலே ஆசிரியர் தாமும் காதலையே நிரூபகமாகவுடையவர். "காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி நங்கண்ணன்'' என்றும், "என்காதலுரைக்கில் மண்டிணி ஞாலமுமேழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால்'' என்றும் சொல்லும்படி அமர்ந்த காதலையுடைய ஆசிரியரே! என்கை.

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங் குருகினங்காள்!

எப்போதும் அழகிய நீர்நிலத்திலே வந்திருந்து இரையுண்கிற குருகினங்களே! என்றபடி. "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை……நாண்மலர்கொண்டு உனபாதம் நண்ணுநாள் அன்றெனக்கவை பட்டினி நாளே" என்றும், "கண்ணாணில் ஓவாத் தொழில் சாரங்கன் தொல்சீரை நன்னெஞ்சே! ஓவாதவூணாகவுண்' என்றுமிருப்பார்க்கு எம்பெருமானுடைய திருவாராதனை யும் அவனது திருக்கலியாண குணங்களை யநுபவிப்பதுமே உணவாதலால் அத்தகைய வுணவை உரியஇடங்களிலே யுண்டுகொண்டு குழாங்கூடி வாழ்கின்ற ஆசிரியரே! என்றபடி. கடலையடுத்த நீர்ப்பரப்புக்குக் கழியென்று பெயர். ச்ருதிஸாகரமும் த்ராவிட வேதஸாகரமுமாகிற கடல்களையடுத்திருக்கின்ற ஸ்ரீவசனபூஷணம் ஆசார்ய ஹ்ருதயம் போன்ற திவ்விய நூல்களை யனுபவித்துக் கொண்டு களித்திருக்குமிருப்பைச் சொன்னவாறு.

தடம்புனல் வாயிரை தேருங் கொக்கினங்காள்!

விசாலமான நீர்நிலங்களிலே இரையைத் தேடுவதாகச் சொல்லப்படுகிற திங்கு. குருகினங்களுக்கு வேண்டிய இரை தடம்புனல்களிலே அபரிமிதமாகக் கிடக்குமாதலால் அதைத் தேட வேண்டிய அவசியமிராதே; அப்படியிருக்க இரை தேடுவதாகச் சொன்னவிதன் கருத்தை ஆழ்ந்து உணர வேணும். கேண்மின். சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருப்புள்ளம்பூதங்குடி, யைப் பாடாநின்ற திருமங்கையாழ்வார் "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனிய தனுள்போய்ப், புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும் புள்ளம் பூதங்குடிதானே' என்றொரு பாசுரம் பாடியுள்ளார். முற்காலத்தில் ஆலவாயுடையானென்பானொரு தமிழ்ப்பண்டிதன் பட்டரென்னுமாசிரியரிடம் வந்து இதில் ஒரு கேள்வி கேட்டானும்: 'பள்ளச் செறுவில் கயலுகள' என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக்கிடப்பதாகத் தெரிந்துவிட்டது; அப்படியிருக்க, ஈற்றடியில் 'இரை தேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தாலன்றோ அதைத் தேட வேண்டும்; கொள்வார் தேட்டமாம்படி குறையற்றுக் கிடக்குமிடத்தே தேடிப் பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்தாதே! என்றானும். அதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது. பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை; பிள்ளைக்கு இரைதேடும்" என்றுள்ளது காண்; அங்குள்ள மீன்கள் நில மிகுதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; அவை பறவைக் குட்டிகளின் வாய்க்கு அடங்காவாதலால் உரிய சிறு மீன்கள் தேடிப் பிடிக்க வேண்டுமத்தனை யன்றோ என்றாராம். அவனும் கேட்டு மெச்சினனும். இதிலிருந்து என்ன கிடைக்கின்றதென்றால், பெரியோர்கள் நூற்களின் நுட்பொருள்களைச் சீடர்களுக்கு உணர்த்தும்போது இளைஞர்கட்குப் பெரிய நூற்பொருள்களை யுணர்த்தினால் அவை அவர்களது மனத்தில் பதியாவாதலால் அவர்கள் கொள்ளத் தகுந்தவளவாகச் சிறிய அர்த்தங்களாய்ப் பார்த்தெடுத்து உபதேசிப்பார்கள்; பெரிய பொருள்களையும் வெகு லலிதமாக வெடுத்துரைப்பரென்கை. இது விளங்கவே இரை தேடுவதாகச் சொல்லுகிறபடி.

[நாரைகளின் வேறு சில தன்மைகளும் மற்றும் தூதுவிடப்படுகிற முகில்வண்டு அன்னங்களின் ஒற்றுமை நயங்களும் அடுத்த இதழில் வெளிவரும்.]

(தொடரும்)

சென்னை, அமைந்தகரை ஸ்ரீஏகாம்பரேசுவரர் கோயிலில் 9-10-59 வெள்ளிக்கிழமை, நவராத்திரி விழாவில் துர்காஷ்டாமியை முன்னிட்டு, ஸ்ரீகாமாட்சி அம்பிகைக்கு இலட்ச குங்குமார்ச்சனை நடைபெற்றது.

திருவண்ணாமலை, ஸ்ரீஅருணாசலேசுவரர் கோயிலில் கார்த்திகை பிரம்மோற்சவம் 4-12-59 முதல் 16-12-59 வரை சிறப்பாக நடைபெறும்.



காயத்திரி லிங்கக் கோயிலும் காயத்திரி மடுவும்.

– பவானி –

வில்லார் வரையாக மாநாகம்
நாணாக வேடங் கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க்
கிடம்போலும் புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அங்கழன்மேற்
கைகூப்ப வடியார் கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல
வருள்புரியுந் திருநணுவே

— திருஞானசம்பந்தர்.

பாடல்பெற்ற சிவப்பதிகளில் கொங்கு நாட்டிலுள்ளவற்றை கொங்கேழ் தலங்கள் என்று கூறுவர். அவை திருப்புக்கொளியூர் அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருநணு, திருக்கொடி மாடச் செங்குன்றூர் (திருச் செங்கோடு), திருவெஞ்சமாக்கூடல், திருப் பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர்த் திருவா னிலை என்பன. **திருநணு** என்பது இப்போது **பவானி** என வழங்குகிறது. ஈரோடு இருப் புப்பாதை நிலையத்திலிருந்து வடமேற்கே சுமார் பத்து கல் தொலைவிலுள்ளது.

இத்தலம் காவிரியாறும், பவானியாறும் கூடும் துறையில் அமைந்திருக்கிறது. பவானி யென்பது பார்வதி தேவியாரின் பல திருப் பெயர்களில் ஒன்று. இத்தலத்திற்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. சம்பந்தர் தேவா ரத்தில் திருநணு என்று குறிக்கப்படுகிறது. இப்பதியை வழிபட்டோர்க்கு எத்தகைய தீங்கும் நண்ணாத தலமாதலின் நண்ணாவூர் அல்லது திருநணு என்று பேர் அமைந்த தெனத் தலபுராணம் கூறும். "கேட்டார் வினைகெடுக்கும் திருநணுவே", "செல்லாவரு நெறிக்கே செல்ல அருள்புரியும் திருநணுவே" என்பது தேவாரம். குபேரன் வழிபட்டதால் **தட்சிண அளகை** என்றும், பராசர முனிவர் இங்கு பேறுபெற்றமையின் **பராசர க்ஷேத்திரம்** என்றும், இலந்தை மரம் தலவிருட்சமாக விளங்குவதால் **தட்சிண வதரிகாச்சிரமம், பதரி வனம்** என்றும், வடநாட்டில் கங்கை, யமுனை,



பவானி சங்கமேசர் கோயில் முன் தோற்றம்.

சரசுவதி என்னும் ஆறுகள் கூடுவதுபோல் இங்கும் காவிரி, பவானி, அமுதநதி இவைகள் ஒன்று சேர்வதால் திரிவேணி சங்கமம், தென்னுட்டுப் பிரயாகை என்றும், திருமுக்கூடல் என்றும், கூடல் சங்கமம் என்றும், தென்கயிலே என்றும், வக்கிரபுரம் என்றும் பல பெயர்கள் வழங்குகின்றன. இத்தலத்துக் கல்வெட்டுக்களில் திருவானிகூடல் என்று பெயர் காணப்படுகிறது. வானி என்பது பவானிக்கு மற்றெரு பெயர். பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவர் இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னனைப்பற்றிய பாட்டில்,

புனல்பாய் மகளிராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத்தோன்றுஞ்
சாந்துவரு வானி நீரினுந்
தீந்தண் சாயலன் மன்றதானே

என்று அவனுடைய மேனி வானியாற்று நீரினும் மென்மையும் தூய்மையும் உடையதாக இருந்தது என்று கூறுகிருர். இனி இப்பதி சங்ககிரி, நாககிரி (திருச்செங்கோடு), மங்கலகிரி (பெருமாள்மலே), வேதகிரி (ஊராட்சிக் கோட்டைமலே), பதுமகிரி (காவிரிக்கும் காயத்திரி மண்டபத்திற்கும் இடையிலுள்ள சிறுகற்குன்று) இந்த ஐந்து மலேகளுக்கும் நடுவில் அமைந்திருப்பதால் பஞ்சகிரி மத்தியப்பிரதேசம் என்ற சிறப்புப் பெயரையும் உடையது.

இங்கெழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம் சங்கமேசுவரர் என்பது. இரு ஆறுகள் நடுவில் இருப்பதால் நட்டாற்றீசர் என்றும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் திருநண்ணு உடையார் என்று காணப்படுகிறது. 'ஞானக்கண்ணுகி நண்ணுவில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தை' என்று பவானி கூடற்புராணம் கூறும். தேவியாரின் திருப்பெயர்கள் வேதநாயகி, வேதவல்லி, பொன்னூர் மௌலி என்பன. கல்வெட்டுக்களில் பண்ணூர்மொழியம்மையார் என்று அழகாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தங்கள் காவிரி, பவானி, அமுதநதியென்பன. அமுதநதி அந்தர்வாகினியாக (மறைவாக) காவிரியுடன் கலக்கிறது. திருக்கோயிலுக்கு வெளியில் காயத்திரிலிங்கக் கோயிலுக்கெதிரில் காயத்திரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம்,



இலந்தை மரம்

சரசுவதி தீர்த்தம் இவைகள் உள்ளன. காயத்திரி தீர்த்தத்தை மக்கள் காயத்திரிமடு என வழங்குகின்றனர். இவையன்றி, தேவதீர்த்தம், சக்கரதீர்த்தம், சூரியதீர்த்தம், உரோமச தீர்த்தம் என்பவைகளும் இத்தலத்திலுள்ளன. ஆடி, தை, புரட்டாசி அமாவாசை நாட்களிலும், ஆடிப் பதினெட்டாம் பெருக்கிலும், மாதப் பிறப்பு, ஆண்டுப் பிறப்பு, சங்கராந்தி புண்ணிய நாட்களிலும், கிரகண காலங்களிலும் மக்கள் ஏராளமாக வந்து காயத்திரி மடுவில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்கின்றனர்.

இந்த பதிக்குரிய தெய்விக மரம் இலந்தை. இரண்டு இலந்தை மரங்கள் கோயிலின் தென்மேற்கு மூலையில் இருக்கின்றன. சித்திரையில் பெருந் திருவிழா நடைபெறும்.

ஊரிலிருந்து கோயிலுக்குள் வடக்கிலுள்ள வாயில் வழியாகத்தான் வரவேண்டும். ஐந்து நிலைகளுள்ள கோபுரம் வாயிலை அழகு செய்கின்றது. கோபுரத்திற்கு வெளியே விநாயகர் கோயிலும், அனுமார் கோயிலும் வடக்கு நோக்கியிருக்கின்றன. இவைகளுக்கும் கோபுரத்திற்கும் இடையே நந்தியெம்பெருமான் எழுந்தருளியுள்ள நந்தி மண்டபம் இருக்கிறது. நந்தி தெற்கு நோக்கியிருக்கிறது. கோபுரத்திற்குள்ளே நுழைந்ததும் இருமருங்கும் விநாயகரும், முத்துக்குமாரசாமியும் காட்சியளிக்கின்றனர். பிறகு காணப்படுவது ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி. மூலஸ்தானத்தில் நின்றதிருக்கோலத்தில் உபய நாச்சியார்களுடன் கிழக்கே திருமுக மண்டலமாகச் சேவை சாதிக்கிறார். இதற்கு வலதுபக்கம் சவுந்தரவல்லித் தாயார், சந்தான கோபாலகிருஷ்ணன் சந்நிதிகளும் கிழக்கு நோக்கியிருக்கின்றன இடது புறம் வேணுகோபாலகிருஷ்ணன் தெற்கு நோக்கிய சந்நிதியிருக்கின்றது. இத்திருவுருவம் அற்புதச் சிற்ப வேலைப்பாடுடையது. மைசூர் மன்னரால் செய்துவைக்கப்பட்டதாம். ஆதிகேசவர் முன் மண்டபத்தின்மேல் இராமாயண கதை முழுவதும் கற் சிற்பங்களால் ஆக்கப்பெற்றிருக்கின்றது. தாயார் சந்நிதியில் ஒரு தூணில் கோதண்டராமர் திருவுருவம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மற்றொரு தூணில் சீதாராமர் அமர்ந்த கோலம், அவர் திருவடிகளின் பக்கம் அனுமான் வலது

வீணையேந்தும் விநாயகர்

கையில் வீணையும், இடது கையில் தாளக்கட்டைகளுடன் பஜனை செய்யும் காட்சி கவினுற விளங்குகிறது. பாவுகல்லில் புலிக்காலும் யானை முகமும் படைத்த ஒரு உருவம் கையில் வீணையுடன் விளங்குகிறது.

பெருமாள் கோயிலுக்குச்சற்று தெற்கே இலட்சுமி நரசிம்மர் சந்நிதி அமைந்திருக்கிறது. திருவுருவம் அழகிய வேலைப்பாடுடையது. அதற்கும் தெற்கே விசாலாட்சி, விசுவநாதரின் கிழக்கு பார்த்த தனிச் சந்நிதிகள் உள்ளன. இதற்கும் தெற்கே ஜோதிலிங்கம் கோயில் இருக்கிறது. இதற்கப்பால் வேதநாயகி யம்பிகை சந்நிதியிருக்கிறது. இதுவும் கிழக்கு நோக்கியதே. பண்ணார்மொழி யம்மையின் அருள்கனிந்த திருமுகம் பார்க்கப் பரவசமடையச் செய்கிறது. முன்னுள்ள நிருத்த மண்டபத்தின் பத்துச் சித்திரத் தூண்களில் சிவனடியார்கள், திருப்பணிச் செல்வர்கள் இவர்களின் சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அம்பிகை கோயிலுக்கும் தெற்கே ஆறுமுகர் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது. முருகன் மயில் மேலும், வள்ளி, தெய்வயானை இருபுறமும் இருக்கின்றனர். இதற்கும் தென்புறம் சுரஹரேசர் கோயில் உள்ளது. மூன்று கால்கள், மூன்று கைகள்,

ஜ்வரஹரேசர்



அமுத லிங்கம்

மூன்று தலைகளுடன் நடனக் கோலத்தில் காட்சியளிக்கிறார். இது சிவ மூர்த்தங்களுள் ஒன்று. இவரை வழிபட்டால் தீராத வெப்பு (சுர) நோயும் தீர்ந்துவிடும். இம்மூர்த்திக்கு செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் மிளகுரசம், அரைக்கீரைச் சுண்டல் இவைகள் படைக்கப்படுகின்றன.

கோயிலுக்குள் தென்கடைசியில்தான் சங்கமேசுவரர் திருச்சந்நிதி இருக்கிறது. கோயிலுக்கு வெளியில் தென்புறம் காவிரிக் கரையில் கிழக்கு நோக்கி காயத்திரிலிங்கக் கோயிலும், சகஸ்ரலிங்கக் கோயிலும் உள்ளன. இவைகளுக்குமேல்புறம் அமுதலிங்கேசர் கோயில் இருக்கிறது. தேவர்கள் அசுசுர்களுக்குப் பயந்து அமுதத்தை இங்கு கொண்டுவந்து மறைத்து வைக்க, அது இறுகிச் சிவலிங்கம் ஆனபடியால் இவருக்கு அமுதலிங்கர் என்று பெயர் வந்ததாம். இதன் அடியில்தான் அமுதநதி ஊற்றெடுத்துக் காவிரியுடன் கலக்கிறதாம். அமுதலிங்கம் சுயம்புமூர்த்தி தனியே ஆவுடையார் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. யாராவது பிரசவ வேதனைப்பட்டால் அந்த வீட்டுக்காரர் கள்வந்து இலிங்கத்தைத் திருப்பி வைத்துப் போனால் பிரசவ வேதனை குறைந்து விடுமாம். மகப்பேறில்லாதவர்கள் இந்த இலிங்கத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு ஆவுடையாரைச் சுற்றி வந்தால் மகப்பேறு உண்டாகும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. ஆதலின் இந்த சந்நிதி இரவு பகல் எந்நேரமும் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தலத்தைப்பற்றிப் பல நூல்களில் குறிக்கப் பெற்றிருக்கின்றது. **திருஞானசம்பந்தர்** தேவாரத்தில் பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் அருளி யிருக்கின்றார். முதல் பாட்டில் நாட்டுச் செழிப்பையும், 2, 3, 10-ஆம் பாடல்களில் ஆற்றுச் செழிப்பும், 3, 4, 9-ஆம் செய்யுட்களில் பிரமன், திருமால் வழிபட்ட செய்தியும், 7-ஆம் பாசுரத்தில் மாவிரதிகள் பூசித்தமையும் அருளப்பட்டிருக்கிறது. தேவாரப் பதிகத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் அருமைப் பாடு அமைந்து கிடப்பது கண்டு மகிழத் தக்கது. **சேக்கிழார்** பெரிய புராணத்தில், சம்பந்தர் இத்தலத்தை வணங்கிய பின்னரே குடக் கொங்கு நாட்டுப் பதிகளை வழிபடச் சென்றார் என்று கூறுகிறார். **அருணகிரிநாதர்** ஒரு திருப்புகழ்ப் பாடலை அருளியுள்ளார். ஓராட்டுக்குப்பை செட்டிபாளையம் மகாவித்துவான் **வாசுதேவ முதலியார்** என்பவர், "பவானி கூடற் புராணம்" என்னும் செய்யுள் நூலை

இயற்றியுள்ளார். அது பதினெட்டுச் சருக்கங்களும், 901 பாடல்களும் உடையது. குபேரன், பராசரர், வக்கிராசுரன், தருமசன்மன், விசுவாமித்திரன், தந்துவர்த்தனன், மருத்தன், பிங்கலை முதலியோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றதாக இப்புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. தமிழாசிரியர் கு. குமாரசாமிப் பிள்ளை யென்பார் "பவானி கூடற் புராண வசனம்" என்னும் உரைநடை நூலை எழுதி யிருக்கின்றனர். அவரே பவானி பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூலையும் யாத்துள்ளார். முகவூர்-நந்தசாமிக் கவிராயர் "வேதநாயகியம்மன் பிள்ளைத் தமிழ்" என்ற நூலை இயற்றியுள்ளார். இவ்வூரிலிருந்த பாலபாரதி - முத்துசாமி ஐயர் என்பவர் "நட்டாற்றீசர் சதகம்" என்ற நூலும், இறைவன் அம்பிகை இவர்கள் பேரில் பல கீர்த்தனங்களும் இயற்றி யிருக்கிறார். கோவை C. K. நாராயணசாமி முதலியார் "பவானி திருத்தல வரலாறு" என்ற ஆராய்ச்சி நூலை எழுதி யிருக்கின்றனர்.

மற்ற கோயில்களில் காணப்படுவது போல் இக்கோயிலில் கல்வெட்டுக்கள் அதிகமாக இல்லை. இம்முடிக்கட்டி முதலியார், கட்டி முதலியார் என்ற சிற்றரசர்களும், தேவராயன் என்ற தளவாயும் பலமண்டபத் திருப்பணிகள் செய்ததாகச் சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இறைவன் திருக்கோயில் தூண் ஒன்றில், திருப்பணி செய்த இம்முடிக்கட்டி முதலியார் அவர் மனைவியார் இவர்களின் திருவுருவங்கள் உள்ளன. அம்பிகை சந்நிதித் தூண் ஒன்றில் கட்டி முதலியார் துறவியொருவரிடம் திருப்பணிக்காகப் முடிப்புக் கொடுக்கும் நிலையில் சிலைகள் காணப்படுகின்றன. அம்மன் சந்நிதித்தூணில் உள்ள அழகிய ஒரு பெண் உருவத்தின் தலையில் தண்ணீரைக் கொட்டினால் அது சிரிப்பது போன்ற காட்சி யளிக்கின்றது, அதை, சிரிக்கும்சிலை என்று வழங்குகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வில்லியம் கியாரோ (William Garrow) என்ற கலெக்டர் கோயிலின் வட கோபுர வாயிலின் அருகே மாளிகையொன்று கட்டி வதிந்தனர். ஒருநாள் அவர் கனவில் பெண் ஒருத்திவந்து அவர் படுக்கையை விட்டு உடனே வெளியே வரும்படி சொல்ல

திருப்பணிக்குப் பொருள் வழங்கும் கட்டி முதலியார்

அவரும் அப்படியே செய்தார். மறுகணத்தில் அவர் படுக்கை அறைக்கு மேலிருந்த விட்டம் ஒடிந்து மேற்கூரை இடிந்து விழுந்துவிட்டது. வேதநாயகியம்மையே இப்படித் தம்மைக் காப்பாற்றியதாக எண்ணி அளவு கடந்த பக்தி கொண்டார். அதற்கறிகுறியாக பள்ளியறையில் வைக்க ஒரு தந்தக் கட்டில் செய்தளித்தார். அதில் "பவானிகூடல் சங்கமேசர் வேதநாயகியம்மைக்கு உவில்லியம் காரோதுரை மகனர் அளித்தது" என்று தமிழிலும், "W. Garrow, 1804" என்று ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவர் வதிந்த அக்கட்டிடம் இப்போது நாட்டாண்மைக் கழகப் பிரயாணிகள் விடுதியாக இருந்து நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

மேலும் அவர் நாள்தோறும் சென்று வேதநாயகி யம்மையைத் தரிசிப்பதற்காக அம்மன் சந்நிதிக்கு நேராக வெளிமதிற்சுவரில் தொளைகள் செய்யப்பட்டிருப்பதை இன்

றும் காணலாம். என்னே ஒரு வெள்ளேயரின் பக்திப் பெருமை!

சிற்றரசர்களான கட்டி முதலியார்கள் இக்கோயிலேக் கருங்கற்களால் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டினார்கள். காலத்தின் நெடுமையாலும் வெள்ளத்தின்கொடுமையாலும் சுவர்கள், மண்டபங்கள், உத்திரங்கள் இவை சரிந்தும், வெடித்தும், ஒடிந்தும் சிதைவுகள் ஏற்பட்டன. இவைகளேப் புதுப்பிப்பதற்காக, கூகலூர் திரு. K. K. சுப்பண்ணக் கவுண்டர் அவர்கள் தலேவராகவும், காசிப்பாளேயம் திரு. M. A. ஆய்க் கவுண்டர், பவானி திரு. T. K. இராமசாமிக் கவுண்டர் இவர்கள் செயலாளர்களாகவும், இன்னும் சில உறுப்பினர்களும் கொண்ட திருப்பணிக்குழு ஒன்று திவிரமாக ஈடுபட்டிருக்கின்றது. ஏழு இலட்சம் ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு லட்ச ரூபாய்வரையில் செலவாகித் திருப்பணி விரைவாக நடந்து வருகின்றது. நாட்டரசன் கோட்டைப் பரம்பரைச் சிற்பிகள் குடும்பத்தைச் சேர்ந்த திரு. இராஜரத்தின ஸ்தபதியார் மேற்பார்வையில் இத்திருப்பணி நடக்கின்றது. ஆற்றங்கரையோரச் சுவர்களும், படிக்கட்டுகளும் ரூ 47,000 செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. யாத்திரிகர்கள் தங்க நான்கு விடுதிகள் கோயில் வடக்கு வாயிற்புறத்தில் சுமார் ரூ. 30,000 செலவில் கட்டப்பெற்றிருக்கின்றன. பவானித் திருக்கோயிலின் திருப்பணி விரைவில் இனிது நிறைவேற பண்ணார் மொழியம்மை உடன் கூடிய நண்ணாவுடையார் திருவருள் பாலிப்பதாக.

கலேமேவு ஞானப் பிரகாச
கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலேமேவு மாயக் குறமாதின்
மணமேவு வாலக் குமரேசா
சிலேவேட சேவற் கொடியோனே
திருவாணி கூடற் பெருமாளே

—அருணகிரிநாதர்.

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம், திருப்புல்லாணி ஸ்ரீ பத்மாஸனித் தாயார் சமேத ஸ்ரீ ஆதிஜெகந்நாதஸ்வாமி ஆலயத்தில் திருமங்கையாழ்வார் அருளிய திருப்புல்லாணி பதிகங்கள் கல்வெட்டுத் திறப்புவிழா இராமநாதபுரம் இராஜா திரு. ஆர். ஷண்முகராஜேஸ்வர நாகநாதசேதுபதி அவர்கள் தலேமையில் சென்னே அறநிலேயப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ. பி. எல்., அவர்களால் 28-10-59-ல் திறந்துவைக்கப்பட்டது. சென்னே அறநிலேயப் பாதுகாப்புத்துறை ஆணேயர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் திருஉத்தரகோசமங்கை ஸ்ரீ மங்களநாயகிசுவாமி சமேத மங்களநாத சுவாமி ஆலயத்தில் திருப்பணி கல்நாட்டு விழா, இராமநாதபுரம் இராஜா திரு. ஆர். ஷண்முகராஜேஸ்வர நாகநாதசேதுபதி அவர்கள் தலேமையில் சென்னே அறநிலேயப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ; பி. வல்., அவர்களால் 28-10-59-ல் துவக்கிவைக்கப்பெற்றது. சென்னே அறநிலேயப் பாதுகாப்புத்துறை ஆணேயர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களும் கலந்துகொண்டார்கள்.

✳ இயற்பகை நாயனர் ✳

இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்

—சுந்தரர் திருத்தொண்டத் தொகை.

செய்தவர் வேண்டிய தியாதுங்
கொடுப்பச் சிவன்ற வனுய்க்
கைதவம் பேசிநின் காதலி
யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன்
வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட்
டினத்து வியற்பகையே

—நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி.

பொன்னிமா நதிப் புனல் பரந்துவளங் கொழிப்பது சோழ நன்னாடு. அந்நாட்டின் தலைநகர் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் உள்ள பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம். அது சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து நகரங்களில் ஒன்றாகவும் விளங்கியது. அப்பதியில் வணிகர் குடிமுதல்வர் ஒருவர் இருந்தார்; சிவபெருமான் அடிமைத் திறத்துச் சிறந்தவர்; சிவனடியார்கள் எவை கேட்கினும் இல்லையென்னாது கொடுக்கும் இயல்பினர்; இயற்கையார் என்ற பெயரினர். இறைவனடியார் எண்ணிய வெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு இயற்பகையார் இல்லறம் நடத்தி வந்தார். அப்படி வருகின்ற நாளிலே சிவபெருமான் ஒரு தூர்த்த மறையவர் வேடங்கொண்டு, இயற்பகையாரின் இல்லையென்னாத தன்மையை உலகினுக்குக் காட்ட வேண்டி அவர்பால் நண்ணினர். இயற்பகையார் அன்பொடு எதிர்சென்று வணங்கி, "தாங்கள் எழுந்தருளியது எங்கள் முன் தவத்தின் பயன்" என்று முகமன் கூறினர்.

வந்த மறையவர், "சிவனடியார்கள் வேண்டிய எவையும் நீர் மறுக்காது கொடுக்கும் உண்மையைக் கேட்டு உம்பால் வந்தோம். நம்பால் ஒன்று வேண்டும். அதற்கு நீர் இசைந்தால் சொல்கிறோம்" என்று வணிகப் பெருமகனரிடம் சொன்னர். "என்னிடத்துள்ளதை எதைக்கேட்டாலும் கொடுக்கச் சித்தம்; இதில் ஐயப்பாடு வேண்டாம்" என்றார் இயற்பகையார். "உம் காதல் மனைவி வேண்டும்" என்றார் அக்கைதவ மறையோர். "என்னிடத்தில் உள்ள ஒரு பொருளையே தாங்கள் வேண்டியது யான் செய்த பேறு" என்று நாயனர் கூறி, மனைவியை நோக்கி, "பெண்ணே! இம்மெய்த்தவர்க்கு உன்னைக் கொடுத்தேன்" என்றார். முதலில் கலங்கிய மனைவியார் பின்னர் தெளிந்து, "நீர் இன்று இட்ட ஆணை இதுவேயானல் உயிர்நாதராகிய தாங்கள் அருளிச் செய்தவாறே செய்வதைத் தவிர்த்து எனக்கு வேறு உரிமையுண்டோ" என்று கூறிக் கணவனை வணங்கினர்: நாயனரும் அம்மையாரை எதிர் வணங்கினர்.

மாதவர்க்கு மனைவியாரை அளித்த நாயனர் "யான் இன்னும் செய்யவேண்டும் பணியுளதோ" என்று வேதியரை நோக்கி வேண்டினர். "நாம் உம் மனைவியை அழைத்தேக உற்றாரும் ஊராரும் தடை செய்யாமல் காப்பதற்கு எம்கூட நீர்வரவேண்டும்" என்று பணித்தார் அச்சிவ மறையவர். அவ்வாறே செய்வதாகக் கூறிக்கச்சணிந்து கத்திகேடயம் தாங்கி அவர்களுடன் புறப்பட்டார் இயற்பகையார். இருவர் சுற்றத்தாரும் "இயற்பகையார் பித்தனனல் அவன் மனையை ஒருவன் கொண்டு போகவிடுவதா" என்று கூறி உற்ற பெரும்பழியினின்றும் மீட்க வந்து சூழ்ந்தனர்; வேல், வில், வாள், சுரிகை முதலியவைகளுடன் வந்து வளைத்துக் கொண்டனர்; "போகாதே; நில், எங்கள் குலக்கொடியாகிய பெண்ணை விட்டு, உன் செயலால் விளைந்த பழியை ஒழிப்பாயாக" என்று அந்தணரைப் பார்த்துக் கூறினர். ஐயர் அஞ்சினவர்போல் அம்மையாரை நோக்கினர். அவ்வம்மையாரும் "இறைவனே! அஞ்சவேண்டாம். இயற்பகை வெல்லும்" என்றார். நாயனரும் "இவர்கள் எல்லோரையும் பூமியிற் சாய்த்து விடுவேன். மனம் தளர வேண்டாம்" என்றார். சுற்றத்தாரை நோக்கி "ஓடிப்போய்ப் பிழையுங்கள். இல்லையேல் என் வாளுக்கிரையாவீர்கள்" என்றும் எச்சரித்தார். உறவினர்கள், "இயற்பகையே! என்ன செயல் புரிந்

தாய்? நாட்டவர்க்கு வரும் பழியும், பகைவருடைய நகைப்பும் கண்டு நாணமடையவில்லை. மனைவியை மறையவனுக்குக்கொடுத்துவிட்டு வீரம் பேசுகின்றாய். இதனால் யாங்கள் சாகநேரினும் உன் மனைவியைப் பனவன்பால் விடமாட்டோம்'' என்று கூறினார்கள். "உங்களையெல்லாம் கொன்றுவிட்டு இம் மறையவரை அனுப்பி வைப்பேன்'' என்றார் நாயனார். சுற்றத்தார் வேதியரையும் அம்மையாரையும் போகவொட்டாமல் தடுத்தார்கள். இயற்பகையார் கோபம் பொங்கினவராய் அவர்கள் மீது பாய்ந்து வலசாரி இடசாரியாக மாறிமாறி வெட்டி வீழ்த்தினார். தலைகள் உருண்டன; குடல்கள் சரிந்தன; உடல்கள் துணிபட்டன. ஓடிப் பிழைத்தவர் தவிர மற்ற யாவரும் உயிர் இழந்தனர். எஞ்சி நின்றவர் இயற்பகையாரும் அவருடைய வாளுமே. "எல்லாரும் ஒழிந்தனர். அடிகள் நீவிர் அஞ்சாவண்ணம் இச் சோலை தாண்டி விடுவேன்'' என்று கூறினார் நாயனார். அப்படியே மூவரும் சென்றனர். திருச்சாய்க்காடு என்னும் ஊரை அண்மியதும் மறையவர் நாயனாரைத் திரும்பிப் போகும்படி சொன்னார். அடி வணங்கி விடை பெற்றகன்றார் இயற்பகையார். "பொய்யில்லா உள்ளம்படைத்தவன்; திரும்பிப் பார்க்காமலும் போகின்றான்'' என்று கூறி இறைவனும் மறையவர் நாயனாரை மீண்டும் அழைப்பாராயினர். "இயற்பகைமுனிவா ஓலம்! மீண்டும் நீ வருவாய் ஓலம்! அயர்ப்பிலாதானே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்! செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்!'' என்று ஓலமிட்டார். இயற்பகையார். "வந்தேன் வந்தேன் பிழைத்தவர்கள் உண்டானால் அவர்களையும் ஒழித்துவிடுகிறேன்'' என்று விரைந்தார். அவ்வளவில் மறையவர் மறைந்தார். அம்மையார் தனி நின்றார். உமையம்மாருடன் இடபவாகனத்தில் சிவபெருமான் வானத்தினின்றும் காட்சியளித்தார். நாயனார் பார்மிசை விழுந்தார்; எழுந்தார்; தொழுதார்; வாழ்த்தும் வகையறியாது தயங்கினார்; இறைவன் தம்மை ஆட்கொள்ளும் வண்ணம் இதுவோ எனப் புகழ்ந்தார். விடைக் கொடி பாகரும்,

"எண்ணிய உலகுதன்னில்
இப்படி நம்பாலன்பு
பண்ணிய பரிவுகண்டு
மகிழ்ந்தனம்; பழுதிலாதாய்!
நண்ணிய மனைவியோடு
நம்முடன் போதுக''

என்று திருவாய் மலர்ந்தருளி, சிதாகாசமான பொன்னம்பலத்துக் கெழுந்தருளினர். இயற்பகையாரும் அவர் மனைவியாரும் இறைவனுடன் நீங்காமல் இருக்கும் பேறு பெற்றனர். பகைத்துப் போர் செய்து இறந்த சுற்றத்தவரும் வீரசுவர்க்க இன்பம் பெற்றனர்.

"இயற்பகையாரின் மனைவியை இறைவன் கேட்டதும் சரியன்று, அவர் கொடுத்ததும் ஒழுங்கன்று'' என்று அவர் வரலாற்றின் உண்மைத் தத்துவத்தை உணராதவர்கள் கூறுகின்றனர். இறைவனடியவர் எப்பொருளைக் கேட்கினும் கொடுக்கும் வள்ளன்மை பூண்டவர் இயற்பகையார். அதையே தம் சிறந்த கடமையாகவும் கொண்டிருந்தார். அவர் பெருமையை உலகுக்குக் காட்டத்திருவுளம்பற்றினார் இறைவன். எளிதான ஒரு பொருளைக் கேட்டுக் கொடுக்கப் பெற்றால் அதனால் பெருமையை வெளிப்படுத்திக் காட்டமுடியாது. கேட்கக் கூடாத ஒன்றை, கொடுக்கமுடியாத ஒன்றைக் கேட்டுப் பெறுவதால் உண்டாகும் பெருமையே தனிச் சிறப்புடையது. அத்தகைய பொருள் ஒருவனிடம் மனைவியே யன்றி வேறில்லை. அதனையே கேட்டார் ஆண்டவன்; இல்லையென்னாது ஈந்தார் இயற்பகையார். அதனாலன்றோ செயற்கரிய செயல் செய்த அவர் புகழ் என்றும் நின்று நிலவுகிறது. இல்லையேல் அவரை நினைப்பதற்கும் இடமுண்டோ?

எழிலாருங் காவிரிப்பூம் பட்டினத்து
வியல் வணிகர்
இயற்பகையார் இருவர்தேட
அழலாய பிரான்றூர்த்த மறையோனாகி
யாயிழையைத்
தரவேண்டி யணையவையன்
கழலாரப் பணிந்துமனைக் கற்பின்
மேன்மைக் காதலியைக்
கொடுத்தமர்செய் கருத்தால்வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து
மீளப் பிஞ்ஞகனார்
அழைத்தருளப் பெற்றுளாரே

—திருத்தொண்டர் புராண சாரம்.

[இயற்பகை நாயனார் திருநட்சத்திரம் - மார்கழி உத்திரம்.]



சென்னிமலை அடிவாரம்—கயிலாயநாதர் கோயில்

158334

சென்னிமலை

பகலி ரவினிற் றடுமாறு
  பதிகு ருவெனத் தெளிபோத
ரகசிய யமுரைத் தநுபூதி
  ரகித நிலைதனைத் தருவாயே
இகப ரமதற் கிறையோனே
  இயலி சையின்முத் தமிழோனே
சகசி ரகிரிப் பதிவேளே
  சரவ ணபவப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

கொங்கு நாடு சங்க காலத்திலிருந்தே பெருமை பெற்றிருந்த தென்பதற்குச் சங்க இலக்கியங்களே சான்று தருகின்றன. சேர அரசர்களாலும், குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்ததென்பது வரலாறறிந்த தொன்று. மலைவளம், நீர்வளம், நிலவளம் நிறைந்தது. காவிரி, காஞ்சி, ஆன்பொருநை யாறுகள் இதனை அணிபெறச் செய்யும். சென்னிமலை, சிவன்மலை, மருதமலை, கொல்லி மலை, வைகைப் பொன்மலை, பொன்னூதிமலை, கொங்கணவர்மலை, ஒதியூர்மலை, வெள்ளிமலை, வராகமலை, தலைமலை, வெண்ணெய் மலை, கஞ்சமலை, நாகமலை, ஆனைமலை, அலைவாய் மலை, குருடிமலை, குருந்தமலை, தோகைமலை, திரிமூர்த்திமலை, சேர்வராயன் மலை, பவளமலை, புகழிமலை முதலான முருகப் பெருமான் கோயில் கொண்டருளும் குன்றுகள் பல படைத்த பெருமையுடையது.

கொங்கு மண்டலம் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; அவற்றுள் **பூந்துறை நாடு** என்பது ஒன்று. அந் நாட்டின் நடுநாயக

மாய்த் திகழ்வது **சென்னிமலை** என்னும் முருகன் திருப்பதி. இதை,

> திணிமுடிச் சேடனும் வாயுவும்
> தர்க்கித்துச் செம்பொனொளி
> ரணிமக மேருவைச் சுற்றுகை
> யாலம் மலையினுச்சி
> நணுகிய கையி லடிப்பட்டுப்
> பூந்துறை நாட்டில் விழ
> மணிமுடி சென்னி மலையா
> னதுங்கொங்கு மண்டலமே

என்று கொங்கு மண்டல சதகம் கூறும். சென்னி மலை ஈரோட்டிலிருந்து தெற்கே 18 கல் தொலைவிலுள்ளது. ஈரோடு—கோயம்புத்தூர் இருப்புப் பாதையில் ஈங்கூர் என்ற புகை வண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஐந்து கல் தூரத்திலிருக்கின்றது.

சென்னிமலை என்பதை வடமொழியில் சிரகிரி என்பர். அருணகிரிநாதர் திருப்புகழில் அவ்வாறே கூறியுள்ளார். சென்னிமலை என்றால் தலைமையான மலை என்று பொருள். இது மேருவின் ஒருபகுதி யென்பது ஐதீகம்,

சென்னிமலை என்ற மலையின் பெயரையே அதன் அடிவாரத்திலுள்ள ஊருக்கும் வழங்கலாயிற்று. மலைபாம்பு படுத்தாற்போல கீழ் மேலாக இருக்கிறது. மலைசுற்று பத்து கல் தொலைவு. மலையின் பரப்பு 1700 ஏக்கர்கள். மலை உச்சி கடல் மட்டத்திற்குமேல் 1749 அடி உயரம். அடி வாரத்திலிருந்து மேற்கோயிலுக்குச் செல்லும் பாதை செங்குத்தாக இல்லாமல் யாவரும் எளிதில் ஏறிச் செல்லுமாறு அமைந்திருக்கிறது. பொதுமக்களின் நன்கொடையால் இதுவரை கீழிருந்து சுமார் 600 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பாதிக்குமேல் அப்படியாக வேண்டும். மலையின் தென்புறம் இயமன் வழிபட்ட செவ்வந்தகேசுவரர் கோயில், மலையின் கன்னி மூலையில் இந்திர விநாயகர் கோயில், ஊர்ச் சிவன் கோயிலுக்கு மேற்கில் திருமால் கோயில், வடமேற்கில் நிர்த்தனவிநாயகர் கோயில், துர்க்கை கோயில், ஈசான திக்கில் காமாட்சியம்மை கோயில், அக்கினி திசையில் மாரியம்மன் கோயில், தெற்கில் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில் இவைகளுக்கெல்லாம் நடு நாயகமாய்க் கைலாய நாதர் கோயில் முதலியன திகழ்கின்றன.

மலைமேற் செல்லும் பாதையில் அடிவாரத்தில் காண்பது **மயில்வாகனக் கொறடு.** இதை விஜய நகரமன்னர் கட்டினர் என்பர். இவ்விடத்தில்தான் பக்தர்கள் முடியெடுத்துப் பின்னரே பிரார்த்தனை முடிக்க மலையேறும் வழக்கம் இருந்து வருகின்றது. அதனையடுத்து, முகப்பில் இரண்டு யானைகள் பொருத்தப்பெற்று இந்திர விநாயகர் சந்நிதியுள்ளது. இவரை **நல்ல கிணற்று விநாயகர்** என்றும் மக்கள் வழங்குகின்றனர். இதற்கு அண்மையில் **செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில்** இருக்கிறது. இதன் அக்கினி மூலையில் **குமார தீர்த்தம்** என்ற கிணறு இருக்கிறது. இந்திர விநாயகர் கோயிலுக்கு மேற்கே ஒரு தெப்பக் குளம் படிக்கட்டுகளுடன் காணலாம். படிக்கட்டுகளை அமைத்தவர் வேட்டுவ பாளையம் பூசாரியார் வேளாளத் தம்பிரான் என்ற முருகன் தொண்டர். இத்தீர்த்தத்திற்கு **மார்க்கண்டேய தீர்த்தம்** என்று பெயர். இந்தத் தண்ணீரை மலைப்பாதைத் தொடக்கம், நடு, மலைமேல் குழாய்கள் மூலம் கொண்டு போய் மக்கட்குப் பயன்படும் வகையில் தேவஸ்தானத்தார் அமைத்திருக்கின்றனர்.

மலையில் சில படிகள் ஏறியவுடன் கடம்பவனேசுவரர் (இலிங்கம்), **கந்தர், இடும்பன்** இவர்கள் ஒரே வரிசையில் அமைந்த சந்நிதிகளைக் காண்கிறோம். சற்று மேலே சென்றதும் **வள்ளியம்மன் பாதம்** என்ற மண்டபத்தை யடைகிறோம். இதையும் கடந்து மேற் சென்றால் **இளைப்பாற்றி** மண்டபம் இருக்கிறது. மக்கள் சற்று இளைப்பாறுவதற்குப் பயன் படுகிறது. இதற்கும் மேலே சாவான் கோயில், இதில் முத்துக்குமார சாவான் என்னும் மலைக்காவலர் சந்நிதியிருக்கிறது. இவர் நவவீரருள் ஒருவர்; முத்துவல்லியின் மைந்தர். ஒருகையில் வைத்திருக்கும் கத்தி கழுத்தின்மேலும், மற்றொரு கத்தி இடையிலுமாக வீரனாகக் காட்சி தருகிறார். சாவான் கோயிலுக்கு மேலே **ஆற்றுமலை விநாயகர்** சந்நிதியுள்ளது. இவரை ஆத்தி விநாயகர் என்றும், ஆதிவிநாயகர் என்றும் அழைப்பர். சென்னிமலைத் தலபுராணத்துக் காப்புச் செய்யுளில் பாடப்பெற்றிருப்பவரும் இக்கணேசப் பெருமான்தான்.

இந்த விநாயகர் கோயிலுக்குமேலே, சிறிய நீண்ட இலைகளுடன் கூடிய **துரட்டி** மரம் என்ற மரம் இருக்கிறது. மிகப் பழைய

மரம்-ஆனால் இலைகள் தளிர்த்திருக்கின்றன. மலையிலுள்ள பல சித்திப் பொருள்களில் இதுவுமொன்று. பேய், பிசாசு பிடித்தவர்கள் இதற்குமேல் செல்ல முடியாது. அவைகளை ஒட்டித் துரத்துவதால் துரட்டி என்ற பேர் பெற்றதென்பர்.

இதைத் தாண்டிச் சென்றால் சென்னி மலை ஞானதாண்டாயுதபாணி எழுந்தருளி யுள்ள திருக்கோயில் காட்சியளிக்கிறது. கோயிலுக்கு முன்னே பெரிய புளி மரமும் அதனடியில் விநாயகரையும் காணலாம். கோயிலுக்கு வாயிற் கோபுரம் இல்லை. வாயிலைக் கடந்து உள் நுழைந்ததும் எதிரில் தோன்றுவது பாரவேல் (பராசக்தி). தெற்குப் பிரகாரத்தில் மார்க்கண்டேசுவரர், இமையவல்லி சந்நிதிகளும், தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும், வடக்குத் திருச்சுற்றில் காசிவிசுவநாதர், விசாலாட்சியம்மன் சந்நிதிகளும் இருக்கின்றன. இவைகளுக்குக் கிழக்கே ஸ்தல விருட்சமான புளிய மரம் இருக்கிறது. இம்மரத்தினூடே சந்தானகரணி என்னும் சித்திப் பொருள் இருக்கிறதாக ஆன்றோர் கூறுவர். புத்திரப் பேறில்லாதவர் இம்மரத்துக் காற்றுப்படும்படி இதன் கீழ் மா இடித்து, வள்ளியம்மை முன் மாவிளக்கேற்றினால் விரும்பும் பேறு பெறுவர் என்ற நம்பிக்கையுடன் இவ்வழக்கம் இன்றும் நடைபெறுகின்றது.

இவைகளின் நடுவே சென்னிமலை யாண்டவனின் திருச்சந்நிதி சிறந்து விளங்குகின்றது. ஞானதண்டாயுதத்தை வலது திருக்கரத்தேந்தி, இடது திருக்கரம் இடுப்பிற் பொருந்த பேரழகும், பேரொளியும், பெருங்கருணையும் ஒரு வடிவெடுத்தாலென்ன சென்னிமலை ஆண்டவன் தொண்டர்களுக்கு எழிற் காட்சி தந்தருளுகின்றனன். இதை,

குஞ்சித நிலைத்த சீரடி யிரண்டுங்
கோவண வுடையு மேகலையும்
விஞ்சு நூன் மார்பு மேத்திர முகமும்
விளங்குகைத் தலங்களுங் குழைதாழ்
செஞ்செவித் துணையுந் துணைமலர்க் கண்ணுந்
திகடனி வதனமும் பின்றாழ்
எஞ்சலின் சிகையுந் தோன்ற முன்னருள்மூ
விருமுக வுருவினு ளெடுத்தே.

சென்னிமலை மாமாங்க தீர்த்தம் 6-9-1958
பங்குனி உத்திரத்தன்று பொங்கியது.

எனச் சென்னிமலைத் தலபுராணம் கூறுகின்றது. இப்பெருமான் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

மலையாண்டவர் கோயிலுக்கு மேற்கே சில படிகள்மேல் ஏறிச் சென்றால் அமிருதவல்லி, சுந்தரவல்லி கோயில் இருக்கிறது. இவர்களே தவங்கிடந்து இறைவனை யடைந்து வள்ளி, தெய்வயானையானவர்கள். இரண்டு திருவுருவங்களும் ஒரே சிலையில் பிரபையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளின் நடுவில் கீழே ஒரு லிங்கமும் அச்சிலையிலே காணலாம். 'சென்னிமலை வேலவர்க்குச் சேர்ந்த கொம்பு இரண்டு உண்டு' எனக் காளமேகப் புலவர் நகைச்சுவை படக் கூறியிருக்கிறார்.

இந்த வள்ளியம்மை கோயிலுக்கு மேற்கே இன்னும் மேலே ஏறிச் சென்றால் அங்கு பராசக்தி (வேல்) கோயில் இருக்கிறது. அங்கு பலவேல்களும் வாள்களும் இருக்கின்றன. குற்றஞ் செய்து தண்டனை பெற்றுச் சிறை சென்று மீண்டோர் வேண்டிக்கொண்டு விலங்குகளை இந்த வேல்களில் தொங்கவிட்டிருக்கின்றனர். இதற்குப் பக்கத்தில் மலையின் கீழ் ஒரு குகை செல்கிறது. இதை அமைத்தவர் சரவண விரதமுனிவர் என்பவர். இவரே சென்னிமலைத் தலபுராணம் இயற்றியவர். பராசக்தி கோயிலின் மேல்புறம் புண்ணாக்கு சித்தரின் சமாதி இருக்கிறது. குகையில், சரவண முனிவர், புண்ணாக்கு சித்தர், சத்தியஞானி முதலியவர்கள் ஞானயோகம் புரிந்தனர் என்பர்.

இதை தன்னுசிஅப்பன் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.

இந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இயமன் தீர்த்தம், காசிப தீர்த்தம், பட்சிதீர்த்தம், நிருதிதீர்த்தம், சிவகங்கை (காசிக்கிணறு) மாமாங்க தீர்த்தம், வரடி தீர்த்தம், காளி தீர்த்தம், தேவி தீர்த்தம், செங்கழுநீர் வாவி, விஷ்ணு தீர்த்தம் (நெடுமால் சுனை), பிரம தீர்த்தம் (தேவர் பாழி), நவவீர தீர்த்தம், சாரதா தீர்த்தம், மார்க்கண்டேயதீர்த்தம் (தெப்பக்குளம்) முதலிய பல தீர்த்தங்கள் இத்தலத்திலுள்ளன. மலையின் பின்புறமுள்ள மலைச்சரிவில் மாமாங்க (மகாமக) தீர்த்தமும், பட்சி தீர்த்தமும் (பட்சிப் பாழி) தீர்த்தமும் இருக்கின்றன. மாமாங்க தீர்த்தம் (சுனை) பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை பங்குனி உத்திரத்தன்று பொங்கி வழிகிறது. சென்ற பங்குனி உத்திரத்தன்று இவ்வாறு நடைபெற்றது. மழையே இல்லாத காலத்தும் இந்தச் சுனை பொங்கி வழிகின்ற அற்புதம் நிகழ்கிறது. பட்சி தீர்த்தத்தில் இரும்பு சத்து இருப்பதால் அதில் நீராடுவோர் தோல் வியாதிகள் நீங்கப்பெறுகின்றனர்.

சென்னிமலை யாண்டவனுக்கு ஆறுகால பூசை நடைபெறுகிறது. சித்திரா பௌர்ணமி, ஐப்பசிக் கந்தசஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம் இத்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. அமாவாசை, சஷ்டி, கிருத்திகை முதலிய நாட்களிலும் மக்கள் வந்து வணங்கிச் செல்கின்றனர்.

மலையில் வெண்சாரை, வெண்தவளை, காணுச்சுனை, கையாத எட்டி, கருநொச்சி முதலிய சஞ்சீவி மூலிகைகள் இவைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

உடற்பிணி நீங்க வேண்டிப் பல தலங்கள் சென்று வழிபட்டு இத்தலத்தை வந்தடைந்து சென்னிமலை யாண்டவனை வணங்கி நோய் நீங்கப்பெற்ற சோழ அரசனை சிவாலயச் சோழன் (சிவலிங்கச் சோழன்) மலைக் கோயிலை அமைத்ததாகக் கூறப்படுகிறது. அவனே சோழநாட்டுத் திருக்கடவூரிலிருந்து தெய்வசிகாமணியார் என்று திருமறைபவரை இவ்வூருக்கருகிலுள்ள பிடாரியூர் என்னும் இடத்தில் குடியேற்றினன் என்று சொல்லப் படுகிறது. இப்பரம்பரையில் வந்து புகழ் பெற்று விளங்கும் வடமொழி தென்மொழி வல்லுநரான மகாமகோபாத்தியாய ஈசான சிவாச்சாரியார் அவர்களை நாடு நன்கறியும்.

பிற்காலத்தில் 17 முதல் 20 நூற்றாண்டு வரை பல திருப்பணிகளைச் செய்தவர்கள் செங்கத்துரை பூசாரியார், வேட்டுவ பாளையம் பூசாரியார் என்ற வேளாளத் தம்பிரான், இளம்பள்ளிஜமீன் பரம்பையினர் ஆவர். செங்கத்துரை பூசாரியார் உருவச்சிலை மலைமேல் கோயில் முன் மண்டபத்தில் இருக்கிறது. வேட்டுவ பாளையம் பூசாரியார் கட்டிய பெரிய மடம் மலையடி வாரத்தில் இருக்கிறது. ரூ. 50,000 திருத்தேர் செய்தமைத்தவரும், பல மான்யங்கள் வழங்கியவரும் அவரே. இப்போது மலைப் படிக்கட்டுகள் பல பொது மக்கள் நன்கொடையால் கட்டுப்பட்டு வருகின்றன. மேலே கோயில் திருப்பணியைச் செய்ய இப்போதுள்ள தருமகர்த்தர்களின் பெருமுயற்சியால் குழுவொன்றமைத்துத் தொடங்க இருக்கின்றது.

முருகப் பெருமானுக்குரிய பதினாறு திருமூர்த்தங்களும் இக்கோயிலில் காணப் பெறுவது தனிச் சிறப்புடையது. இத்தலத்தின் புராணத்தை இயற்றியவர் சரவண விரத முனிவர். இதில் 23 மான்மியங்களும் 667 திருவிருத்தங்களும் உள்ளன. சென்னிமலைப் பிள்ளைத்தமிழ், சென்னிமலை யாண்டவர் காதல், சென்னிமலை யமக வந்தாதி, மேழி விளக்கம் முதலிய நூல்கள் இத்தலத்தைப் பற்றியனவே. பிள்ளைத் தமிழை இயற்றியவர் வெள்ளோடு—குந்தாணிசாமிநாதப் புலவர் என்பவர்.

மலையடிவாரத்தின் ஊரில் அழகிய நாலு வீதிகள் நடுவில் கைலாயநாதர் கோயில் அமைந்திருக்கிறது. இக்கோயிலில் ஒரு சிறு பீடத்தில் 63 நாயன்மார்களின் உருவங்களும் செப்புச் சிலைகளில் அமைத்திருப்பது அவசியம் காணத் தக்கது. இவை சரவண மாமுனிவர் ஆன்மார்த்தமாகவைத்து வழிபட்ட தென்பர். இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவியின் திருநாமம் பெரியநாயகி என்பது. கிழக்கு நோக்கிய கோயில் வாயிலை 5 நிலைகளுள்ள கோபுரம் அழகு செய்கிறது. மூன்று நிலைகளையுடைய மேற்கு வாசற் கோபுரமுமுண்டு.

சென்னிமலைக்கு வடக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள பிடாரியூர் என்ற ஊரில் சிவ பெருமான் ஆலயம் ஒன்றிருக்கிறது. இங்கிருந்துதான் முற்காலத்தில் அர்ச்சகர்கள் வந்து சென்னிமலை ஆண்டவர்க்கு நித்திய பூசைகள் செய்தனர் என்று தெரிகிறது. இவ்வூருக்கு பிராட்டியூர், திருவிருந்தாபுரம், காளிமா நகரம், சக்தீசுவரம், கமலேசுவரம் முதலிய பேர்கள் உண்டு. அருணகிரிநாதர்,

...திகழ்பரவு கஞ்ச னோடை
மதன் சிகரமும்பர் மேடை
செறியுமெழில் கோண்ட
[காளிநகராள்வோன்

...திருமுகமலர்ந்தநாதர்—அருள்
புரிகுழந்தை வேலர்
சிரகிரி யமர்ந்து வாழும் முருகோனே

...திமிலை தவிற்றும் துமிகள் முழக்கும்
சிரகிரி நிற்கும் பெருமாளே

என்று கூறியிருப்பது நோக்கத்தக்கது. பிடாரியூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் திருநாமம் திருமுகமலர்ந்த நாதர் என்பது; இறைவியின் திருப்பெயர் திருந்தார் குழலியம்மை. இக்கோயிலினுள்ளேயே நின்ற திருக்கோலத்தில் உபயநாச்சியார்களுடன் திருங்கண் நாராயணப் பெருமாள் சேவை சாதிக்கும் திருச்சந்நிதியும் இருக்கின்றது. இங்குள்ள ஆறுமுகக் கடவுளின் திருவுருவம் அற்புத சிற்ப வேலைப்பாடுடையது. இக்கோயிலுக்கு ஹைதர் அலி நவாப்பு பல நிலங்களை இறைமாக வழங்கியிருப்பது அம் மகம்மதிய மன்னனின் பரந்த நோக்கத்தைக் காட்டுகின்றது. இந்த கோயிலுக்குச் சற்று வடமேற்கில் தானுகவளர்ந்ததம்பிராட்டியம்மன் கோயில் இருக்கிறது. இங்கு திருநந்தா விளக்கு எப்போதும் எரிந்துகொண்டிருக்கிறது. இக்கோயிலுக்குப் பின்னால் உள்ள திடலில் ஒரு கல் தூணில் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். இவ்வூர் முன்னால் நகரமாக இருந்து அழிந்துவிட்டதற்குள்ள அறிகுறிகள் காணப்படுகின்றன.

கன்னியம் பிகைசேய் போற்றி
கலைமதிப் புலவா போற்றி
பொன்னியந் துறையா போற்றி
பூந்துறை நாடா போற்றி
இன்னில மியம்ப வானே
ரிறைஞ்சநான் விரிஞ்ச னேத்தும்
சென்னியங் கிரியில் வாழும்
தேவனே பொற்றி போற்றி

—சென்னிமலைத் தலபுராணம்

இராமேசுவரம், ஸ்ரீ இராமநாதசுவாமி ஆலய அலுவலகக் கட்டிட கல்நாட்டு விழா 26-10-59-ல் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ. பி. எல்., அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

◆ ◆ ◆ ◆

இராமசுவரம், ஸ்ரீ இராமநாத சுவாமி தேவஸ்தானத்தின் ஆதரவில் நடைபெறும் சிவாகம சித்தாந்த பயிற்சி வகுப்பு 25-10-59-ல் திரு. P. T. இராஜன் Bar-at-law M. L. C. அவர்கள் தலைமையில், சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் B.A.,B.L. அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. இவ்விழாவில் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கலந்துகொண்டார்கள்.



காரைமடை—அரங்கநாதப்பெருமாள் கோயில்

காரைமடை

கொங்குநாட்டில் தனித்திருமால் கோயில்கள் சிலவே இருக்கின்றன. அவைகளில் முக்கியமானதொன்று காரமடை என்பது. இப்பெருமாள் திருப்பதி கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசிப் பகுதியிலிருக்கிறது. கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் நெடுஞ்சாலையில் 18-ஆவது கல்லில் இருக்கிறது. இந்தப் பெயரையுடைய இருப்புப் பாதை நிலையத்திலிருந்து கோயில் அரை கல் தொலைவிலிருக்கிறது. இங்கு தங்குவதற்குப் பிரயாணிகள் விடுதி, சத்திரங்கள் முதலியவை இருக்கின்றன.

இவ்வூர், சுற்றிலும் மலைப்பள்ளத் தாக்குகள் நடுவே மேடான பாகத்தில் இருக்கின்றது. ஆனல் கோயில் அம்மேட்டின் நடுவில் பள்ளத்தில் அமைந்திருக்கிறது. ஆகையால் **காரைமடை** என்ற பெயர் வந்ததென்பர். காரைப் புதர்களின் உள்ளே எம்பெருமான் காணப்பட்டதால் **காரைவனம்** என்ற பெயரும் இதற்கு உண்டு.

கோயில் கிழக்கு நோக்கி யிருக்கிறது. வாயில் கோபுரம் இல்லை. ஆனல் வடக்கு சொர்க்கவாசற் கோபுரம் இருக்கிறது. இதை *1944*-ல் உதகமண்டலம் திருவேங்கடம் செட்டியார் என்பவர் கட்டினர். கோயிலில் ஒரே பிரகாரம்தான். பெருமாளின் திருநாமம் ஸ்ரீஅரங்கநாதசுவாமி; தாயார் திருப்பெயர் அரங்கநாயகி. பெருமான் சுயம்புமூர்த்தி. திருமுகம் மாத்திரம்தான் இருக்கிறது. ஆடுமாடு மேய்க்கும் தொட்டியன் ஒருவன் தனது காராம்பசு ஒன்று காட்டில் தன் பால் எல்லா வற்றையும் சொரிந்து விட்டு வருவது கண்டு அதைத் தெரிந்து கொள்ள ஒருநாள் அதைப் பின் தொடர்ந்தான்; காரைப் புதரில் சொரிவதைக் கண்டான்; புதரைத் தன் வாளால் வெட்டினன்; உடனே இரத்தம் பீறிட்டுவர

மூர்ச்சையானான். பிறகு எழுந்து இறைவன் திருமேனியைப் புதருள் கண்டான். எம்பெருமான் திருமுடியில் வாள்வெட்டுக் காயமும் இருக்கிறது. இதுவே இத்தலத்தின் வரலாறாக வழங்குகிறது.

பெருமாள் சந்நிதி அர்த்தமண்டபத்தில் **அழகுமாதவப்பெருமாள்** திருவுருவம் நின்ற கோலத்தில் தெற்கு நோக்கியிருக்கிறது. இது இவ்வூரினின்றும் சுமார் இரண்டுகல் தொலைவிலுள்ள பெள்ளாரி என்ற இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தெற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கி அரங்கநாயகித் தாயார் சந்நிதி இருக்கிறது. இதே பிரகாரத்தில் சந்தான கிருஷ்ணன், பரவாசுதேவர், ஆழ்வாராதியர் சந்நிதிகளும் இருக்கின்றன. மேற்குப் பிரகாரத்தில் **பிரமதீர்த்தமும்** (கிணறு), ஸ்தலவிருட்சமான காரைச்செடியும் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள் தனிச் சந்நிதியிருக்கிறது. வடக்கு நோக்கி அனுமார் சந்நிதி இருக்கிறது. சிலை தங்க ரூபமாகக் காட்சியளிக்கிறது. இன்னும் வடக்குப் பிரகாரத்தில் திருக்கல்யாண மண்டபமும், உடையவர் சந்நிதியும் இருக்கின்றன. கோயிலுக்குள்ளிருக்கும் பிரம தீர்த்தத்தையன்றி கோயிலுக்கு மேற்கே இருப்புப்பாதையை யடுத்து **கருடதீர்த்தம்** என்ற ஒன்றும் இருக்கிறது.

பெருமாளின் கர்ப்பக் கிரகத்தின் தென் சுவரில் உள்ள **கோபாலகிருஷ்ணனும்**, வடபுறச்சுவரில் உள்ள **கோதண்டராமரும்** அழகிய சிற்ப வேலைப்பாடமைந்தவை. சந்நிதி முன் மண்டபத் தூண்களில் பத்து அவதாரங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தூணில் அழகிய விநாயகர் உருவமும் காணப்படுகிறது.

நாள்தோறும் மூன்று கால பூசை நிகழ்கிறது. மார்கழியில் பகல் பத்து, இராப்பத்து உற்சவம் நடைபெறுகிறது. மாசி மாதத்தில் தான் பெருந்திருவிழா. ஐந்தாம் நாள் திருக்கல்யாண உற்சவம். அர்ச்சகருக்கு ஆவேசம் வந்து அண்மையிலுள்ள பெட்டத்தம்மன் மலையிலிருந்து தாயாரை எழுந்தருளச்செய்து திருக்கல்யாணம் நடைபெறும். ஏழாம் நாள் திருத்தேர் விழா. தேரில் இராமாயணம் முழுவதும் சிற்பமாகச் செய்தமைக்கப்பட்டிருக்கிறது.

''ஸ்ரீ காரைமடை ஸ்தலபுராணம்'' என்னும் உரைநடை நூல் 1942-ல் சு.தி. அரங்கநாதாச்சாரியரால் நான்கு அத்தியாயங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. பிரமன்,இந்திரன், கருடன் இவர்கள் எம்பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றதும், மகாலட்சுமியின் திருக்கல்யாணமும் இந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது. இராஜபிளவையால் துன்புற்ற மதுரை திருமலை நாயக்க மன்னன் இங்குள்ள பெருமாளை வழிபட்டு நோய் நீங்கியதாகவும், அவனால் 1639-ல் கோயில், மதில், மண்டபம் முதலியவைகள் கட்டப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வூரில் இக்கோயிலையன்றி நஞ்சுண்டேசுவரர், வேணுகோபால்சுவாமி, கற்பக விநாயகர் இவர்கள் கோயில்களும் உள்ளன.

நஞ்சுண்டேசுவரர்கோயில்: காரைமடையில் உள்ள இந்த ஈசுவரன் கோயில் அவசியம் பார்க்கவேண்டியது; அற்புத சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது; அரங்கநாதர் கோயிலுக்குத் தென்புறம் அமைந்திருக்கிறது; கிழக்கு நோக்கியிருக்கிறது. மூலவர் இலிங்கமும் அதன் அடியிலுள்ள தளமும் ஒரே கல்லினால் ஆனது. ஆவுடையாருக்கும் கீழுள்ள அந்தக் கல் கர்ப்பக்கிரகம் உள் பரப்பு முழுவதையும் கொண்டது; $7\frac{3}{4}$ அடிக்கு $6\frac{1}{2}$ அடி உள்ளது. அர்த்த மண்டபத்தின் கீழே ஒரு சுரங்கமிருக்கின்றது. சந்திரசேகரர் உற்சவரின் திருமுடியில் கங்கை முழு உருவத்துடன் காட்சியளிக்கிறாள். சாதாரணமாகத் தலை மாத்திரம்தான் மற்ற உருவங்களில் நாம் காண்கிறோம். அம்பிகை சந்நிதி இறைவன் சந்நிதிக்கு வடபுறம் இருக்கிறது. **உலகநாயகி, உலோகாம்பிகை** என்பவை தேவியின் திருப்பெயர்கள். வடக்குப் பிரகாரத்தில் ஒரேகல்லில் செய்யப்பட்டுள்ள சிவபெருமான் பார்வதி-வேடுவர் வேடுவச்சி உருவங்கள் மிக அழகானவை. இறைவன் கோயில் கர்ப்பக்கிரகம் - மதுரையைப்போல் - அஷ்டகஜமுடையதாகக் கட்டப்பட்டு விமானம் கட்டப்பெறுமலே நின்றுவிட்டது. தெற்கு, மேற்கு, வடக்குச் சுவர்களில் சுமார் ஆறடி உயரமுள்ள ஆறு யானைகள் காட்சி தருகின்றன. யானைகளின் துதிக்கைகளின் இருபுறமும் பாலசுப்பிரமணியம், இடபாரூடர், காளி, பிரமன், திருமால்-திருமகள் இவைகள் இருக்கின்றன. ஒரு யானையின் துதிக்கையில்

நண்டு, யானை, மீன், தவளை, ஆமை இவ்வுருவங்கள் இருக்கின்றன. இன்னும் கர்ப்பக்கிரகச் சுவர்களில் உள்ள அகோர வீரபத்திரர், நிர்த்தன கணபதி, இடபாரூட உமா மகேசர், தண்டபாணி, மகிஷாசுரமர்த்தனி இவை அற்புதச் சிற்ப வேலைப்பாடமைந்தவை. இன்னும் சுற்றுவரிசையில் பெருச்சாளி, அன்னம், யாளி, மகரமீன், யானை, குதிரை, பாம்பு, மான், முதலை, ஆமை, கிளி, மயில், குரங்கு, நாய், பன்றி, புலி, அனுமான், நந்தி, ரிஷபகுஞ்சரம் இவைகளும் காணப்படுகின்றன. விநாயகர் ஒரு காலைத் தொங்கவிட்டு ஒரு காலை மடக்கிக்கொண்டு கையாலும் துதிக்கையாலும் கம்பு ஊன்றியிருக்கிற காட்சி வெகு அழகிது. இரண்டு மான்கள் பாய்வது, இரண்டு கிளிகள் கொஞ்சிக்கொள்வது, மச்சத்தின் வயிற்றிலிருந்து மச்சவல்லபன் பிறப்பது, ஆடு கும்பிடுவது, ஆண் சிங்கம் பெண் சிங்கம் நடுவே ஒரு வீரன் கத்தி கேடயத்துடன் சண்டைபோடுவது, மகாகாளி தாண்டவம், காளிங்கமர்த்தனம், நடராஜர், முருகன் இன்னும் எண்ணிறந்த பல சிற்ப வேலைப்பாடுடையவைகளையும் இக்கோயிலில் காணலாம்,

✱✱✱

செய்திகள்

சென்னை ஸ்ரீ சென்னமல்லீசுவரர், ஸ்ரீ சென்னகேசவப் பெருமாள் கோயிலில் நவராத்திரி விழா 2–10–59 முதல் 11-10-59 முடிய சிறப்பாக நடைபெற்றது. நவராத்திரி விழாவை 2-10-59 வெள்ளி மாலை 6-மணிக்கு அற நிலைய ஆணையாளர் உயர்திரு A. உத்தண்டராம பிள்ளை I. A. S. அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

✦ ✦ ✦ ✦

மதுரை தல்லாகுளம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி சுவாமி கோயில் பிரம்மோற்சவம் 2-10-59 முதல் 14-10-59 முடிய சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

தேவதானம், ஸ்ரீ நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம், 8-7-59-ல் தொடங்கி 12-7-59 ஞாயிறன்று சிறப்பாக நடைபெற்றது. மண்டலாபிஷேகம் 26-8-59-ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 18-9-59 இரவு 8-மணிக்கு ஸ்ரீ குமரன் சந்நிதியில் கூட்டு வழிபாட்டை அறங்காவலரும் சேத்தூர் ஜமீன்தாருமான திரு. V. T. S. சேவுகப் பாண்டியத்தேவர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். பிரதி வெள்ளிக் கிழமையும் கூட்டு வழிபாடு நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

✦ ✦ ✦ ✦

அரசாங்க மான்ய நிதி ரூ. 3,000 திருப்புகலூர் ஸ்ரீ அக்னீசுவர சுவாமி கோயில் நன்கொடை ரூ. 2,000 பொது மக்கள் நன்கொடையையும் கொண்டு, திருப்பனையூர் ஸ்ரீ சௌந்தரேசுவர சுவாமி கோயில் திருப்பணி வேலைகள் நடைபெற்று, 21-8-59-ல் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

காஞ்சீபுரம் மெய்கண்டார்கழக 25-ஆம் ஆண்டு நிறைவு வெள்ளி விழா 1-11-59 ஆம் தேதி பெரிய காஞ்சீபுரம் நிமந்தகாரத்தெரு ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகசுவாமிகளாதீன மடாலயத்தில் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. அ, உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவசமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன.

‘வாமனன் மண் இது!’

(வாமனுவதார வரலாறும் தத்துவமும்)

பி. ஸ்ரீ.

மகாபலி என்ற சக்கரவர்த்தி அசுர குலத்தைச் சேர்ந்தவன்தான்; எனினும் பல நல்ல குணங்கள் உடையவனுகத் திகழ்ந்தான். கொடுத்து உவக்கும் இன்பத்தை அறியாதவர்கள் அசுரர்கள் என்று கூறுவதுண்டு. ‘எடுக்கத் தெரியும், கொடுக்கத் தெரியாது; இது அசுரப் பண்பாடு’என்பர். நெஞ்சு இரக்கம் அறியாது; எனவே கைக்கு கொடுக்கத் தெரியாது; இது அசுர சுபாவம், அரக்கர் மனப்பான்மை என்பர். ஆனல் அசுரர் குலத்தில் பிறந்த மகாபலி வண்மை பொழிவதில் நிகரற்றவனுக விளங்கினன்.

முரண்பாடும் முரண்டும்

கொடுக்கத்தான் தெரியும், எடுக்கத் தெரியாது என்ற நிலையில் உள்ள வள்ளற் பெருமக்களும் உண்டு. ஆனல் மகாபலிக்கு கொடுக்கவும் தெரியும் எடுக்கவும் தெரியும்-- எடுத்துக் கொடுக்கத் தெரியும். திக்குவிஜயம் செய்து, தோற்றுப்போன அரசர்களிடமிருந்து ஏராளமான பொருளைக் கவர்ந்து கொண்டுவந்து, கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் மகாபலி.

திக்கு விஜயம் செய்யாமல் பலநாடுகளைப் பிடித்துக் கொள்ளாமல் ஒரு குடைக் கீழ் உலகாளும் சக்கரவர்த்தியாக வீற்றிருப்பதுதான் எப்படி? இத்தகைய அரசரும் அசுரரே என்று கூறுவதில்தான் என்ன தவறு?

பலிச் சக்கரவர்த்தியின் பெருங் குணங்களில் வண்மை முதலிடம் பெற்றிருந்தது. இரணியகசிபுவின் அசுரவம்சமானுலும் பிரகலாதனும் தோன்றிய வம்சத்தில் அல்லவா பிறந்திருக்கிறுன்? அரசு மகா பலத்தோடும், திக்கு விஜயம் செய்யும் பேயாசையோடும், அருளாளர்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்ற பேராசையையும் பெற்றிருந்தான் மகாபலி.

‘மகாபலி’ என்ற பெயரே இந்தச் சக்கரவர்த்தியின் மகாபலத்தைக் குறிப்பதுதான், காட்டுப் பன்றியின் முரட்டுத்தனத்தைப் பலரும் அறிவார்கள், மகாபலியோ திருமாலின் அவதாரமாகிய ஆதிவராகம் என்ற அந்தப் பன்றிபோல் அவ்வளவு பெருந்திறல் உடையனுக இருந்தானும்.

‘அசுரபலம் படைத்திருப்பதில் தவறில்லை; அசுரனைப்போல் அதை உபயோகிப்பதுதான் தவறு’ என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். மகாபலியைக் குறித்துக் கம்பனே,

‘ஏனம் எனும்திறல்
மாவலி என்பான்
வானமும் வையமும்
வவ்வுதல் செய்தான்

[ஏனம் - பன்றி. வவ்வுதல் - கவர்ந்து கொள்ளுதல்.]

என்று கூறி, மகாபலி செல்வம் சேர்த்துச் சக்கரவத்தியான கதையைக் குறிப்பிடுகிறுன்.

‘வலிமையே உரிமை’ (might is right) என்ற கொள்கையோடு செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவன்தான். ஆனல் இந்தச் செல்வத்தையெல்லாம் தனக்கும் தன் சந்ததிகளுக்கும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று இவன் நினைக்கவில்லை :

ஐயமில் சிந்தையன்
அந்தணர் தம்பால்
வையமும் யாவும்
வழங்க வலித்தான்.

[அந்தணர் - அருளாளரான முனிவர்கள். வலித்தான் - துணிந்தான்.] செல்வம் சேர்ப்பது பாத்திரம் பார்த்துக் கொடுக்கத் தான் என்பதில் ஒருவித ஐயமும் ஏற்படவில்லையாம் மகாபலிக்கு.

கொடுப்பது நல்லதுதானே; அருளாளர்களுக்குக் கொடுப்பது மிகவும் நல்லதல்லவா? எனினும், இவனைத் 'தீயவன்' என்றும், இவன் தொழில் 'வெந்தொழில்' (கொடுமையான தொழில்) என்றும் தேவர்கள் கருதினார்களாம்'. திருமாலிடம் போய்,

'தீயவன் வெந்தொழில்
தீர்'என நின்றார்.

தேவநாயகனாகிய திருமாலும் இக் கருத்தை ஒப்புக்கொண்டானும். ஏன்? சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

திருமால் காசிப முனிவனுக்கும் அதிதி என்ற அவன் மனைவிக்கும் ஒரு பிள்ளையாகப் பிறந்தான். ஒரு விசித்திரக் குள்ளனாகவே பிறந்து வளர்ந்தான். இப்படிக் குறுகி இருந்தாலும் நெடுமாலின் எல்லையற்ற தெய்வ சக்தி முழுவதும் இந்தக் குறள்-வடிவிலே அடங்கிக் கிடந்ததாம்.

நீல நிறத்து
நெடுந்தகை வந்(து),ஓர்
ஆல்அமர் வித்தின்
அருங்குறள் ஆனான்

[ஆல் அமர்வித்து - ஆலமரம் அடங்கிக் கிடக்கும் விதை - குறள். குள்ளன்] என்பது கம்பன் வாக்கு.

நீலநிறம் கடலின் நிறத்தையும் வானத்தின் நிறத்தையும் நினைவூட்டி, எல்லையற்ற பரம் பொருள் திருமால் என்பதை உணர்த்துகிறது. அந்த நீலமேனி நெடியோன் இந்தக் குள்ளனாகி வந்த முரண்பாடு சிந்தனைக்கு உரியது. மகாபலியின் குணாதிசயத்திலுள்ள முரண்பாட்டையும் முரண்டையும் திருத்துவதற்கு வந்த திருஉருவம் அல்லவா?

கள்ளனும் வள்ளலும்

திக்கு விஜயம் செய்து தேடிக் குவித்த செல்வங்களை யெல்லாம் 'எது கேட்டாலும் கொடுப்போம்!' என்ற மனத் துணிவாகிய முரண்டுடன் வாரி வழங்கிக் கொண்டிருந்த சக்கரவர்த்தியிடம் 'நாமும் போய்த் தானம் வாங்குவோம்' என்ற முரண்டு-மனோபாவத்துடன் வருகிறான் வாமனன்.

சக்கரவர்த்தி எதிர்கொண்டுவந்து உபசரிக்கிறான். 'உன்னைக் காட்டிலும் அந்தணர் இல்லை. என்னைக் காட்டிலும் பாக்கியசாலியும் இல்லை' என்று இச்சகம் பேசுகிறான். 'என்ன இப்படியும் ஒரு குள்ள வடிவமா?' என்ற வியப்பை—இகழ்ச்சி மனப்பான்மையை—உள்ளுக்குள் மறைத்துக்கொண்டே உபசார மொழி கூறுகிறானா?

முகஸ்துதிக்கு எதிராக முகஸ்துதி பேசுகிறான் குள்ளனும். 'ஆசைப்பட்டுத் தானம் வாங்க வருகிறவர்களின் ஆசைக்கும் மேற்பட வாரி வீசுகிறது அப்பா! உன்னுடைய கை' என்கிறான். 'உன்னிடம் யாசகத்திற்கு வருகிறவர்களே பாக்கியசாலிகள்; மற்றவர்கள் பாக்கியசாலிகளல்லர்!' என்கிறான். யாசகமும் மகாபலியின் மாட்சியால் மாட்சி பெற்று விட்டதாம்! 'இரத்தலும் ஒரு தொழிலோ?' என்ற அந்த இழிவும் இப்போது நிகரற்ற மேன்மையாகி விட்டதாம். ஆனால் இது குள்ளனின் மாட்சியா, மகாபலியின் மாட்சியா?

'இனி நான் செய்ய வேண்டியது என்ன? உனக்கு என்னதேவை?'

'மண்'

'எவ்வளவு?'

'மூவடி'

இப்படி முடிந்ததுதான் தாமதம்; கொடுத்து விடுகிறான் மகாபலிச்சக்கரவர்த்தி. தடுத்துப் பார்க்கிறான் அசுரகுருவும் மந்திரியுமான சுக்கிராசாரி.

குருவையும் மீறிக்கொடுக்கிறான்

'இது வஞ்சனை. குள்ளன் கள்ளன். ஆம், கள்ளத்தனமாக இப்படி வந்திருப்பவன் நெடியோனாகிய திருமால்!' என்கிறான் சுக்கிரன். 'அப்படியானால், பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலத்தான்!' என்று

பொருள்படப் பதில் சொல்லுகிறுன் மகா பலிச் சக்கரவர்த்தி.

'என் ஒருகை மேலே நிமிர்ந்துகொடுக்க, மகாவிஷ்ணுவே தாழ்ந்து இரு கைகளாலும் பெற்றுக்கொள்வதென்றால், அதைக் காட்டிலும் எனக்கு என்ன மேன்மைதான் கிடைக்க முடியும்?' என்று சொல்லுகிறுன் மகாபலி. 'கொள்ளுதல் தீது, கொடுப்பது நன்று' என்று குருவுக்கே உபதேசம் செய்கிறுன்.

மேலும் பேசுகிறுன் மகாபலி. 'செத்தவர்கள் செத்தவர்களில்லை; இருப்பவர்களெல்லாம் உயிரோடு இருப்பவர்களுமல்லவர்' இப்படி முரண்பாடு தோன்ற ஏதோ ஒரு புதிர் போடுவதுபோல் பேசியபின் இதற்கு விளக்கமும் தருகிறுன் :

மாய்ந்தவர் மாய்ந்தவர்
அல்லர்கள்; மாயா(து)
ஏந்திய கைகொ(டு)
இரந்தவர், எந்தாய்!
வீந்தவர் என்பவர் !
வீந்தவ ரேனும்,
ஈந்தவர் அல்வ(து)
இருந்தவர் யாரே?

[மாய்ந்தவர், வீந்தவர்—செத்துப்போனவர். எந்தாய்—எந்தையாகிய குருவே.]

இப்படித் தன் கொள்கையை விளக்கி வரும்போதே மகாபலிக்குக் குருமீது கோபம் பொங்கி விடுகிறது. குருவாகிய மந்திரியைச் சபிப்பதுபோல், 'கொடுப்பது விலக்கும் கொடியவர்களின் சுற்றமும் உடுப்பதும் உண்பதும் இன்றி ஒழியும் காண்!' என்றுன். இப்படிக் கடுமையாகச் சொல்லிவிட்டு, தன் பார்வையைக் குள்ளன் மீதே செலுத்துகிறுன். 'குருவே! இனி நான் உன் முகத்தில் விழிப்பதற்கும் வெட்கப்படுகிறேன்' என்பது குறிப்பு.

விசித்திர தானம்

விசித்திரக் குள்ளனை நோக்கிய சக்கரவர்த்தியின் உள்ளத்திலே, வெறுப்பு இல்லாவிட்டாலும் வியப்பு மேலும் அதிகரித்திருக்க வேண்டுமல்லவா? 'ஒரு நாட்டைக் கேட்கவில்லை; ஒரு கிராமத்தைக் கேட்கவில்லை; ஒரு

வாமன—திருவிக்கிரம அவதாரம்
நாமக்கல்—ஸ்ரீ நரசிம்மசுவாமிகோயில்

வீட்டையும் கேட்கவில்லை. பொன்னும் மணியும் கேட்கவில்லை. காணி நிலமும் கேட்கவில்லை. பூமிதானம் கேட்டவன் நிறையக் கேட்கலாதா?' என்ற எண்ணங்கள் வெள்ளமிடுவது இயல்புதானே? ஆனல் எண்ணிப் பார்ப்பதற்குத்தான் அவகாசம் எங்கே?

கொடையாளி வெட்கத்துடன், 'அடி ஒரு மூன்றும் நீ அளந்து கொள்க' என்று தானம் கொடுத்து விடுகிறுன். சக்கரவர்த்தி தன் காலால் மூன்று அடி மண் அளந்து கொடுக்கவேண்டும் என்று கூடக் கேட்கவில்லையே குள்ளன்! தன்னுடைய சின்னஞ்சிறிய அடிகளால் அளந்து கொள்ளக்கூடிய மூவடி மண்ணுக்காகத்தான் இப்படிக் குறுகி வந்து தானம் கேட்கிறுனும்.

'கொள்' என்கிறுன் சக்கரவர்த்தி. முறைப்படி தானத்தை உறுதிப்படுத்துவதற்

காகத் தண்ணீரைத் தாரை வார்க்கவும் சித்த மாகிறான். குள்ளன் கைநீட்டித் தானம் வாங்குவதை,

நெடியவன் குறியனை
நீரில் நீட்டினன்

என்று வருணிக்கிறான் கவிஞன். அவனும் துரிதப்படுகிறான்; இவனும் துரிதப்படுகிறான்! இருவரும் ஒருவரை ஒருவர் துரிதப்படுத்து வதையும் காண்கிறோம்.

அற்புத வளர்ச்சி

தானம் கிடைத்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக நீரைத் தீண்டியதும் குள்ளன் நிமிர்ந்து விடுகிறானாம். என்ன நிமிரல்! என்ன அற்புதமான வளர்ச்சி!

கயம்தரு நறும்புனல்
கையில் தீண்டலும்,
பயந்தவர் களும்இகழ்
குறளன், பார்த்(து) எதிர்
வியந்தவர் வெருக்கொள
விசும்பின் ஓங்கினான்,
உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே!

[கயம்-நீர்நிலை. நறும்புனல்-நல்ல தண்ணீர். குறளன்-குள்ளன். வெருக்கொள-பயப்பட. விசும்பின்-ஆகாயத்தில்.]

என்பது கம்பன் வாக்கு.

யாசகன் கூனிக்குறுகித்தானே இருப்பான்; தானப் பெற்றால் அந்த மகிழ்ச்சியில் நிமிர்ந்து நிற்பான். இது உலக இயல். இதை ஒட்டி வாமனாவதாரம் திரிவிக்கிரமாவதாரம் ஆனதை—குள்ளன் நெடியவன் ஆனதை—வருணிக்கத் தொடங்குகிறான் கவி. எப்படி நிமிர்ந்து விட்டான் என்பதையும் அதிசயமாக வருணிக்கிறான்.

பயந்தவர்களும் இகழத்தக்க நிலையில் இருந்தானாம் தானத்திற்கு வந்த சித்திரக் குள்ளன். எதற்கும் எவர்க்கும் பயப்படக் கூடிய கோழைகளும் 'இந்தக் குள்ளன் தலையில் ஒரு குட்டுக் குட்டிப் பார்க்கலாமே!' என்று நினைத்தார்களாம். அத்தகைய இகழ்ச்சி நிலையில் வந்தவன் இப்போது வானளாவ ஓங்கி நிற்கிறானே!—இதைக் கண்டு காட்டுகிறான் கவி.

இந்த வளர்ச்சி நிலையில் மூன்று முக்கியமான படிகளையும் காட்டி விடுகிறான். 'முதல் முதல் எல்லாரும் இகழத்தக்க நிலையிலிருந்தவன், அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, அவர்களது கண் எதிரே, வியப்பிற்கு உரியவனாகிறான். பிறகு பயத்திற்கும் உரியனாகிவிடுகிறான். முதல் முதல் இகழ்ச்சி; பிறகு பிரமிப்பு; கடைசியாகப் பெரும் பயம். எந்த உத்தமப்பேரியக்கமும் இப்படித்தானே வளர்ந்து விடுகிறது?

காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கமும் ஆதியில் இகழ்ச்சிக்கு உரியதாகவே தோன்றியது. ஆதிக்கம் செலுத்தியவர்களுக்கு மட்டுமல்ல; நம்மவர்களில் பயந்தவர்களுக்கும்தான். ஆனால் இகழ்ந்தவர்கள் அப்படியே புறக்கணித்து நிற்க முடியவில்லை. இயக்கத்தின் வளர்ச்சி கண்டு வியந்தார்கள்; கடைசியாகப் பயந்தார்கள்; பயந்தே போய் விட்டார்கள்!

குறளும் குறளனும்

இப்படி வளர்ந்து விடுகிறதாம் வாமனாவதாரம் திருவிக்கிரம அவதாரமாக.

உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே

என்கிறான் கவி. வள்ளுவர் வாய்மொழியின் எதிரொலி இது.

உதவியை அளந்து பார்ப்பதற்கு ஏதாவது ஒரு அளவுகோல் இருக்கிறதா? பத்து ரூபாய் கொடுத்தான் அல்லது பத்து லட்சம் கொடுத்தான் என்று குறிப்பிடுவதால், தொகையின் பெருமை கொண்டு உதவியின் அளவை வரையறுக்க முடிகிறதா? உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவே உதவியின் அளவு என்கிறார் திருவள்ளுவர்.

உயர்ந்தவர் தினையளவு உதவியையும் பனையளவாகக் கொண்டு போற்றுகிறார்கள் அல்லவா? ஒருவன் திடீரென்று ஒருசமயம் நமக்குச் செய்யும் உதவிக்கு, 'விண்ணையும் மண்ணையும் கைம்மாறாகக் கொடுப்பதும் ஈடாகாது!' என்றுகூடத் தோன்றுகிறதல்லவா? இக்கருத்துக்களை உள்ளடக்கித் திருவள்ளுவர்,

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

[வரைத்தன்று-அளவை உடையதன்று. செயப்பட்டார்-செயப்பட்டவரின். சால்பின் வரைத்து-பண்புக்கு ஏற்ற அளவை உடையது.]

என்று கூறியுள்ளார். கம்பனுக்கு இக் குறளை ஞாபகப்படுத்துகிறது குறளன் வளர்ச்சி.

உலகளந்த அதிசயம்

உயர்ந்தவர்க்கு உதவிய உதவிபோல் வாமனன் வானளாவ வளர்ந்து விடுகிறுனும். இப்போது இந்தக் 'குறளன்' தன் கால்களால் மூவடி மண்ணை அளந்து கொள்ள வேண்டுமல்லவா! ஆம் அளந்து கொள்கிருன் என்கிருன் கவிஞன். எப்படி?

நின்ற கால் மண்ணெலாம் நிரப்பி விடுகிறதாம். 'அப்புறம் சென்று பரவுவதற்கு இடம் இல்லையே; எவ்வளவு சிறியது இப் பூமி!' என்று அதே நிலையில் நிற்கிறதாம் ஒரு பாதம்.

மேலே சென்ற பாதமோ வானத்தையெல்லாம் அளந்து 'அந்த வானவெளியும் சிறிதுதான்!' என்று கண்டு பிடித்துத் திரும்பி விடுகிறதாம். வாமனன் மூன்று அடி அளந்து கொண்ட கதை இது!—என்கிருன் கவிஞன்

முதலாழ்வாரும் வாமனுவதாரமும்

கம்பன் சொல்லும் வாமனுவதாரக் கதையும் தத்துவமும் ஆழ்வாரின் நெஞ்சிலே ஊறிக் கிடந்து வாக்கிலே கனிந்தவை. முதலாழ்வார்கள் மூவருள் முதல்வரான பொய்கையார் வாமனுவதார வைபவத்திலும் ஈடுபட்டிருந்தார். 'இறைவனே! நீ உலகத்தை எப்படித்தான் அளந்தாயோ?' என்று அதிசயிக்கிருர். 'நீ அளவு கண்ட நெறியை நான் அளவிட்டுக் காணவல்ல அறிவுடையேன் அல்லேன்' என்கிருர்.

ஒரு நிலப்பகுதியைக் காலால் அளக்கிறவன் என்ன செய்கிருன்? நின்ற இடத்திலிருந்து அடுத்த இடத்தில் மாறிக் காலை வைத்துத் தானே அளக்கமுடிகிறது? நின்ற இடத்திலேயே நின்று கொண்டு 'நான் அளந்து விட்டேன்' என்று ஒருவன் சொன்னுல் நாம் நம்புவோமா? திருமாலோ தன் பேருருவத்தில் நின்ற இடத்தில் தானே நிற்கவேண்டியதாயிற்று? அப்படியானுல் உலகை அளந்ததுதான் எப்படி உண்மையாகும்? இது பொய்கையார் கேள்வி.

'சேவடியை நீட்டித் திசை நடுங்க விண் துளங்க, மாவடிவின் (பெரிய வடிவத்தோடு)' இறைவன் உலகம் அளந்த கதையில், எம் பெருமான் இப்படித்தான் உலகத்தைக் காப்பான் என்று ஒருவரும் வரையறுத்துக் கூற முடியாத விதமாகத் தன் இரட்சகத் தொழிலை நடத்துகிருன் என்ற உண்மை புலப்படுகிறது என்பர்.

மூவடி மண்கேட்டு ஓங்கி வளர்ந்து அளக்கவும் முடியாமல் நின்ற அதிசய நிலைக்கு ஓர் உபமானம் காட்டுகிருர் வியாக்கியான சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை. 'உதாரனுயிருப்பான் ஒருவன் நாலு பேருக்குச் சோறிட நினைத்து, நாற்பது பேருக்கு இட்டு மிகும்படி சோறு உண்டாக்குமா போலே' என்பது தான் இந்த உபமானம். உலகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற பெருங்காதல் இறைவனுக்கு உண்டு என்பது பொருள். 'உதாண்' என்றுல் வள்ளல். இறைவன் தான் வள்ளல், மகாபலி அல்ல என்ற குறிப்பையும் இங்கே காண்கிறோம்.

மகாபலியை வண்மைச் செருக்கு என்ற மதம் ஒழித்து ஆட்கொண்ட அருளைக் குறிப்பிடுகிறது வாமனுவதாரம். இந்தப் பெருமானைப் பற்றற்று அன்பு செய்யும் அடியவர்கள் காண்பது எளிது என்கிருர் பொய்கையார். உலகம் அளந்த திருவடிகளை அடைவதற்கும் வழி உண்டோ என்று கேட்பவர்களுக்கு இந்த ஆழ்வார்,

வந்திப்பார் காண்பர்
வழி

[வந்திப்பார் - வணங்குகிறவர்கள்; சரணம் அடைகிறவர்கள்.]

என்று பதில் சொல்கிருர்.

வாமனமூர்த்தியும் திருமழிசையாரும்

முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாரின் சீடரான திருமழிசையாரும் வாமனுவதாரத்தில் ஈடுபடுவதைத் 'திருச்சந்த விருத்'த்திலே பத்துப் பாசுரங்களில் காண்கி

றோம். வாமனனை இவர் "காணிபேணும் மாணி"—அதாவது பூமிதானம் வாங்க ஆசைப் பட்டுச் சென்ற ஏழைப் பிரமசாரி-என்கிறார். குள்ளனைக் 'கள்வன்' என்றும் குறிப்பிடு கிறார்.

ஆனால் உண்மையான கள்வன் வானத் தையும் வையத்தையும் கொள்ளை யடித்துச் சக்கரவர்த்தி ஆகிவிட்டவன் தான் என்பதும் உதார புருஷனாகிய வள்ளல் வாமன மூர்த்தி தான் என்பதும் குறிப்பு. ஆனால் ஸ்தூல மாகப் பார்க்கும் போது, 'இரக்க மண் கொடுத்தவற்கு (கொடுத்தவனுக்கு); இருக்க ஒன்றும் இன்றியே பரக்க (விஸ்தாரமாக) வைத்து அளந்து' கொண்ட கள்வன் என்று தானே தோன்றுகிறது?

'மண் அளந்துகொண்ட கால்' பட்சபாத மில்லாமல் உயிர்க்குலத்திற் கெல்லாம் அருள் புரிந்தது என்ற குறிப்பையும் திருமழிசை யாழ்வார் வாக்கிலே காணலாம். சக்கரவர்த்தி அல்லது சர்வாதிகாரியின் ஆதிக்கம் ஒழியும் போதுதான் மக்களும் தேவர்களும் நல்வாழ்வு வாழமுடியும் என்ற குறிப்பையும் இக் கதை யில் திருமழிசையார் உணர்த்துகிறாரோ என்று கருதவும் இடம் இருக்கிறது. அன்பர் களுக்கும் அடியவர்களுக்கும் சிறப்பாக அருள் புரிய வாமனாவதாரம் நிகழ்ந்தது என்ற அபிப் பிராயத்தையும் திருமழிசையார் வாக்கிலே காண்கிறோம்.

உலகளந்த திருவடிகளை நோக்கி இந்த ஆழ்வார், 'நடந்த கால்கள் நொந்தவோ?' என்று கேட்கிறார். அந்தச் சிரமம் தீர அந் தத் திருவடிகளைப் பிடிக்க ஆசைப்படுவது போல் அமைந்திருக்கிறது இவர் வாக்கு. 'உன் னுடைய உலகத்தையும் உடைமைகளையும் மகாபாவி அபகரிக்க, நீ அவனிடம் இரந்து மூவடி மண்பெற்றாய்; அதை வியாஜ மாகக் கொண்டு உலகத்தை மறுபடியும் சுவா தீனமாக்கிக் கொண்டு தேவர்களுக்கு வானத் தையும் மக்களுக்கு வையகத்தையும் கொடுத் தருளினாய். அத்தகைய உன் காலைப் பிடித் துக் கொண்டு வாழ்வதே வாழ்வு' என்பது திருச்சந்த விருத்தத்திலே திருமழிசை ஆழ் வார் வாமனாவதாரம் பற்றிக் கூறியிருப்பதன் சாரமாகும்.

வாமனனும் திருமங்கையாழ்வாரும்

திருமங்கை மன்னனும் வாமனாவதாரத் தத்துவத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண்கி றோம். உலகளந்தபோது தேவர்கள் பலரும் திருவடிகளில் பூக்கள் சொரிந்து வாமன மூர்த்தியின் பரத்துவத்தை ஒப்புக்கொண் டார்களாம். இப்படி உலகை ஈரடியால் நடந்த நம்பி நாமம் சொல்லில் நமோ நாராயணமே என்கிறார் இந்த ஆழ்வார். உலகளந்து அசுர இருள்போக்கி அருளிய செற்யகருஞ் செயலுக்கு அறிகுறியான திருப்பெயர் தேனும் பாலும் அமுதுமாக இருக்கிறதாம் அன்பர்களுக் கெல்லாம்

தந்தையும் மகளும் கண்ட உத்தமன்

ஆண்டாள் வாக்கிலும் உலகளந்த குள்ளனின் பெருமை பேசப்படுவதைக் காண் கிறோம். பெரியாழ்வாரும், 'நெடுமையால் உலகேழும் அளந்த' கதையில் ஈடுபடுகிறார். வாமன மூர்த்தியைத் தம் மனத்துள்ளே புகுந்திருக்கும்படி அமைத்துக் கொண்டதால், இந்திரியங்கள் கொடிய குறும்புகளைச் செய்ய முடியாமல் அடங்கிக் கிடந்தன என்கிறார் இப் பெரியார்.

ஆண்டாள் 'ஓங்கி உலகளந்த' என்று தொடங்கும் திருப்பாவைப் பாசுரத்திலே வாமனாவதாரத்தின் சிறப்பைக் குறிப்பிடுவ தைக் காண்கிறோம், வாமனனை 'ஓங்கி உல களந்த உத்தமன்' என்று குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத்தக்கது. தான் அழிந்தாலும் பிறருக்குப் பணிபுரிவதே நல்லது என்ற கொள்கையுள்ள வள்ளலைத் தான் உத்தமன் என்று இப்பாசுரம் கருதுகிறது. குள்ளன் தன் உருவம் அழிய மாறித்தானே லோகோப காரமான கைங்கரியத்தைச் செய்தான்? எனவே வாமனனை உத்தம வள்ளல் என் கிறாள் ஆண்டாள்.

நம்மாழ்வார் காணும் வாமனாவதாரம்

நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் உத்தம வள்ளலான வாமனனை, 'வையம் அளந்த எம்வாமனா!' என்று விசேஷ அபிமா னம் தோன்றக் குறிப்பிடுகிறார்.

'கொள்வன்நான் மாவலி!
மூவடிதா' என்ற
கள்வனே!

என்று தம்வாமனனை ஆசைதீர அழைக்கிறார்.

வாமனனைக் கண்டதும் 'இவனுக்கும் ஏதாவது தானம் பண்ணுவோம்' என்று தீர்மானித்து விட்டான் மகாபலி. வாமனனும் குதூகலமாக, 'கொள்வன் நான்' என்று பேசுகிறான், யாசித்துப் பழகியிராதவன் பேசுவது போல. 'பிரபுவே! சக்கரவாத்தியே! மாட்சிமை தங்கிய மன்னர் பிரானே!' என்றெல்லாம் சொல்லாமல் 'மாவலி!' என்று அண்மை விளியாக நெருங்கிக் கூப்பிகிடுகிறுனும்.

'இவன் ஒரு சிறுவன்; மாட்சிமை நிறைந்த நம் முன்னே துணிந்து நின்று சிறு பெயர் சொல்லி அழைத்தானே!' என்று சற்றுத் திகைத்த மகாபலிச் சக்கரவர்த்தி குள்ளனை முகம் பார்த்து என்ன தேவை?' என்று கேட்டான். 'மூவடி' என்று பதில் வந்தது. சக்கரவர்த்திக்குத் திகைப்பு அதிகரித்தது.

'வானமும் வையமும் ஆண்டுகொண்டிருக்கும் நம்மிடம் யாசிக்க வந்தவர்களில் எவனும் இப்படிக் கொஞ்சமாக யாசிக்கவில்லையே' என்ற நினைப்பில் மகாபலி சும்மா இருந்து விட்டானும். குள்ளனே 'தா' என்கிறான். இது நாடகத் திறமையுடன் நம்மாழ்வார் குறிப்பிடும் மாவலி கதை. இதற்கு இத்தகைய விளக்கம் தருகிறார் நம்பிள்ளை என்ற பெரியார்.

நம்மாழ்வார் பகவானுடைய தொடர்பு பெற்ற பொருள்களைக் கண்டு அப் பெருமானையே கண்டதாகக் களிக்கும் போது தாம் காதலியின் நிலையை அடைந்துபாடுகிறார். அப்போது இந்தக் காதலியின் தாய் மகளுடைய செய்தியைப் பிறருக்கு அறிவிப்பதாக இந்த ஆழ்வார் பாசுரம் பாடியிருக்கிறார். இப்பாசுரங்களில் ஒன்று,

மண்ணை இருந்து துழாவி,
'வாமனன் மண் இது!' என்னும்

என்று தொடங்குகிறது.

பகவான் உலகத்தை அளந்தபோது திருவடிகளுடன் தொடர்பு பெற்றது இந்த மண் என்று காதலி நிலத்தைத் துழாவிப் பொழுது போக்கி ஒருவாறு ஆறுதல் அடையப் பார்க்கிறாளாம். மண்ணை மண்ணாக நினைக்கவில்லை; தன்னுடைய மண் என்று நினைக்கவில்லை; அவனுடைய மண் என்றே அபிமானித்துப் பொழுது போக்குகிறாளாம். இந்த வாக்கிலே 'நிலம் எந்தச் சக்கரவர்த்திக்கும் சர்வாதிகாரிக்கும் உரியதன்று; கடவுளுக்கே உரியது; எனவே அனைவருக்கும் பொது' என்ற உட்பொருளையும் காணலாம் என்று தோன்றுகிறது. ஆழ்வார் வாக்கல்லவா? எவ்வளவோ ஆழ்ந்த பொருள் இருக்க வேண்டுமே! ஆழ்வார்களிலும் தலைவரான நம்மாழ்வாரின் வாக்கு இது.

வேதாந்ததேசிகனும் ஜயதேவரும்

மகாபலி பெருவள்ளலாக இருந்ததுடன் திருமாலின் பக்தனாகவும் இருந்தான். இவனுடைய அசுர ஆணவத்தைப் போக்கி அருள் செய்வதற்காகவே திருமால் இரணியகசிபு முதலான எதிரிகளை ஒடுக்கியதுபோல் இவனையும் ஒடுக்கினான் என்பது கதை. வேதாந்த தேசிகன் தமது தசாவதார ஸ்தோத்திரத்தில், 'மகா உதாரனான (பெருவள்ளலான) மகாபலியின் கீர்த்தி என்னும் போர்க்களத்திற்கு எம்பெருமானுடைய திருவடி ஒரு போர் வீரன் ஆயிற்று' என்று பொருள்படப் பேசுகிறார்.

திருமாலின் திருவடி ஆகாயம் சென்ற போது, படைப்புக் கடவுளான பிரமன் தன் கமண்டலத்திலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து அந்தத் திருவடியை மஞ்சன நீராட்டினானும். அந்தத் திருமஞ்சன தீர்த்தமே ஆகாச கங்கை எனப் பெயர் பெற்றுப் பெருகத் தொடங்கியதாம். அந்த வெண்ணிறக் கங்கையின் பெருக்கு கொடிச் சீலைகள் போல் வானவெளியிலே அசைவதைக் கண்ணுற்றவர்களுக்கு, 'ஏதோ வெற்றிக் கொடி பறக்கிறது!' என்ற தோற்றம் ஏற்பட்டதாம். எதற்காகப் பறக்கிறது? யாருடைய வெற்றிக்கொடி?

இரத்தம் சிந்தி ஹிம்சை முறையில் மண்ணையும் விண்ணையும்வென்ற மகாபலியை ஒரு புதிய அஹிம்சை முறையில் வெற்றி கொண்டான் வாமனன். இந்த வெற்றிக்கு அறிகுறியாக வெற்றிக் கொடிகள் வான

வெளியில் அசைவதைப் போலக் காணப் பட்டதாம் ஆகாசக் கங்கைப் பெருக்கு.

அப்படிக் கங்கையைத் தந்து நிலத் தைத் தூய்மையுறச் செய்த அந்தத் திருவடி நமக்குப் பேருதவி புரிந்திருக்கிறதென்றும், அதை நாம் மறக்கலாகாது என்றும் ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச் செய்கிறார்.

மூவடி மண் கேட்பதற்காக யாசகன் வெட்கப்படவில்லை; 'நம்மிடம் அற்பமாக இரக்கின்றானே!' என்று அற்புதக் கொடை யாளியான மகாபலிதான் வெட்கப்பட்டா னும். அப்படி ஆணவ மதம் பிடித்திருந்த சக்கரவர்த்தியை அந்த மதவலியை அழித்து வென்று அருள் புரிந்ததாம் உலகளந்த திரு வடி. 'அந்தத் திருவடி நம்மை ஆளட்டும்' என்கிறார் தேசிகன், அந்த அருள்-ஆட்சியை நம்பி, 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்?' என்ற அப்பர் வாக்குக்கு இணங்க வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது குறிப்பு.

ஜயதேவரோ, 'அதிசயக் குள்ளனே! மூவடி என்று மாவலி மன்னனை வஞ்சித்த வனே. உன்னுடைய திருவடிகளால் மக்க ளுடைய பாவங்கள் அழிக்கப்படுகின்றன' என்று தம் கீதகோவிந்தத்தில் பாடுகிறார். அன்று போல இன்றும் அசுரப் பேரிருள் போக்கி மக்களுக்கு அருள் செய்யவே வாம னுவதாரம் நிகழ்ந்தது என்பது கருத்து,

இந்த அவதாரம் எல்லாருக்கும் உதவி செய்கிறதென்றும், நம்பிக்கை ஊட்டுகிற தென்றும் கூறி முடிக்கிறார் ஜயதேவர்.

* * *

ஆழ்வார்கள், வைணவ ஆசாரியர்கள், ஜயதேவர் போன்ற திருமாலடியார்கள் ஆதி யர் உள்ளங்களில் ஊறிக்கிடந்த உலகளந் தான் கதை சங்க காலத்திலும் தமிழர் உள் ளங்களை — மக்கள் உள்ளங்களையும் அறிஞர் உள்ளங்களையும் — வசிகரித்திருக்கிறது.

நேமியொடு வலம்புரி பொறித்த
மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த
மாஅல் போல

[நேமி-சக்கரம். வலம்புரி-வலம்புரிச் சங்கு. பொறித்த - அழுந்திய, மா-லட்சுமி, பெருமையும் வலிமையும் வாய்ந்த அழகு. தடக்கை - பெரிய கை. மாஅல்-திருமால்]

என்று முல்லைப்பாட்டிலே உலகளந்த வாமன மூர்த்தியின் செய்தி கூறப்படுகிறதல்லவா?

வாமனுவதாரம் செய்து உலகங்களை யெல்லாம் அளந்தபோது திருமாலின் ஊன் றிய திருவடி உள்ள ஏழு உலகங்களையும் பொருந்தி நின்றது என்ற கருத்தைப் 'பரி பாடலி'ல் காண்கிறோம்.

கீழ்ஏழ் உலகமும்
உற்ற அடியினை

[உற்ற - பொருந்திய. அடியினை-ஓர் அடியையும் உடையவனாக இருக்கிறாய்.]

இத்தகைய திருவடிகளை வணங்காதவர் களும் இவ்வுலகில் உண்டோ என்று கேட் கிறார் கடுவன் இளவெயினனார்.

திருமால் பேருருவம் கொண்டு உலகை அளந்தபொழுது அசுரர்கள் அஞ்சித் தாம் இருந்த இடங்களிலிருந்து ஓடிப்போய்க் கட லில் விழுந்து இறந்தனர் என்றும் இதே புலவர் உலகளந்த கதையைப்பற்றிய—சாதா ரணமாகத் தெரிந்திராத—ஒரு செய்தியை யும் தெரிவிக்கிறார். அசுர இருளை ஒழித்து உலகத்திற்கு நெருக்கடியான சமயங்களில் எல்லாம் புதியதோர் ஒளி தருமாறு அவதரிக் கின்றான் இறைவன் என்ற அவதார தத்து வம் ஒன்றைத்தான் இந்தப் பரிபாடற் செய்தி யிலும் காண்பதாகக் கருதலாம்.

'வாமனன்மண்' அல்லவா இந்த உல கம்? உடையவன் உடைமையைக் கைவிடு வானா?

திருவெண்காடு, ஸ்ரீசுவேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் நவராத்திரி உற்சவம் 2-10-59 முதல் 11-10-59 வரை சிறப்பாக நடைபெற்றது.

திருநெல்வேலியில் நெல்லை மாவட்டத் திருக்கோயில் ஓதுவார்கட்குப் பன்னிரு திருமுறைப்பயிற்சி

திருக்கோயில்களில் பணி செய்யும் தேவார இசைத் தொண்டர்களாகிய ஓதுவார்களில் பெரும்பாலோர் திருமுறைப் பயிற்சியும் சமய அறிவும் போதிய அளவு பெருதவர்களாக இருக்கிருர்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒரு பெருங்குறை. அவர்கட்குத் தக்க ஊதியம் இல்லை யென்பதும் மறுக்க முடியாத ஒரு குறை, இத்தகைய குறைகளைப் போக்கும் நோக்கத்துடன் ஓதுவார்களுக்குத் தகுதியொன்றை உண்டுபண்ணத் தற்போது நெல்லைப் பகுதி அறநிலைய உதவி ஆணையராகப் பணியாற்றும் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள் முயற்சியின் பயனுக *16-7-1959*-ல் திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் அறங்காப்பாளர் குழுத்தலைவரும், நெல்லை அப்பரடிகள் அருட்பணிக் கழகத் தலைவரும், சைவப் புரவலரும் ஆகிய வள்ளல் திரு, சி. ச. அருணுசலம் பிள்ளையவர்கள் தலைமையில் நெல்லையப்பர் திருக்கோயிலில் ஆய்வுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் பன்னிரு திருமுறைப் பயிற்சி வகுப்புத் திட்டங்கள் ஆராய்ந்து முடிவு கட்டப் பெற்றன.

ஆய்வுக்கூட்டத் திட்டங்கள் சென்னை மாநில அறநிலைய ஆணையாளர் அவர்கள் பார்வைக்கு அனுப்பப் பெற்றன. அவர்கள் அவற்றை ஒப்புக்கொண்டு நெல்லை மாவட்டத் திருக்கோயில்களில் பணிசெய்யும் ஓதுவார்கள் அனைவரும் நெல்லையில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறும் அதற்கு வேண்டும் வசதிகளை அவர்கட்குச் செய்து கொடுக்கு மாறும் திருக்கோயில் இறைபணியாளர்கட்குச் சுற்றறிக்கை விடுத்தார்கள்.

9—9—59 விகாரி ஆவணி *24*, புதன் கிழமை - குலச்சிறை நாயனர் குருபூசைத் திருநாளாகிய அனுட நன்னுளில் திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் வசந்த மண்டபத்தில் சென்னை மாநில அறநிலைய ஆணையாளர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ், அவர்கள் தலைமையில் பன்னிரு திருமுறைப் பயிற்சி வகுப்புத் தொடங்கப் பெற்றது. திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர் அவர்கள் இறை வணக்கப் பாடல் இசையுடன் விழாத் தொடங்கியது. வள்ளல் திரு. சி. ச. அருணுசலம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திஞர்கள். விழாத்தலைவர் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்திஞர்கள். அவர்கள் தம் உரையில் ஓதுவார்கள் செய்யும் திருப்பணியின் சிறப்பையும் அவர்கள் நிலை உயர, அவர்கள் தங்கள் தகுதியைப் பெருக்கிக் கொள்வது அவசியம் என்றும், அதற்கு இப் பயிற்சி வகுப்பு ஒரு தூண்டுகோலாகும் என்றும் வற்புறுத்திப் பேசிஞர்கள். பின்னர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை வகுப்பின் நோக்கத்தை விரித்துரைத்தனர். சிவத்திரு. ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் விழாவில் வாழ்த்துரை வழங்கிஞர்கள். வித்துவான் திரு. அ. க. நவநீதகிருஷ்ணன் நன்றியுரையுடன் தொடக்க விழா நிறைவேறியது.

10-9-59 மறுநாள் முதல் பன்னிரு திருமுறைப் பயிற்சி வகுப்பு முறையாக நடைபெற்றது. அவ்வகுப்பில் *58* ஓதுவார்கள் கலந்து கொண்டனர். வகுப்பு நெல்லையப்பர் திருக்கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் நடைபெற்றது. நாள்தோறும் காலை *9* மணி முதல் *12*மணி வரையும், மாலை *3* மணி முதல் *5*மணி வரையும், இரவு *7*மணி முதல் *9*மணி வரையும் ஆறு பிரிவேளை (Periods) வகுப்புக்களாக நடைபெற்றது. காலை *9* மணி முதல் *11* மணி வரை திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர், திரு. சோமசுந்தர தேசிகர் ஆகிய இருவரும் திருமுறை இசைப் பயிற்சியளித்தனர். காலை *11* மணி முதல் *12* மணி வரை திரு. அப்பாசாமி ஓதுவார் தேவாரப்பண் விளக்கம் செய்தனர். மாலை *3* மணி முதல் *4* மணி வரை வித்துவான் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் பயிற்சிக்குரிய திருமுறைப்பாக்களுக்குப் பொருள் விளக்கம் செய்தனர். *4* மணி முதல் *5* மணி வரை வித்துவான் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளை திருமுறைப் பாக்களில் உள்ள சித்தாந்தக் கருத்துக்களை விளக்கம் செய்தனர். இரவு *7* மணி முதல் *8* மணி வரை வசந்தமண்டபத்தில் வித்துவான்

திரு. அ. க, நவநீதகிருஷ்ணன் சொற்பயிற்சி யளித்தனர். இரவு 8 மணி முதல் 9 மணி வரை திருமுறைச் சொற்பொழிவுகள் வித்து வான் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையும் வித்துவான் திரு. அ. க, நவநீதகிருஷ்ண பிள்ளையும் நிகழ்த்தினர், இவ்வாறு 21-9-59 வரை 12 நாட்கள் முறையாக வகுப்புக்கள் நடைபெற்றன. இவ்வகுப்பு நாட்களில் பயிற்சியளிப்பதற்குரிய திருமுறைப் பாடல் களைத் தேர்ந்தெடுத்துப் பாடத்திட்டம் ஒன்று தயார் செய்யப்பெற்றது. அதனை அச் சிட்டு ஓதுவார்கள் அனைவருக்கும் பிரதி கொடுக்கப்பெற்றது, (சுருக்கம் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.)

22-9-59 காலை 9 மணி முதல் 10 வரை இவ்வகுப்பில் கலந்து கொண்ட ஓதுவார் கட்கு எழுத்துத் தேர்வு ஒன்று நடைபெற் றது, 10 மணி முதல் 2 வரை இசைப்பயிற்சி தேர்வு நடைபெற்றது. 20-9-59, 21-9-59 ஆகிய இரு நாட்களிலும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை சொற்பயிற்சித் தேர்வு நடை பெற்றது. இம் மூவகைத் தேர்வுகளிலும் கலந்து கொண்டவர்கள் 49 பேர். அவர்களில் 6 பேர் 60 மதிப்பெண்களுக்குமேல் பெற்று முதல் வகுப்பில் தேர்ந்தனர், 6 பேர் 2-வது வகுப்பில் தேர்ந்தனர். 14 பேர் 3-வது வகுப் பில் தேர்ந்தனர். தேர்வில் வெற்றி பெற்ற வர்கட்கும் தேர்வில் கலந்து கொண்டவர்கட் கும் 22-9-59 இரவு நடைபெற்ற வகுப்பு நிறைவு விழாவில் சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன.

பன்னிரு திருமுறைப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா 22-9-59 மாலை, வசந்த மண்ட பத்தில் நெல்லை மாவட்ட நீதிபதி திரு. ஓ. வி. பாலுசுவாமி தலைமையில் நடைபெற்றது. பாளையங்கோட்டை நகர்மன்ற ஆணையாளர் திரு. பி. சிவகுருநாதசெட்டியார் பி.ஏ.,பி.எல். விழாப் பேருரை நிகழ்த்தினர். மதுரை ஆதினம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விழாவிற்கு எழுந்தருளி ஆசியுரை வழங்கி னார்கள். நெல்லை அறநிலைய உதவி ஆணையா ளர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை வகுப்பை நடத்த உதவிய வள்ளல் திரு. சி. ச. அருணாசலம் பிள்ளையவர்களையும் வகுப்பை நடத்திய ஆசிரியர்களையும் பாராட்டிப் பேசி னர். திரு. வீரசிவசுப்பிரமணியம் எல்லோரை யும் பாராட்டி நன்றியுரை வழங்கினர். வள்ளல் திரு. சி. ச. அருணாசலம் பிள்ளை அவர்கள் வகுப்பை நடத்தித் தந்த ஆசிரியர் கட்குச் சன்மானம் வழங்கினார்கள்.

திருப்புடைமருதூர் மிராசுதார் திரு. சண்முகசுந்தரம் பிள்ளை, திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர், திரு. சோமசுந்தர தேசி கர் ஆகிய இருவருக்கும் ஆடைகள் வழங்கி னர். முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற ஓது வார்களாகிய திரு. இராமசாமிப் பிள்ளை (தென்காசி) திரு. பூதத்தான் ஓதுவார் (இலஞ்சி) இருவர்க்கும் களக்காடு திரு. முத் தையா பிள்ளையவர்கள் ஆடையும் தாளமும் பரிசுகளாக வழங்கினர்.

வகுப்பில் கலந்து கொண்ட ஓதுவார் களுக்கெல்லாம் வகுப்பு நடைபெற்ற 14 நாட் களிலும் வள்ளல் திரு. சி, ச. அருணாசலம் பிள்ளையவர்கள் தம் அப்பரடிகள் அருட் பணிக் கழகக் கட்டிடத்தில் தம் சொந்த செலவில் உணவும் உறையுளும் வழங்கினார் கள். பிற வகுப்பு நடைமுறைச் செலவுகள், ஆசிரியர்கள் சன்மானம் அனைத்தும் அவர் களே ஏற்றுக்கொண்டார்கள். ஏறத்தாழ ரூ. 2500-ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு இவ்வகுப்பிற்காக வள்ளல் அவர்கள் அன் புடன் செலவிட்டது சிறப்பாகப் பாராட்டற் குரியதாகும்.

22–9–59 நிறைவு விழாவன்று இரவு 12 மணிக்கு மேல் பன்னிரு திருமுறை நூல் களை யானைமீது ஏற்றித் திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர் தலைமையில் பயிற்சி பெற்ற 49 ஓதுவார்களும் தேவார இசை முழக்கம் செய்யச் சிறந்ததோர் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்திற்கான செலவைத் திருப்புடைமருதூர் திரு. தி. சண்முகசுந்தரம் பிள்ளையே ஏற்றுக்கொண்டனர்.

பன்னிரு திருமுறைப் பயிற்சி வகுப்புப் பாடத்திட்டம்

முதல் நாள்

திருமுறை — முதற்குறிப்பு — பண்

1 தோடுடைய செவியன்—நட்டபாடை
2 சடையாய் எனுமால்—இந்தளம்
3 ஆடினாய் நறுநெய்யொடு—காந்தார பஞ்சமம்
4 கூற்றாயினவாறு—கொல்லி
5 அன்னம் பாலிக்கும்—திருக்குறுந்தொகை
6 நாமார்க்கும் குடியல்லோம்—திருத்தாண்டகம்
7 பித்தா பிறைசூடி—இந்தளம்
8 பால்நினைந்(து) ஊட்டும்—திருவாசகம்
ஆனந்த வெள்ளத்(து)—திருக்கோவையார்
9 ஒளிவளர் விளக்கே—பஞ்சமம் (திருவிசைப்பா)
மன்னுக தில்லைவளர்க நம்—பஞ்சமம் (திருப்பல்லாண்டு)
10 சிவனொடொக் கும்தெய்வம்—திருமந்திரம்
11 மதிமலி புரிசை மாடக்கூடல்—திருமுகப் பாசுரம்
12 உலகெலாம் உணர்ந்தோதற்கு—பெரிய புராணம்

இரண்டாம் நாள்

1 மடையில் வாளை பாய—தக்கராகம்
2 பேயடையா பிரிவெய்தும்—சீகாமரம்
3 மண்ணில் நல்லவண்ணம்—கொல்லி
4 மாதர்ப் பிறைக்கண்ணியானை—காந்தாரம்
5 பனைக்கை மும்மத வேழம்—திருக்குறுந் தொகை
6 மைப்படிந்த கண்ணாளும்—திருத்தாண்டகம்
7 குரும்பைமுலை மலர்க்குழலி—தக்கராகம்
8 ஆடுகின்றிலை கூத்துடையான்—திருவாசகம்
சிறைவான் புனல்தில்லை—திருக்கோவையார்
9 கற்றவர் விழுங்கும்—பஞ்சமம் (திருவிசைப்பா)
மிண்டு மனத்தவர் போமின்கள்—பஞ்சமம் (திருப்பல்லாண்டு)
10 அன்பும் சிவமும் இரண்டென்பர்—திருமந்திரம்
11 பிறந்து மொழிபயின்ற—அந்தாதி
12 ஐந்துபேர் அறிவும் கண்களே—பெரியபுராணம்

மூன்றும் நாள்

1 மறையுடையாய் தோலுடையாய்—பழந்தக்க ராகம்
2 மந்திர மாவது நீறு—காந்தாரம்
3 காத லாகிக் கசிந்துகண்ணீர்—கௌசிகம்
4 கருவாய்க் கிடந்துன் கழலே—திருவிருத்தம்
5 நங்கடம்பனைப்பெற்றவள்—திருக்குறுந் தொகை
6 சங்கநிதி பதுமநிதி இரண்டும்—திருத்தாண் டகம்
7 நீள நினைந்தடியேன்—நட்டராகம்
8 தந்ததுன் தன்னைக்கொண்டதென்— திருவாசகம்
ஈசற்கு யான்வைத்த அன்பின்—திருக்கோவை யார்
9 அற்புதத் தெய்வம்—பஞ்சமம்(திருவிசைப்பா)
நிட்டை யிலா உடல்—பஞ்சமம் (திருப்பல் லாண்டு)
10 சிவசிவ என்கிலர் தீவினை—திருமந்திரம்
11 நடக்கில் படிநடுங்கும்—அற்புதத்திருவந்தாதி
12 தெண்ணிலா மலர்ந்த—பெரிய புராணம்

நான்காம் நாள்

1 பூவார் மலர்கொண்(டு)—தக்கேசி
2 என்ன புண்ணியம் செய்தனை—நட்டராகம்
3 மானினேர்விழி—கொல்லி
4 தலையே நீ வணங்காய்—சாதாரி
5 தொழுது தூமலர்தூவித்—திருக்குறுந் தொகை
6 நினைந்துருகும் அடியாரை—திருத்தாண்டகம்
7 தம்மையே புகழ்ந்(து)—கொல்லி
8 மெய்தான் அரும்பி—திருவாசகம்
திருவளர் தாமரை சீர்வளர்—திருக்கோவை யார்
8 திருமகன் முருகன் தேவியேல்—திருவிசைப்பா
சொல்லாண்ட சுருதிப்பொருள்—திருப்பால் லாண்டு
10 கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை—திருமந் திரம்
11 அறிவானும் தானே—அந்தாதி
12 சென்ற காலத்தின் பழுதிலா—பெரிய புராணம்

ஐந்தாம் நாள்

1 நன்றுடையானைத் தீயதிலானை—குறிஞ்சி
2 தொண்டரஞ்சு களிறு—செவ்வழி
3 மருந்தவை மந்திரம்—சாதாரி
4 மாயிரு ஞாலமெல்லாம்—திருநேரிசை
5 பண்ணின் நேர்மொழி—திருக்குறுந்தொகை
6 மனத்தகத்தான் தலைமேலான்—திருத்தாண் டகம்
7 தில்லைவாழ் அந்தணர்தம்—கொல்லிக் கௌவாணம்
8 தினைத்தனை யுள்ளதோர்—திருவாசகம்
9 பொய்யாதவேதியர்—பஞ்சமம் (திருவிசைப்பா)
புரந்தரன் மாலயன்—திருப்பல்லாண்டு
10 உள்ளம் பெருங்கோயில்—திருமந்திரம்
11 உன்னை ஒழிய ஒருவரையும்—திருமுருகாற்றுப் படை
12 வேதநெறி தழைத்தோங்க—பெரிய புராணம்

ஆறும் நாள்

1 அவ்வினைக் கிவ்வினையாமென்று—வியாழக் குறிஞ்சி
2 வேயுறு தோளிபங்கன்—பியந்தைக் காந்தாரம்

3 வேத வேள்வியை நிந்தனை—பழம்பஞ்சுரம்
4 சொன்மாலை பயில்கின்ற—பழந்தக்க ராகம்
5 பண்டு செய்த பழவினையின்—திருக்குறுந் தொகை
6 எவரேனும் தாமாக—திருத்தாண்டகம்
7 மற்றுப்பற்றெனக் கின்றி—பழம்பஞ்சுரம்
8 பாரொடு விண்ணாய்ப் பரந்த—திருவாசகம்
9 நையாத மனத்தினனை—திருவிசைப்பா
சீரும் திருவும் பொலிய—திருப்பல்லாண்டு
10 காணிப் பொன்கொண்டு—திருமந்திரம்
11 இடர்களையாரேனும்—அந்தாதி
12 நச்சி இன்றமிழ் பாடிய—பெரிய புராணம்

ஏழாம் நாள்

1 நீறு சேர்வதொர்—மேகராகக்குறிஞ்சி
2 ஏடுமலி கொன்றை—இந்தளம்
3 மங்கையர்க் கரசி—புறநீர்மை
4 ஒன்றுகொலாமவர்—இந்தளம்
5 வேதநாயகன்—திருக்குறுந்தொகை
6 ஓசை ஒலியெலாம்—திருத்தாண்டகம்
7 பொன்னும் மெய்ப்பொருளும்—தக்கேசி
8 வேண்டத் தக்க(து) அறிவோய்—திருவாசகம்
9 பத்தியாய் உணர்வோர்—பஞ்சமம் (திருவிசைப்பா)
சேலும் கயலும் திளைக்கும்—திருப்பல்லாண்டு
10 ஒன்று கண்டீர் உலகுக்கொரு—திருமந்திரம்
11 அஞ்சு முகந்தோன்றில் — திருமுருகாற்றுப் படை
12 மங்கையர்க்குத் தனியரசி—பெரிய புராணம்

எட்டாம் நாள்

1 மாதர் மடிப்பிடியும்—யாழ்மூரி
2 தன்னடைந்தார்க்(கு) இன்பங்கள்—சீகாமரம்
3 கல்லூர்ப் பெருமணம்—அந்தாளிக்குறிஞ்சி
4 முத்துவிதானம் மணிப்பொற்கவரி—குறிஞ்சி
5 பெருக லாந்தவம்—திருக்குறுந்தொகை
6 நில்லாத நீர்சடைமேல்—திருத்தாண்டகம்
7 மறைகளாயின நான்கும்—காந்தாரம்
8 உடையாள் உன்றன்—திருவாசகம்
9 பவளமே மகுடம் பவளமே—திருவிசைப்பா
பாலுக்குப் பாலகன் வேண்டி—திருப்பல் லாண்டு
10 நான்பெற்ற இன்பம் பெறுக—திருமந்திரம்
11 நானே பிறந்த பயன்படைத்தேன்—கோயில் நான்மணிமாலை
12 நன்மைபெரு கருள்நெறியே—பெரிய புராணம்

ஒன்பதாம் நாள்

1 அங்கமும் வேதமும்—நட்டபாடை
2 உண்டாய் நஞ்சை—காந்தாரம்
3 இடரினும் தளரினும்—காந்தார பஞ்சமம்
4 கோவாய் முடுகி—திருவிருத்தம்
5 மாசில் வீணையும்—திருக்குறுந்தொகை
6 நிலைபெறுமாறு எண்ணுதியேல்—திருத்தாண் டகம்
7 திருவும்மெய்ப் பொருளும்—தக்கேசி
8 மாறிநின்று என்னை மயக்கிடும்—திருவாசகம்
9 தனதனற் றேழா சங்கரா—திருவிசைப்பா
தாதையைத் தாளற வீசிய—திருப்பல்லாண்டு
10 யாவர்க்கு மாம் இறைவற்கொரு—திருமந்திரம்
11 சொல்லும் பொருளுமே—அந்தாதி
12 ஞானத்தின் திருவுருவை—பெரிய புராணம்

பத்தாம் நாள்

1 ஓடேகலன் உண்பதும்—தக்கராகம்
2 மட்டிட்ட புன்னையங்கானல்—சீகாமரம்
3 பிடியெலாம் பின்செலப் பெருங்கை—கொல்லி
4 குனித்த புருவமும்—திருவிருத்தம்
5 எங்கே என்னை இருந்திடம்—திருக்குறுந் தொகை
6 முன்னம் அவனுடைய நாமம்-திருத்தாண்டகம்
7 பரவும் பரிசொன்று—காந்தார பஞ்சமம்
8 வணங்கத் தலைவைத்து - திருவாசகம்
9 ஏகநா யகனை இமையவர்க்கு—திருவிசைப்பா
குழலொலி யாழொலி—திருப்பல்லாண்டு
10 பெறுதற் கரிய பிறவியைப்—திருமந்திரம்
11 புண்ணியனே என்று போற்றி—விருத்தம்
12 சோதி முத்தின் சிவிகைசூழ்—பெரியபுராணம்

பதினோராம் நாள்

1 பூத்தேர்ந் தாயன—பழந்தக்கராகம்
2 இன்றுநன்று நாளைநன்று—நட்டராகம்
3 வீடலால வாயிலாய்—கௌசிகம்
4 மெய்மையாம் உழவைச்செய்து—திருநேரிசை
5 என்ன மாதவம் செய்தனை—திருக்குறுந் தொகை
6 திருவேயென் செல்வமே—திருத்தாண்டகம்
7 மீளா அடிமை உமக்கே—செந்துருத்தி
8 இன்றெனக் கருளி—திருவாசகம்
9 பவளமால் வரையைப் பனிபடர்—நட்டராகம் (திருவிசைப்பா)
ஆரார் வந்தார் அமரர்—பஞ்சமம் (திருப்பல் லாண்டு)
10 பதிபசு பாசம்—திருமந்திரம்
11 வளையார் பசியின் வருந்தார்—கோவை
12 நெஞ்சம் ஈசனைக் காண்பதே—பெரிய புராணம்

பன்னிரண்டாம் நாள்

1 நாளாய போகாமே—பழந்தக்கராகம்
2 கூனல்திங்கள் குறுங்கண்ணி—செவ்வழி
3 திடமலி மதிலணி—சாதாரி
4 சிவனெனும் நாமம் தனக்கே—திருவிருத்தம்
5 உள்ளம் உள்கி உகந்து—திருக்குறுந்தொகை
6 அல்லும் பகலுமாய்—திருத்தாண்டகம்
7 நாளும் இன்னிசையால் தமிழ்—தக்கேசி
8 விண்ணாளும் தேவர்க்கு—திருவாசகம்
9 அல்லியம் பூம்பழனத்து—சாளரபாணி (திருவிசைப்பா)
எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்—பஞ்சமம் (திருப்பல்லாண்டு)
10 பின்னைநின்று என்னே பிறவி—திருமந்திரம்
11 விநாயகனே வெவ்வினையை—இரட்டை மணி மாலை
12 என்றும் இன்பம் பெருகும்—பெரிய புராணம்

திருவோணம்

[வித்வான் திரு. T. A. சீனிவாசாச்சாரியார்]

திருவோணம் என்பது திருமாலுக்குரிய நாள் ஆகும். இதனைத் தமிழ் நூல்களாலும், வடமொழி நூல்களாலும் நாமறியலாகும். வடமொழி வேதத்திலே "ச்ரோணும் நக்ஷத்ரம் விஷ்ணுர்தேவதா" என ஓதப்பட்டுள்ள தென்பர். திருப்பல்லாண்டில், சுவாதி நாளில் திருத்தூணிலே தோன்றியருளிய பரமனைத் "திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி" என்று கூறப்படுகின்றது. உரோகிணியில் திருவவதாரம் செய்தருளிய கண்ணபிரானை, "நீ பிறந்த திருவோணம் இன்று நீராடவேண்டும்" என்று திருமொழி அழைக்கின்றது. "அத்தத்தின் பத்தாம் நாள்" என்னுமிடமும் அத்த நட்சத்திரத்திற்கு முந்தின பத்தாம் நாளான உரோகிணியையும் குறிக்கின்றது; முந்தின பத்தாம் நாளான திருவோணத்தையும் குறிக்கின்றது. ஸ்ரீராமபிரான் புநர்வசு நாளில் அவதரித்தமை யாவரும் அறிவர். இவ்வாறெல்லாம் வெவ்வேறு திருநட்சத்திரங்களிலே தோன்றிய திருவவதாரங்களைத் திருவோணத்திற்கு ஏற்றிக் கூறுவதனால் திருமாலுக்குரிய உகந்த நாள் திருவோணமே என நாம் தெரியலாகும். பெருமானுக்குப் பிராட்டி போலும் பிரியமுடையது திருத்துழாய் ஆகும். திருமாலுக்கு மலர் பற்றிய அடைமொழி அமைத்துக் கூறுகையில் "துளவக்கண்ணன்" "பைந்துளவ மாலையானை" என்று திருத்துளபத்தையே செப்பியுரைப்பர் பெரியோர்களும் கவிஞர்களும். இதனால், எந்த ஒரு மலரினைத் திருமாலுக்கு நாம் அணிவித்தாலும், அது திருத்துழாயாகவே பெருமானால் அங்கீகரிக்கப்படுதலை நாமறியலாம். இவ்வாறே எந்த ஒரு நாளில் பெருமான் தோன்றியருளினும் அந்நாள் அப்பெருமாற்குரிய திருவோண நன்னாள் எனப் படுகின்றதாகும்.

இது நிற்க, திருமால் உலகில் அறத்தினை நிலைநாட்டுதற்குப் பத்துப் பிறவிகள் எடுப்பதை எல்லா நூல்களும் எடுத்தோதுகின்றன. "தசாவதாரம்" என்ற சொற்றொடரை எவரும் அறிவர். இந்த அவதாரங்கள் யாவும் துட்டர்களைத் தண்டித்தற்கும் சிட்டர்களைக் காத்தற்குமே பெருமானால் மேற்கொள்ளப்படுகின்றன. "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்ற கீதையுரையினால் உலக நடைபேற்றிற்கும், அறம் நிலைத்தற்கும், சம்சாரிகள் உய்வடைவதற்கும் திருமால் தன்னை மாறிப் பிறந்தும் இரட்சகத்துவம் புரிதலைத் தமது கடமையாகப் பூண்டுள்ளான் என நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இதற்காகப் பகவான், எங்நின்றயோநியுமாய்ப் பிறக்கின்றான். மனிதரும் மற்றும் முற்றும் ஆய் மாயப்பிறவி பல எடுத்தருளுகின்றான். உயர்வற உயர்நலம் உடையவனாகிய பரமன், உலக சம்ரட்சணைக்காக அங்கு வைத்து இங்குப் பிறந்தருளுகையில் பிறப்பின் உயர்வு தாழ்வுகளை ஒரு சிறிதும் தான் கருதுவதிலன். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் வாக்கிற்கு இதனினும் சிறந்ததொரு சான்றில்லை என்னலாமன்றே!

மேற்சொல்லப்பட்டபடிப் பகவான் எடுத்திடும் திருவவதாரங்கள் பத்தினையும் நாம் கருதிப் பார்ப்போமானால் ஓர் உண்மை புலப்படும். அதாவது, மீன், ஆமை, கோலம், நரசிங்கம் என்கிற இந்த நான்கு திருவவதாரங்களும் மானிடத் தாயினிடமாகத் தோன்றியவை அல்ல என்பதும், ஐந்தாவதான வாமன அவதாரம் முதலே தாயுதரத்தினின்றும் தோன்றுவனவாம் என்பதும் ஆம். எனவே, பகவான், அயோநிசராகப் பிறத்தற்கும், தாய் வயிற்றிடமாகப் பிறத்தற்கும் வல்லமை உடையான் என்பது நம்மால் அறியப்படுதல் தக்கதாம். மேலும், மீன் முதலாகிய நான்கு திரு அவதாரங்களும், திருமறைகளை மீட்டற்கும், அமுதம் பிறப்பித்தற்கும், பூமியை மீட்டற்கும். அசுரவமிசத்துப் பக்தனை தனியொருவனைக் காத்தற்குமாகவே எடுக்கப்பட்டனவேயன்றி, மக்கட் சமுதாயத்தைக் காத்தற்பொருட்டாக அல்ல என்பதும் தெரியலாகும். ஐந்தாவதாகிய வாமன அவதாரம் முதலாகத்தான் மக்களினத்தாரின் நலங் கருதி எடுக்கப்பட்டவை என்பதும்

புலப்படலாகும். எனவே, மக்கட் சமுதாயத்துக்குப் பயன்படுமாறு திருமால் மேற்கொள்ளலுற்ற முதல் திருவவதாரம் வாமனனாகியதே எனல் தெள்ளிதாம். அன்றியும், இந்த ஒரே அவதாரத்திலே உடனுக்குடனான இரண்டு பிறப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையும் அறிகிறோம். இந்த இரண்டும் வடிவில் ஒன்றுக்கொன்று முரணானவை என்பதை நாமறிவோம் ஒன்று குறள் வடிவு; பிறிதொன்று திரிவிக்கிரமனாம் நெடியவடிவு. இந்த ஒரே அவதாரத்தில் இருவேறு விதமான பிறப்புக்களைத் திருமால் மேற்கொள்வதிலிருந்து, பரமன் அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்கவல்லவன் என்று நாம் தெரிந்துகொள்ளலாம். ஸ்ரீராமகிருஷ்ணாதி யவதாரங்கட்குப்பலவிதச் சிறப்புக்கள் உண்டென்பது உண்மையே. எனினும், மக்களின் உய்திக்கெனத் திருமால் முதற்கண் மேற்கொள்ளும் இந்த வாமன-திரிவிக்கிரம அவதாரங்கள் நமது சிந்தனையில் முதல் இடம் பெறவேண்டியுள்ளன என்பது உண்மையாம். குறள் வடிவு, காசிபருக்கு அதிதியிடமாகத் தோன்றியதாகும். ஆனால், திரிவிக்கிரம வடிவு தாயிடங்கொண்டதன்று. இதனாலும் இந்தத் திருவவதாரத்தின்போது பெருமான், முற்கூறப்பட்ட இருவிதமான பிறப்பு வகைகளையும் தான் மேற்கொள்ளும் வல்லமை உடையன் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளமை காணலாம்.

அதுவுமல்லாமல், மாபலி, பிரகலாதாழ்வானின் பேரனாகி உள்ளவனே யன்றித் திருமாலுக்குப் பகைவனும் அல்லன். தனது நாட்டினை அநீதியாக ஆண்டு கொடுமை செய்தவனும் அல்லன். அசுர இனத்தவனேயாயினும், பிற அசுரர்களைப் போல அயலவரைக் கொடுமைக்கு ஆளாக்கித் துயரப்படுத்தவுமில்லை. ஆகவே, மாபலியைத் துஷ்டனாகவும் பகைவனாகவும் கொண்டு திருமால் நேரிடையாக எதிர்ப்பதற்கும் இடமில்லையாயிற்று. என்றாலும், அடியார்கள் வேண்டுகோளின் தூண்டுதலால் தரும சங்கடமானதொரு நிலைமையைத் திருமால் இத்திருவவதார சந்தர்ப்பத்தில் சமாளித்தாக வேண்டிய அவசியத்துக்கு உள்ளாயினான். இப்படியெல்லாம் பற்பல மாதிரியான சூழ்நிலையில் இந்த வாமனத் திருவவதாரம் நிகழ்வுற்றதென்பதை நாம் நெஞ்சில் நினைத்துப் பார்க்க வேண்டும். "முறை நிரம்பா வகை" என்பது இளங்கோ அடிகள் கூற்றும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய இத்திருவவதாரம் நிகழ்தலுற்ற நாள் ஒரு புரட்டாசி மாதத்துச் சுக்கில பக்கத்துத் திருவோண நன்னாளேயாம். அதாவது, உத்திராட நாளின்பின் 'அபிசித்' என்று சோதிடர்கள் கணக்கிடும் ஒட்டு நாள் ஆகும். நமக்கு உத்திராடத்தின் பின் நாளான திருவோணம் அஃது என்பது தெளிவாம், ஆகவே, திருமால் தமக்குரிமையுடையதான திருவோண நாளிலேதான், மக்கட் சமுதாயத்துக்கு உய்தி புரிவதெனத் தான் மேற்கொள்ளலுற்ற முதல் பிறப்பான வாமனப் பிறப்பினை எடுத்து உலகத்தாருக்குத் தமக்குரிய நாளினை உறுதிப்படுத்திக் காட்டியுள்ளான் என நாம் தெரிதல் நன்றாம். கேரள நாட்டில் அந்நாட்டினர் இந்த நாளினை வெகு விமரிசையாகக் கொண்டாடுதல் இப்போதும் நிகழ்கின்றது பிரத்தியட்சம். இது விபவாவதார விஷயம் ஆகும். அர்ச்சாவதார மூர்த்தங்களுள் ஸ்ரீரங்கநாதர் முதலானவர்களுக்கு ரேவதி முதலான வேறு வேறு திருநக்ஷத்திரங்கள் பேசப்படுகின்றன. தமிழகத்தின் வடஎல்லை வடவேங்கடம் என்பது எல்லாத் தமிழ் நூல்களும் ஒருபடியாகக் கூறும் உண்மையாகும். சதுர்யுகங்களின் ஆரம்ப காலத்திலேயே திருவேங்கடம் நிலை நின்று நம்மனோர்க்குக் காட்சிதரும் மாட்சிபெற்றுள்ளது. ஸ்ரீவைகுந்தத்தின் எல்லா மாண்புகளையும் அடியார் பொருட்டாக இந்தத் தலத்திலே பகவான் ஏற்படுத்திக் கொண்டான் என்று புராணம் புகலும். அப்படிச் செய்யும்போது தமக்குரியதான திருவோண நல்நாளிலேதான் முதல் முதலாக இங்கு எழுந்தருளலானான் என்று கூறுவர். ஆதலால், அர்ச்சாவதார மகிமையாலும் திருமலை இந்த நாளினை நமக்கு நினைப்பூட்டி வழிபடச் செய்கின்றதாகும் என்னலாம். மேலும், திருமாலின் கண்டாவதாரர் எனப்படும் ஸ்ரீ வேதாந்த தேசிகரும் இவ்வாறான மகிமை கொண்ட திருவோணநல்நாளிலே தோன்றியருளியவரே யாவர்.

நிற்க, சிவபெருமானுக்குரிய நாள் திருவாதிரை என்பர். கடவுளர் இருவராக இருக்க முடியாது. ஹரிஹரன், தாணுமாலயன் முத

லான திருப்பெயர்களும், சைவ வைணவத் தோத்திரப் பாடல்களில்வரும் விஷயங்களும் இருவரையும் ஒருவராகவே சாற்றுகின்றன. அண்டங்களை ஆக்கியளித்து அழித்தலும், உயிர்களை மறைத்து அருளி உய்திப்படுத்து வதுமே ஆண்டவனின் செய்கை என்பது யாவர்க்கும் உடன்பாடாம். இந்தத் திருவிளை யாடலை நிகழ்த்துதற்கு முந்திய இறை நிலை எவராலும் உணர ஒண்ணுததாகும். இந்த மாதிரியான உணர முடியாத இறைநிலையே, உள் முகமாய்த் தனக்குள்தானே ஓர் அசை வினை மேற்கொண்டு ஆதிப்பிரானும், அணி மணிவண்ணனும், ஆதிப்பிரமனுமாகிப் படைத்தல் காத்தல் அழித்தல்களை நிகழ்த்து கின்றது. ஆதலால், இந்த மூன்று நிலைகளும் ஒன்றெனவேபடும். இதுபற்றியே, திருவாய் மொழி அந்தம், 'அரியை அயனை அரனை அலற்றி வீடுபெற்ற' என்கின்றது. திருமூலர் திருமந்திரமும் 'சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனுர்-பேதித்து உலகம் பிணங்குகின்றுர்களே' எனக் கூறிக் காட்டு கின்றது. படைத்தல் நமக்கு உதவும் தொழிலே. எனினும் படைக்கப்பட்ட பின் னர் நிகழ்வதான காத்தல் நமக்கு உய்தி பயக்கும் சீரிய தொழிலாகும். உய்தி பெரு தோரே அழிக்கப்படுதற்குரியராகின்றனர். மேற்கூறப்பட்ட இம்மூன்றனுள் உயிர்த் தொகைகளை உய்தி அடையச் செய்வதற்கு அவ்வுயிர்க்குயிராயும் இருக்க வேண்டியுள் ளது; புறத்தே வேருகவும் இருந்து நடத்தித் துணைபுரியவும் வேண்டியுள்ளது. இதனுலே இறைவன் அந்தர்யாமியாகவும் இருந்து கொண்டு, வெளியிலேயும் திருக்கோயில் களிலே நிறைந்து இருந்துகொண்டு நம்மைச் செலுத்தி நலமுறுவிக்கின்ருனவன். ஒரு யாசகனைக் காக்கக் கருதும் அரசன், தான் தன் வீரத்தால் பொருள்களை தன்பால் உண் டாக்கிக் கொள்ளுகிருன்; பிறகு தன்னு டைய அருளினுல் அந்த யாசகனுக்கு வழங்கி உதவுகிருன். ஆகவே, வீரமும் கொடையும் தான் ஒருவனுக்கு உதவும் பண்புகளாக உள்ளன என்பது போதரும். வீரத்தின் அறிகுறியாக உள்ளதே திருவாதிரையாகும். அருளின் அறிகுறியாக உள்ளதே திருவோ ணம் ஆகும். ஆருத்ரா, ச்ரோணம் முதலான சொற்களே இப்பொருட்களைப் புலன் செய் யும் நீர்மையனவாம். சூரியன் வேறு; அவ னுடைய ஒளி வேறு அல்ல. சூரியனே ஒளி; ஒளியே சூரியனும். பிரிக்க ஒண்ணுத ஒருமை யதே இவ்விரண்டும். கண்ணொளி சூரியனைக் காண்பது சூரியனொளியின் உதவிகொண்டே யாகும். சூரியனொளிதான் காணுங் கண்ணுக் குத் தன்னை உடைய சூரியனைக் காண்பிக்கின் றது. கண்ணுக்கு உள்ள காணும் தன்மை போல்வது நமது பக்தி. காட்டுந் தன்மை யுள்ள சூரியனொளி போல்வது இறைவன் திருவருள். கண்ணொளியும் சூரியனொளியும் ஒன்றுபடுங் காட்சிபோல்வதே இறைநிலைக் கலப்பு. "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பதன் கருத்து விளக்கம் இஃதேயாம், பார்த்தல் தொழில் நிகழ்ந்து கண்ணொளியையும் சூரியனொளியையும் ஒன்று படுத்துவது போலவே ஞான நிகழ்ச்சி நடைபெறுவது. பார்வையற்ற கண்ணைப் பற்றிப் பேசவேண்டுவதே இல்லையாம். இவை யெல்லாம் வைத்துக் கொண்டு பொதுபடப் பேசினுல், உணரவொண்ணுத இறைநிலையை அதன் திருவருளே இயக்கி உயிர்கட்கு உய்தி செய்கின்றதென்பது விளங்காமற் போகாது. விஷ்ணு என்னும் சொல், உள்ளும் புறம்பும் வியாபித்திருப்பதை உணர்த்துவதாம். அருள் என்பதுகாத்தலின் அடிப்படையாம். ஆகவே இறைநிலை உயிர்களினுள்ளும், பொருள்களி னுள்ளும், அவற்றின் புறத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் இயல்பினையும் – அவற்றை அருள்கொண்டு செலுத்தும் நிலையினையும் உடையதென்பது தேற்றமாம். இந்தத் திரு வருள் நீர்மையே திருமால் என்பதும், திரு வோணம் என்பதும் என நாம் ஊகித்தல் கூடும். சங்கரநாரயாண தத்துவமும் இங்கு நாம் கருதத்தக்கதாகும். இத்தகைய திருவருளை நாம் போற்றுவதே திருமால் வழிபாடும் திரு வோண விழாவும் ஆகும். அன்றியும், திரு வோண நக்ஷத்திரத்தின் அதிபதியாகும் கிரகம் சனி ஆகும். இந்தச் சனிநாள் திருமா லுக்குரிய நாளாகக் கருதப்படுகின்றது.

இப்போது வாமனுவதாரச் சிறப்பைக் கருதுவோம். அப்படிக் கருதும்போது புரட் டாசி—திருவோணம்—சனிக்கிழமை ஆகிய இவை உள்ளத்திற்கு வரும். வாமனுவதாரத் திலே திருமால் பிரமசாரிக்கோலம் பூண்டான். பிரமசாரி பிக்ஷையால் வாழ்பவர். ஆகை யினுல் தான், வாமனுவதார காலத்திலே அம் பிகை பிக்ஷையிட்டதாக வரலாறு கூறுகின்

றது. இதனாலேயே, புரட்டாசித் திங்கள் சனிக்கிழமை நாள் ஏற்போர்க்கும் இரப்போர்க்கும் உகந்த நாளாகக் கருதப்படுகின்றது. ஆதலால், நாம் யாவரும் இறைவனின் திருவருள் நாளாகிய திருவோணத்திலே திருமாலை வழிபட்டு அருளுக்குப் பாத்திரராவோமாக! அன்றியும் புரட்டாசிச் சனி நாளில் இயன்ற மட்டும் ஈகை புரிந்தும் திருவருளைப் பெறத் தகுதிப்பாடு அடைவோமாக! வேறுபாடு கருதாமை, தூய உணவு, நல் ஒழுக்கம், திருவருள் வழிபாடு, ஆகிய எல்லா நலங்களும் இத் திருவோண நாள் நம்மனோர்க்குத் தட்டாமல் தரும் சிறப்புடைத் தெனக் கருதுவோம். நக்ஷத்திரம் என்னும் சொல் அழிவின்மையை உணர்த்தும் திறத்ததாகும் என்பர் மேலோர். அழியாப் பெரும்பதமே வீடுபேறும். 'அந்தம் இல் இன்பத்து அழிவில் வீடு' என்பர் பரிமேலழகர். விரிப்பின் பெருகுமாதலினாலும், பலரும் நன்கு விரித்துணரக் கூடுமாதலினாலும் இந்தக் கட்டுரை கூடிய வரையில் சுருக்கமாக எழுத்திடப் பட்டதாகும். பிழை பொறுத்திடுக.

"நாள் செய்வது நல்லரும் செய்யார்"

"காலங் கருதி இருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்"

158334

செய்திகள்

திருவலிவலம் ஸ்ரீமனத்துணை நாதசுவாமி கோயில் மழையுண் கண்ணி வாரவழிபாட்டுக் குழுச் சார்பில் 24-9-59-ல் வலிவலம், தேசிகர் உயர்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. R. சுப்பிரமணிய பிள்ளை B,A.,L.T., அவர்கள் தலைமையில் அப்பள்ளி முதலாசிரியர் திரு. வை. பக்கிரிசாமி செட்டியார் B,A. (Hons) B. Ed. அவர்களால் பெரிய புராண விரிவுரை ஆற்றப்பட்டது. ஒவ்வொரு வியாழக் கிழமையும் பெரிய புராண விரிவுரை நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

இளையாத்தகுடி ஸ்ரீகைலாச நாதசுவாமி நித்திய கல்யாணி அம்மன் கோயில் நவராத்திரி விழா 3-10-59 முதல் 11-10-59 வரை சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி ஸ்ரீகாமாட்சியம்மன் உடன் கூடிய ஸ்ரீஏகாம்பரநாதர் கோயில் நவராத்திரி திருவிழா 2-10-59 முதல் 10-10-59 வரை சிறப்பாக நடைபெற்றது

விருதுநகர் ஸ்ரீசொக்கநாத சுவாமி கோயிலில் 2-10-59 முதல் 10-10-59 முடிய மேடி கோயில் அர்த்தஜாமக்கட்டளை அறங்காவலர் திரு, R. அரங்கசாமி நாயுடு, மாலைப்பேட்டை வியாபாரிகள் அபிவிருத்தி பஞ்சுக்கடை மகமை தரப்பார்களால் ரூ. 1,500 செலவில், நவராத்திரி கொலு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை, ஸ்ரீசென்னமல்லீசுவரர் ஸ்ரீசென்னகேசவப் பெருமாள் கோயிலில் 21-10-59 புதன் கிழமை மாலை 6 மணிக்கு வில்லிசை வேந்தர் திரு. S. பிச்சைகுட்டி அவர்கள் குழுவினரால் சீதா கல்யாணம் வில்லிசை கதாகாலட்சேபம் அறநிலைய ஆணையாளர் உயர்திரு, A. உத்தண்டராம பிள்ளை I. A. S. அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

திருநெல்லிக்காவல் ஸ்ரீநெல்லிவன நாதர் கோயிலில் 14-10-59 புதன்கிழமை இரவு $7\frac{1}{2}$ மணிக்கு மாயூரம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் அவர்களின் குழுவினரால் திவ்விய நாமபஜனை அபினயத்துடன் நடைபெற்றது.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

[காதிலுள்ள தோடுகள் ஆடவும், அணிகள் அசையவும், கூந்தல் அசையவும், கூந்தல் மாலையைச் சுற்றி வண்டுகள் சுழலவும், குளிர்ந்த நீராடி. ஞானசபையைப் பாடி, இறைவன் மறையாகவும் அதன் பொருளாகவும் இருக்கும் திறம்பாடி, அவன் ஒளிவடிவின் தன்மையைப் பாடி, அவன் கொன்றை மாலையையும் பாடி, அவன் ஆதி அந்தமான முறையையும் பாடி, அஞ்ஞானத்திலிருந்து நம்மை வேறுபடுத்திக் காத்த உமையம்மையின் திருவடி மாண்பையும் பாடி நீராடுவோமாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பற் றவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்காய் யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

[உங்கள் வீட்டுப் பின்புறமுள்ள தோட்டத்துக் குளத்தில் செங்கழுநீர் மலர்கள் அலர்ந்தன; ஆம்பல்கள் கூம்பின; காவியுடையணிந்த துறவியர் தங்கள் திருக்கோயிலில் திருவாராதநம் செய்யப் போகின்றனர்; எங்களை முன்வந்து எழுப்புவதாகப் பேசிய நாணமில்லாத பெண்ணே! எழுந்திராய்! சங்கு சக்கர மேந்திய திருக்கரங்களையுடைய தாமரைக் கண்ணனைப் பாடுவோமாக.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

விகாரி—கார்த்திகை

சைவம்

9உ—மெய்ப்பொருள் நாயனார்
10உ—ஆனாய நாயனார்
16உ—மூர்க்க நாயனார், சிறப்புலி நாயனார்
27உ—கணம்புல்ல நாயனார்

வைணவம்

27உ—திருமங்கையாழ்வார்
28உ—திருப்பாணாழ்வார்



சென்னிமலை ஆண்டவர் மலைக்கோயில்

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-2.